# முஹ்தஸர்

## அப்தில்லாஹ் அல்-ஹறரீ

(ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயம் அறிய வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய நூல்)

நூலாசிரியர்
அல்-அல்லாமதுல் முதபன்னின்
அப்துல்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்லாஹ்
(வபாத்: ஹிஜ்ரீ-1429, கி.பி.2008)

நூலின் பெயர் : முஹ்தஸர் அப்தில்லாஹ் அல்-ஹறரீ

நூலாசிரியர் பெயர் : அல்-அல்லாமதுல் முதபன்னின் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ

தமிழாக்கம் : இமாம் அல்-அஷ்அரீ அறபுக் கல்லூரி - கொழும்பு

பதிப்பு : முதலாவது

ஆண்டு : 1442 முஹர்றம் - 2020 செப்டம்பர்

பக்கங்கள் : 120

பிரதிகள் : 5000

வெளியீட்டு எண் : 07

வெளியீடு : இமாம் அல்-அஷ்அரீ அறபுக் கல்லூரி - கொழும்பு,
அல்-ஹிதாயா அறபுக் கல்லூரி - காத்தான்குடி.

தொடர்புகளுக்கு : 0772328686 - 0770779406



**நன்மையை நாடி இந்நூலை எவ்வித மாற்றமும் செய்யாது விநியோகிக்க அனுமதியுண்டு**

Darulfatwa
دار الفتوى
Islamic High Council of Australia
المجلس الإسلامي الأعلى في أستراليا
40 Hector Street Chester Hill NSW 2162 darulfatwa.org.au Tel: 02 9793 3330 Fax: 02 9793 3103

بسم الله الرحمن الرحيم

الحمد لله رب العالمين ، والصلاة والسلام على أشرف الأنبياء والمرسلين سيدنا محمد وعلى آله وصحبه أجمعين ، **وبعد :**

فإني اطلعت على هذا المختصر للعلامة الحافظ المحدث الأصولي الشيخ عبد الله الهرري الشيبي رحمه الله تعالى قد اشتمل على ضروريات علم الدين من الاعتقاد و مسائل فقهية من الطهارة والصلاه والصوم والزكاة والحج ، وشيء من المعاملات ، وبيان الواجبات القلبية ، وبيان المعاصي وغيرها من نفائس المسائل ، فجزاه الله عني وعن المسلمين خير الجزاء!

بعض إخواننا السريلانكيين قد ترجموا هذا المختصر إلى اللغة التاملية . الله تعالى يقبل جهدهم ويجعل ذلك في ميزان حسناتهم يوم لا ينفع مال ولا بنون إلا من أتى الله بقلب سليم .

فنصيحتي للمسلمين أن يقرأوا هذا المختصر – مختصر الشيخ عبد الله الهرري رحمه الله الكافل بعلم الدين الضروري – ويطالعوا فيه ، فإنه عظيم النفع لمن يريد أن يسلك درب الحق والهدى ، وهو يشفي العليل ، ويزيد القوة في اليقين ، وبالله التوفيق!

**محبكم**

**أمين عام دار الفتوى في أستراليا**

**أ.د/ سليم علوان الحسيني نسبا**

يوم الاثنين ٢٣ شوال ١٤٤١ الموافق ١٥-٦-٢٠٢٠

# அவுஸ்திரேலியா தாருல் பத்வாவின் பொதுச் செயலாளர் கலாநிதி அஷ்ஷைய்க் ஸலீம் உல்வான் அல் ஹுஸைனீ அவர்களின் அணிந்துரை

بسم الله الرحمن الرحيم

الحمد لله رب العالمين ، والصلاة والسلام على أشرف الأنبياء والمرسلين سيدنا محمد وعلى آله وصحبه أجمعين ، **وبعد** :

அல்-அல்லாமதுல் ஹாபிழுல் முஹத்திஸுல் உஸூலிய்யு அஷ்ஷைய்க் அப்துழ்ழாஹில் ஹறரீ அஷ்ஷைய்பீ றஹிமஹுழ்ழாஹு தஆலா அவர்களின் ‘‘முஹ்தஸர்’’ எனும் இந்நூலைப் பார்த்தேன். அது கொள்கைக் கோட்பாட்டிலும் மற்றும் சுத்தம், தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ், கொடுக்கல் வாங்கலின் சில சட்டம் உட்பட பிக்ஹ் தொடர்பான மஸ்அலாக்களிலும், உள்ளம்சார்ந்த கடமைகளை தெளிவு படுத்துவதிலும், பாவங்களைத் தெளிவுபடுத்துவதிலும் மேலும் அவைகளல்லாத பெறுமதிமிக்க பல மஸ்அலாக்களை தெளிவு படுத்துவதிலும் தீனின் அறிவில் அவசியமானவற்றைப் பொதிந் துள்ளது. எனவே அழ்ழாஹ் என் சார்பாகவும் மேலும் முஸ்லிம்களின் சார்பாகவும் சிறந்த கூலியை அவர்களுக்கு வழங்குவானாக!

இலங்கையைச்சார்ந்த எமது சில சகோதரர்கள் இம்முஹ்தஸரை தமிழ்மொழிக்கு மொழிபெயர்த்துள்ளனர். அழ்ழாஹு தஆலா அவர்களின் முயற்சியைக் கபூல் செய்து, ஈடேற்றமான உள்ளத்துடன் வருபவரைத் தவிர பொருளோ பிள்ளைகளோ பிரயோசனமளிக்காத நாளில் அதனை அவர்களின் நன்மைகளின் தராசிலே ஆக்கிவைப்பானாக!

ஆகையால் ‘‘முஹ்தஸருஷ் ஷைய்க் அப்தில்லாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அல் காபில் பிஇல்மித்தீனிழ் ழரூரீ’’ எனும் நூலை படிக்குமாறும் வாசிக்குமாறும் முஸ்லிம்களுக்கு நான் உபதேசம் செய்கின்றேன். ஏனேனில் அது உண்மை மற்றும் நேர்வழியில் செல்ல விரும்புபவருக்கு மிக பிரயோசமானதாகும். மேலும் அது நோயாளிக்கு நிவாரணி அளிப்பதுடன் யகீனில் பலத்தை அதிகரிக்கின்றது.

# அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மற்றும் ஷரீஆக் கவ்ன்ஸில் பத்வாக்குழு உறுப்பினர் அஷ்ஷைய்க் அமீனுத்தீன் றஷாதி அவர்களின் அணிந்துரை

بسم الله الرحمن الرحيم

ஜமாஅத்துக்கள், தரீக்காக்கள் எனும் வேறுபாடின்றி அனைத்து முஸ்லிம்களாலும் அறியப்பட வேண்டிய மார்க்க சட்டங்களில் மிக முக்கியமானவற்றில் பெரும்பாலானவற்றை ஒன்றிணைத்திருக்கும் இம் ''முபாறகான'' நூலிற்கு அணிந்துரை எழுதத் ''தவ்பீக்'' செய்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்! இதனுள் பொதிந்திருக்கும் முத்துக்களான அநேக மஸ்அலாக் களுக்குத்தான் (العلم الضروري) ''அவசிய அறிவு'' எனவும் ''பர்ளுஅய்ன்'' (فرض عين) எனவும் குறிப்பிடப்படுகின்றது. அவற்றையே (طلب العلم فريضة على كل مسلم) ''அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்'' எனும் ஹதீஸ் சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே இத்தலைப்பில் தொண்டு தொட்டுப் பலரும் பல நூற்களை கோர்வை செய்து வந்தார்கள். எனினும் அந் நூற்களில் பெரும்பாலானவை இஸ்லாத்தின் அனைத்துக் கோணங்களையும் உள்ளடக்கியவையாகப் பெற்றுக் கொள்ளப் படவில்லை. மற்றும் சில (العلم الضروري) ''அவசிய அறிவை'' உள்ளடக்கியதுடன் ''ஸுன்னஹ்''களையும், ஒழுக்கங்களையும் உள்ளடக்கியிருந்தன. எனவே கொள்கைக் கோட்பாடு மற்றும் சட்டதிட்டங்களில் அவசியம் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து கடைபிடிக்க வேண்டியவற்றையும், உடலுறுப்புக்களினால் ஏற்படும் பாவங்களைக் கட்டாயம் தெரிந்து அவற்றைத் தவிர்ந்திருக்க வேண்டியவற்றையும் மாத்திரம் ஒன்றிணைத்த ஒரு நூல் முஸ்லிம் சமுதாயத்திற்கே தேவைப்பட்டது. அதனையே அல்லாஹு தஆலா அல்-அல்லாமதுல் பகீஹுல் முஹத்திஸுல் முதபன்னின் அப்துல்லாஹில் ஹறரீ رحمه الله تعالى அவர்களுக்குப் பூர்த்தி செய்யத் ''தௌபீக்'' செய்தான்.

அறபு மொழியில் கோர்வை செய்யப்பட்ட இந்நூல் உலகில் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பல

முஸ்லிம்களுக்கும் பிரயோசனமளித்து வருகின்றது. எனவே இந்நூல் எமது தாய் மொழியான தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு தமிழ் மொழி பேசும் எம்மவருக்கும் பிரயோசனமாக அமைய வேண்டும் எனும் நோக்கில் ‘‘ஜாமியதுல் இமாமில் அஷ்அரீ’’ கலாபீடத்தைச் சார்ந்த உலமாப்பெருந்தகைகள் இதனைத் தமிழாக்கம் செய்துள்ளனர். அழ்ழாஹு தஆலா அவர்களின் முயற்சியை ஏற்று ஈருலகிலும் அவர்களுக்குப் பயன்மிக்கதாக ஆக்கியருள்வானாக! آمين

இந்நூலை மொழிபெயர்ப்பதிலும் அதனை சரிபார்ப்பதிலும் பங்கேற்கும் சந்தர்ப்பத்தை அழ்ழாஹு தஆலா பலவீனமான இவ்வடியேனுக்குத் தந்ததற்காக அவனுக்கு அதிகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அழ்ழாஹு தஆலா நம்மனைவருக்கும் நல்லமல்களைச் செய்ய அணுகூலமளித்து அவற்றை நம்மிடமிருந்து ஏற்றுக்கொள்வானாக! آمين

ஆக! பயன்மிக்க இந்நூல் முஸ்லிம்களின் அனைத்துத் தரப்பினருக்கும் - ஜமாஅத்துக்கள், தரீக்காக்கள் எனும் வேறுபாடின்றி - அவசியமானதாகும். ஏனெனில் ‘‘அவசிய அறிவு’’ என்பது அனைவருக்கும் அவசியமானதாகும். ஆகவே! இந்நூலின் மூலம் பயன் பெற்று அதிலுள்ளவற்றை அறிந்து அவற்றின் பிரகாரம் செயற்பட அழ்ழாஹு தஆலா நம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக! آمين يارب العالمين

وصلى الله وسلم على سيدنا محمد وعلى آله وصحبه أجمعين

இ:.து

محمد أمين الدين بن محمد زاهر عفا الله تعالى عنهما

٢٨/المحرم/١٤٤٢هـ - ١٦/٠٩/٢٠٢٠م

# இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

## அவர்களின் பிறப்பு:

இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் ‘‘ஹபஷா’’ (எதியோப்பியா)வில் ‘‘ஹறர்’’ எனும் ஊரில் ஹிஜ்ரீ 1327, கி.பி. 1910ல் பிறந்தார்கள்.

இவர் தனது பத்தாவது வயதை அண்மிக்கும் முன்னரே புனித குர்ஆனை மனனமிட்டார்கள். தன் சிறு வயதிலிருந்தே விளையாடுவது போன்ற விடயங்களில் தன் கவனத்தைச் செலுத்தாது, குர்ஆன் ஓதல் மற்றும் நூல்கள் வாசித்தல் போன்ற விடயங்களில் தன் நேரங்களைக் கழித்து வந்தார்கள்.

இமாம் அப்துழ்ழாஹ் அல்ஹழ்றமி என்ற ஷாபிஈ மத்ஹபில் பிரபல்யமிக்க அறிஞரின் ‘‘அல் முகத்திமதுல் ஹழ்ரமிய்யஹ்’’ (المقدمة الحضرمية) மற்றும் ‘‘அல்முஹ்தஸர்ஸ் ஸஹீர் பீமா லா புத்த லி குல்லி முஸ்லிமின் மின் ம.ீ.ரிபதிஹி’’ (المختصر الصغير فيما لا بد لكل مسلم من معرفته) ஆகிய நூற்களை அவரது தந்தை சிறுவயதிலேயே அவருக்கு கற்றுக் கொடுத்தார்கள். அழ்ழாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக!

பின்னர் இமாமவர்களுக்கு கல்வி கற்பதில் ஆர்வம் ஏற்பட்டது. தன் ஊர் மற்றும் அதனை அண்டிய ஊர்களிலுள்ள ஆலிம்களிடம் சென்று படிக்கலானார்கள். எனினும் ஹதீஸ் துறை சார்ந்த கல்வியிலேயே இமாமவர்கள் அதிக கவனம் செலுத்தி, (الصحاح الستة) ‘‘ஸிஹாஹுஸ் ஸித்தஹ்’’ என்றழைக்கப்படும் ஆறு கிரந்தங்களையும் இன்னும் இவைகளல்லாத வேறு சில ஹதீஸ் கிரந்தங் களையும் இஸ்னாதுடன் (அறிவிப்பாளர் வரிசையுடன்) மனனம் செய்தார்கள்.

இமாமவர்கள் தனது பதினெட்டாவது வயதை அடைய முன்னரே ஹதீஸை ரிவாயத் செய்யவும், பத்வா வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டார்கள்.

கிதாப்களை விளங்குவதிலும், மனனமிடுவதிலும், ஹதீஸ் கலை மற்றும் அறபு மொழி, குர்ஆன் விரிவுரை, வாரிசுரிமைச் சட்டம் போன்ற அனைத்திலும் ''ஹபஷா'', ''சோமாலியா'' போன்ற பகுதிகளில் அவர்களது தரத்தை யுடைவர்களில் சிறந்து விளங்கினார்கள். இஸ்லாமிய எந்தவொரு கலையையும் விட்டு வைக்கவில்லை என்று கூறும் அளவு அனைத்துக் கலையிலும் பாண்டித்தியம் பெற்றார்கள்.

**அவர்களுடைய குணாதிசயங்கள்:**

இமாம் அப்துழ்ழாஹ் அல்ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் மிகவும் பேணுதல் மிக்கவராகக் காணப்பட்டார்கள். உபதேசம் செய்ய முன்னரே தன்னடத்தையால் மக்களுக்கு ஒழுக்கத்தைப் போதித்தார்கள். மற்றும் சிறியவர்களுடனும், பெரியவர்களுடனும் பணிவாக நடந்து கொண்டார்கள்.

திக்ர், தொழுகை மற்றும் ஏனைய வணக்க வழிபாடுகளில் அதிகமாக ஈடுபடக்கூடியவர்களாக இருந்தார் கள். இவர்களுடைய இரவு நேர நீண்ட ஸுஜூதைக் கண்டு இவர்கள் இறந்துவிட்டார்களோ! என்று அவர்களது தாய் -அழ்ழாஹ் அவர்களைப் பொருந்திக்கொள்வானாக- அச்சம் கொள்ளுமளவு மிக அதிக நேரம் ஸுஜூதில் இருப்பார்கள். அப்போது இமாமவர்களது தாய் இமாமவர்களின் மூச்சை அறிந்து கொள்ள அவர்களது நெஞ்சுப் பக்கமாக தன் காதை வைத்துப் பார்ப்பார்கள். பின்னர் அவர்கள் உறங்கி எழுந்து பார்க்கும் போதும் தொழுது கொண்டே இருப்பார்கள். எனவே தாயவர்கள் இரவுணவு கொண்டு வந்து வைத்து விட்டு பின்பு உறங்குவார்கள். மேலும் சூரியன் உதித்த பின்பும் அவர்கள் இமாமவர்களை உணவை உண்ணாதவராக தனது பாட மீட்டல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களாகவே காண்பார்கள்.

மேலும் அவர்கள் நல்லுள்ளம் கொண்டவர்களாகவும், பற்றற்றவர்களாகவும் காணப்பட்டார்கள். சுமார் இருபது வருடங்களாக தயிர் மற்றும் ரொட்டியை மட்டுமே சாப்பிட்டு வந்தார்கள். இன்ப வாழ்க்கையை இலக்காகக் கொண்ட வர்களாக ஒருபோதும் அவர்கள் இருந்ததில்லை. மாறாக அழ்ழாஹ்வின் திருப்பொருத்தத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இதனால்தான் சமூகம் அவரை பெரிதும் விரும்பியது. மேலும் இமாமவர்கள் ஏதாவது ஒரு வீட்டிற்கு வந்தால் அந்த வீட்டாரின் குடும்பமும், அண்டை வீட்டாரும், அவர்களின் சிறுவர்கள் உட்பட அனைவரும் அவரை சூழ ஒன்று கூடுவார்கள். ஒரு தடவை அவர்களின் நாட்டின் அரசன் அவர்களை சிறை பிடித்தபோது ஹறர் வாசிகள் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியே வந்து, ‘‘அப்துழ்ழாஹ் அல்ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களை விடுவிக்கும் வரை நாங்கள் பாதைகளில்தான் தூங்குவோம்’’ எனப் போராட்டம் செய்யவே இமாமவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

தன்னுடைய எல்லா நேரங்களையும் கற்றல், கற்பித்தல், உபதேசித்தல், வழிகாட்டல், வணக்க வழிபாடு புரிதல் போன்றவற்றிலே ஈடுபடுத்துபவராகவே காணப்பட்டார் கள். மேலும் அவர்கள் தனது தலையை தாழ்த்தியவராகவும், தன்னை சூழ நடக்கக்கூடியவற்றைக் கண்டுகொள்ளா மலிருக்க தலையை மறைக்க போடப்பட்டிருக்கும் தலைப் பாகையினால் முகத்தில் ஒரு பகுதியை மறைத்தவராகவும் பாதையில் நடந்து செல்லக்கூடியவராக இருந்ததார்கள். இன்னும் குறைவாகத் தூங்கக் கூடியவர்களாகவும், அதிக நேரத்தை கிதாப்களுடன் கழிக்கக்கூடியவர்களாகவும், அழ்ழாஹ்வை மிகவும் அறிந்தவர்களாகவும், குர்ஆன், சுன்னாவைப் பற்றிப் பிடித்தவர்களாகவும், புத்திக் கூர்மை யுடையவர்களாகவும், பலமான, தெளிவான ஆதாரங்களைக் கொண்டு கொள்கையை நிலைநாட்டக் கூடியவர்களாகவும், ஹிக்மத்துடன் வேலைகளை அந்தந்த நேரங்களில் செய்யக் கூடியவர்களாகவும், அவர்களுக்கு கெடுதி இழைத்தவர்களை மன்னிக்கக்கூடிய நற்குணம் கொண்டவர்களாகவும்

இருந்தார்கள். மேலும் தன் தனிப்பட்ட விடயங்களுக்காக யார் மீதும் கோபம் கொள்ளாது மார்க்கத்திற்கு மாற்றமாக செயல்படுவோர் மீதே கோபப்படக்கூடியவர்களாக இருந்தார்கள்.

ஒரு மனிதர் ஷைக் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களுடைய வீட்டிற்கு வந்து அவர்களுடைய பாடங்களில் கலந்து கொள்பவராக இருந்தார். ஆயினும் அவர் அவருடைய சில நண்பர்களுக்காக ஷைக் அவர்களை எதிர்த்து பேசக் கூடியவராகவும் இருந்தார். இதையறிந்த ஷைக் அவர்களுடைய சில மாணவர்கள் ‘‘இன்னார் ஒரு கிணற்றில் நீர் அருந்தி அதே கிணற்றில் கல்லெறியக் கூடியவரைப் போன்றவராக இருக்கிறார்’’ என்று சொன்னார்கள். அதற்கு ஷைக் அவர்கள் ‘‘முக்கியமென்ன வெனில் அவர் நீர் அருந்துவதே’’ எனக் கூறினார்கள். அதாவது மார்க்கத்தையும் மறுமையில் அவரை வெற்றி பெறச் செய்யக் கூடியவற்றையும் கற்றுவிட்டார்.

அதே போன்று ஷைக் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் மஸ்ஜிதில் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு மனிதர் ஷைக் அவர்களுடைய நெருக்கத்தைப் பெற்றுக் கொள்ளும் வரை தொடர்ச்சியாகப் பாடத்திற்கு சமுகமளிப்பது போல் காட்டிக் கொண்டிருந்தார். பின்பு ஷைக் அவர்களின் கைக் கடிகாரத்தைத் திருடிவிட்டார். அம்மஜ்லிஸில் இருந்த ஒருவர் அங்கிருந்து அவரை விரட்டி விட நாடினார். அப்போது ஷைக் றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் அவரை மன்னித்துவிட்டு, ‘‘நாம் அவரை விரட்டிவிட்டால் அவர் எங்கு செல்வார்?! சில வேளை அவர் வழிகேடர் களிடத்தில் சென்றுவிடலாம்’’ எனக் கூறினார்கள்.

மேலும் ஷைக் அவர்கள் மென்மையான உள்ளம் உடையவர்களாகவும், அவர்களுடைய பெற்றோர்களுக்கு - அவ்விருவரையும் அழ்ழாஹ் மன்னிப்பானாக! - உபகாரம் செய்யக் கூடியவர்களாகவும், தனது தாயிற்கு பணிவிடை செய்யக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். மற்றும் தான்

மார்க்கத்தைக் கற்று, கற்றுக் கொடுப்பதுடன் தன் குடும்பத்தினருக்கு உதவுபவர்களாகவும் இருந்தார்கள்.

காலையில் நீரூற்றிலிருந்து நீரெடுக்கும் மக்களுக்கு நெருக்கடியுண்டாகாமல் இருப்பதற்காக வேண்டி ஷைக் அவர்கள் தனது வீட்டை விட்டும் தொலைவிலுள்ள அந்நீரூற்றிற்கு இரவுப் பொழுதிலே கழுதைப்புலிகளிருக்கும் அப்பகுதியால் சென்று தண்ணீர் குடத்தை நிரப்பிக் கொண்டு வருவார்கள். பின்பு ழுஹாத் தொழுகைக்குப்பின் பாடத்தை ஆரம்பிக்கும் வரை தொடர்ந்தும் கிதாபை மீட்டுவதில் ஈடுபட்டுக்கொண்டே இருப்பார்கள். பின்னர் கற்பித்தலில் ஈடுபடுவார்கள். பின்பு ஜும்ஆ மஸ்ஜிதிற்கு சென்று அஸ்ர் தொழுகையிலிருந்து இஷா தொழுகை வரை கற்றுக் கொடுப்பார்கள். பின்பு வீட்டிற்கு வந்து தனது தாயாருக்கு பணிவிடை செய்வார்கள். மேலும் தனது தாய்க்கு முன்னால் பேசாமல் தலை குனிந்து அமைதியாக உட்காருவார்கள். தாய் அவர்களுக்கு அனுமதியளிக்காமல் அவர்களுக்கு முன்னால் ஒருபோதும் அமரவேமாட்டார்கள். அவர்களின் தாயுமோ அவர்களுக்காகப் பிரார்த்திப்பார்கள்.

ஒரு தடவை ஷைக் அவர்கள் தன் ஊரை விட்டுவிட்டுச் சென்ற பின் சில வருடங்கள் கழித்து ஹஜ்ஜுடைய காலத்திலே க.்.பாவிற்கு முன்னால் தனது தாயை சந்தித்தார்கள். அவர்களுக்கு சலாம் கூறி அவர்களுடைய இரு கரங்களையும் முத்தமிட்டார்கள். பின்பு தனது தாய் தன் உறவினர்களுடன் உட்கார்ந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். என்றாலும் ஷைக் றஹிமஹுல்ழாஹ் அவர்கள் நின்ற வண்ணம் இருப்பதை பார்த்த அவர்களது தாய் ஆச்சரியத்துடன் ‘‘என் மகனே! அமருங்கள், அப்துல்ழாஹ்வே! அமருங்கள்’’ என்று கூறும் வரைக்கும் தனது தாயக்கருகாமையில் நின்றுகொண்டேயிருந்தார்கள்.

மேலும் ஷைக் அப்துல்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுல்ழாஹ் அவர்களை விட்டும் மக்களை தூரப் படுத்துவதற்காக பித்அத்காரர்களும், வழிகெட்ட பிரிவினர் களும் அவர்களுக்கெதிராக பொய்களையும், வதந்திகளை

யும் சொல்லிக் குவித்தும் ஷைக் அவர்கள் மார்க்கத்திற்கு முரணாக நடக்கக்கூடியவர்களைக் கடுமையாக எச்சரிக்கக் கூடியவர்களாகவும் அழ்ழாஹ்வுடைய விடயத்தில் பழிக்கக்கூடியவர்களின் பழிப்புக்குத் தயங்காது, நல்லதை ஏவி, தீயதைத் தடுக்கும் விடயத்தில் தீவிரக் கவனம் செலுத்தக்கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

## அவர்களின் கல்விக்கான பயணங்களும் மற்றும் கல்வியைக் கற்பித்தலும்:

இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுஃழ்ழாஹ் அவர்கள் அவர்களுடைய ஊர் மற்றும் அதனை அண்மித்த ஊர்களிலுள்ள அறிஞர்களிடத்தில் கற்றுக்கொண்டதைப் போதுமாக்கிக் கொள்ளாமல் ‘‘எதியோப்பியா’’ மற்றும் ‘‘சோமாலியா’’வின் பகுதிகளில் மார்க்க அறிவிற்காக வேண்டி சுற்றித்திரிந்தார்கள். இவ்விடயத்தில் அவர்களுக்கு பல பிரயாணங்கள் உள்ளன. அவற்றில் அவர்கள் பல கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டார்கள். அவ்வாறுதான் அவர்கள் யாராவதோர் ஆலிம் எங்காவது ஓரிடத்தில் உள்ளார் என்று கேள்விப்பட்டால் அவரிடத்தில் பிரயோசனத்தை அடைய வேண்டும் என்ற நோக்கில் எவ்வித சிரமமும்பாராது பயணங்களை மேற்கொள்ளக்கூடியவர் களாக இருந்தார்கள். இதுவே ஸலபுஸ் ஸாலிஹீன்களுடைய வழமையாகவும் இருந்தது.

மேலும் அவர்களிடம் காணப்பட்ட புத்திக் கூர்மையும் மனனசக்தியும் ஷாபிஈ மத்ஹபுடைய சட்டங்களையும் அடிப்படைகளையும் அதிலுள்ள கருத்து வேற்றுமைகளையும் திறம்பட கற்பதற்கு மிக உதவியாக இருந்தது. மட்டுமல் லாமல் மற்றைய மூன்று மத்ஹப்களுடைய சட்டங்களையும், அடிப்படைகளையும் திறமையாகக் கற்பதற்கும் வழி வகுத்தது. ஆகையால் அவர்களின் பக்கம் விரல்களால் சுட்டிக்காட்டப்படும் அளவுக்கும், ‘‘எதியோப்பியா’’ மற்றும் ‘‘சோமாலியா’’வின் தூரப் பகுதிகளிலிருந்து மக்கள் அவர்களை நாடி பயணங்கள் மேற்கொள்ளும் அளவுக்கும் அவர்களின் திறமை காணப்பட்டது. எனவே அவர்களின்

ஊராகிய “ஹறர்” மற்றும் அதனைய அண்டிய பகுதிகளின் மார்க்கத் தீர்ப்பு வழங்கும் பொறுப்பு அவர்களுக்கு சாட்டப்பட்டது.

மேலும் அவர்களுடைய வாலிப பருவத்திலே மக்களுக்கு ஈமானையும், இஸ்லாமிய சட்டங்களையும் கற்றுக் கொடுப்பதற்காக வேண்டி ஊருராக கால்நடையாகச் சுற்றித்திரிந்தார்கள். சில சமயம் வீட்டில் இருந்து சென்ற அவர்கள் ஒரு வருடம் கழித்து, அவர்களுடைய தாயுமோ தன் மகன் இறந்து விட்டார் என எண்ணி வருந்தும் காலமளவு கழிந்ததன் பின் வீட்டிற்கு மீண்டு வருபவர்களாகவும் இருந்தார்கள்.

சுமாராக ஹிஜ்ரீ 1369 கி.பி. 1949 களில் அதிகமான உலமாக்கள் கொலை செய்யப்பட்டுவந்தபோது அரசன் அவர்களையும் பகைத்ததை அறிந்த இமாமவர்கள் தனது ஊருக்கு பிரச்சினைகள் வரக்கூடுமென அஞ்சி, மக்காவிற்கு சென்றுவிட்டார்கள். அங்கே ஹஜ்ஜும் செய்தார்கள். அங்கே அஷ்-ஷைக் அல்ஆலிம் அஸ்ஸைய்யித் அல்அலவி அல்மாலிகி றஹிமஹுல்லாஹ் போன்ற மக்காவின் பல ஆலிம்களுடன் அறிமுகமானார்கள். பின்பு மக்காவிலிருந்து மதீனாவிற்கு பயணத்தை மேற்கொண்டு, அங்கும் சில உலமாக்களுடன் அறிமுகமானார்கள்.

பின்னர் المحدث عبد القادر الشلبي அல்-முஹத்திஸ் அப்துல் காதிர் ஷல்பிஈ என்பவரின் மாணவரான المحدث إبراهيم الختني அஷ்-ஷைக் அல் முஹத்திஸ் இப்றாஹீம் அல் கதனி என்பவருடன் தோழமை கொண்டார்கள். பின்பு சில காலம் மதீனாவை அண்டியவராக வசித்து வந்தார்கள். அதன் பின் பலஸ்தீனிலுள்ள பைதுல் முகத்தஸ் என்ற இடத்திற்கு ஹி 1370 கி.பி. 1950ம் ஆண்டு சென்றார்கள். அதன் பின் அங்கிருந்து டமஸ்கஸிற்கு சென்றார்கள். டமஸ்கஸ் நகர மக்களும் அவர்களை வரவேற்றார்கள். இது ஷாம் தேச முஹத்திஸான அஷ்-ஷைக் பத்ருத்தீன் அல்-ஹஸனி றஹிமஹுல்லாஹ் அவர்களுடைய மரணத்தின் பின்னராகும்.

பின்னர் “கைமரிய்யஹ்” என்ற இடத்திலுள்ள “ஜாமிஉல் கத்தாதில்” தங்கினார்கள். அவர்களுடைய புகழ் அங்கு பரவியது. ஷாம் தேசத்து ஆலிம்களும் அவர் களுடைய மாணவர்களும் இவர்களிடமிருந்து பிரயோசனம் பெற வந்துசென்றதுடன் அவர்களின் சிறப்புக்கு சான்றுபகர்ந்து அவர்களின் இல்மையும் ஏற்றுக் கொண்டார் கள். எனவே ஷாம் தேசத்தில் - “கலீபதுஷ் ஷைய்க் பத்ரித்தீன் அல்ஹஸனீ” خليفة الشيخ بدر الدين الحسني – “அஷ்ஷைய்க் பத்ருத்தீன் அல்ஹஸனீ றஹிமஹுல்லாஹ் அவர்களின் பிரதிநிதி”யெனவும், - “முஹத்திஸுத் தியாரிஷ் ஷாமிய்யஹ்” محدث الديار الشامية – “ஷாம் தேசத்து முஹத்திஸ்” எனவும் பிரபல்யம் பெற்றார்கள். மேலும் அவர்கள் ஷாம் தேசத்து ஊர்களான திமஷ்க், பைரூத், ஹிம்ஸ், ஹலப், ஹமாத், போன்ற சிரியா, லெபனான் நகரங்களுக்கு சென்றுவருபவர் களாக இருந்தார்கள். இறுதியாக பைரூத்தில் குடியேறினார் கள்.

## ஷைக் அவர்களுடைய ஆசிரியர்கள்:

ஆரம்பத்தில் அவரது தந்தையாகிய محمد بن يوسف முஹம்மத் இப்னு யூஸுப் அவர்களிடம் கல்வியைக் கற்றார்கள். மேலும் الشيخ العالم علي شريف அஷ்ஷைய்க் அல் ஆலிம் அலீ ஷரீப் அவர்களிடம் தஜ்வீத், தர்தீல் மற்றும் ஹிப்ழாகக் குர்ஆனையும் இன்னும் அகீதாவுடைய அறிவையும் எடுத்ததோடு ஷாபிஈ சட்டக்கலையையும், அறபு இலக்கணத்தையும் العالم النحرير الشيخ الولي محمد بن عبد السلام الهرري அஷ்ஷைய்க் அல்வலிய்யு அல்ஆலிம் முஹம்மத் இப்னு அப்திஸ்ஸலாம் அல்ஹறரீ அவர்களிடமும் கற்றுக் கொண்டார்கள். மேலும் الشيخ أحمد بن النقيب الشافعي அஷ்ஷைய்க் அஹ்மத் இப்னு அன்நகீபுஷ் ஷாபிஈ அவர்களுக்குரிய “உம்த துஸ் ஸாலிக் வஉத்ததுன் நாஸிக்” عمدة السالك وعدة الناسك என்ற நூலை الشيخ إبراهيم بن أبي الغيث الهرري அஷ்ஷைய்க் இப்றாஹீம் இப்னு அபில் கைஸ் அல்ஹறரீ அவர்களிடமும், மேலும் அறபு இலக்கணம், சொல்லிலக்கணம் மற்றும்

இலக்கியம் ஆகியவற்றை الشيخ الصالح أحمد الضريرالملقب بالبصير அஷ்ஷையக் அஸ்ஸாலிஹ் அஹ்மத் அழ்ழரீர் அவர் களிடமும் படித்துக்கொண்டார்கள். الشيخ بشرى كاروكي அஷ் ஷைய்க் புஷ்றா காரூகி அவர்களிடம் (அல் அரூழ் வல்கவாபீ علم العروض والقوافي யாப்பு இலக்கணம் எனும்) செய்யுள் அமைப்பியலையும் கற்றுக்கொண்டார்கள். மேலும் இமாமவர்கள் மதீனாவிலே الشيخ المحدث محمد علي أعظم الصديقي البكري الهندي الأصل ثم المدني الحنفي அஷ்ஷைகுல் முஹத்திஸ் முஹம்மத் அலீ அ.:.லம் அஸ்ஸித்தீகீ அல் பக்ரீ அல் ஹனபீ அவர்களின் தோழமையைப் பெற்றார்கள். மேலும் ஷாம் தேசத்திலுள்ள பல அறிஞர்களிடமும் பல கலைகளைப் கற்றிருக்கிறார்கள். இவர்களல்லாத இன்னும் பல ஆசிரியர் களும் அவர்களுக்கு உள்ளனர். அழ்ழாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

**அவர்களைப் பற்றிய உலமாக்களின் புகழாரங்கள்:**

இமாம் அப்துழ்ழாஹ் அல்ஹறரீ அவர்களை அதிகமான உலமாக்கள் புகழ்ந்துள்ளார்கள். அவர்களில் சிலர்:

**அஷ்ஷைஹ் இஸ்ஸுத்தீன் அஷ்ஷாபிஈ அன் நக்ஷபன்தீ அவர்களும் மற்றும் அவர்களின் சகோதரர் அஷ்ஷைக் அலாஉத்தீன் றஹிமஹுமழ்ழாஹ் அவர்களும்.**

அஷ்ஷைக் இஸ்ஸுத்தீன் அவர்கள் கூறினார்கள்: ‘‘நானுமோ எனது சிறு பராயத்தில் எனது சகோதரர் அஷ்ஷைக் அலாவுத்தீன் அவர்களுடன் இருந்தேன். அவருமோ என்னை அஷ்ஷைஹ் அப்துழ்ழாஹ் அல்ஹறரீ அவர்களிடம் அழைத்துச் சென்று ‘‘இவர்கள்தான் அல்-முஹத்திஸ் அல்-பகீஹ் அல்-அல்லாமஹ் அஷ்ஷைக் அப்துழ்ழாஹ் அல் ஹபஷீ ஆவார்கள் அவர்களிடம் சென்று அவர்களின் கையை முத்தமிடுவீராக’’ எனக் கூறினார்கள். நானும் அவ்வாறே செய்தேன்.

மேலும் அஷ்ஷைக் இஸ்ஸுத்தீன் அவர்கள் லெபனானிலுள்ள அவர்களுடைய ஜமாஅத்தைச் சார்ந்தவர் களுக்கு ‘‘நீங்கள் மார்க்க சம்மந்தமாக ஏதேனும் கேட்பதாக இருந்தால் என்னிடத்தில் வராதீர்கள். மாறாக அஷ்ஷைஹ் அப்துழ்ழாஹ்விடம் செல்லுங்கள்’’ எனக் கூறினார்கள்.

**திமஷ்கிலுள்ள மஸ்ஜிதுல் உமவியின் இமாம் மற்றும் அதன் நிர்வாகியாகிய அஷ்ஷைக் அப்துர்றாஸிக் அல்ஹலபி றஹிமஹுழ்ழாஹ் அவர்கள்.**

‘‘திமஸ்கிலிருந்து மக்காவிற்கும் அங்கிருந்து திமஷ்கிற்கும் நாம் ஷைக் அப்துழ்ழாஹ் அல்ஹறரீயுடன் ஹஜ் பயணம் மேற்கொண்ட போது அவர்களிடம் பேணுதலைத் தவிர வேறு எதனையும் நாம் காணவில்லை’’ எனக் கூறினார்கள்.

**அஷ்ஷைக் உஸ்மான் ஸிறாஜுத்தீன் றஹிமஹுமழ்ழாஹ் அவர்கள்.**

இமாம் ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் மாணவர் ஒருவரிடத்தில் ‘‘அஷ்ஷைஹ் அப்துழ்ழாஹ் அவர்களுக்கு ஸலாம் கூறியதாக கூறுமாரும், நான் அவர்களை நேசிக்கின்றேன் என்றும் மேலும் எனக்காக பிரார்த்திக்கு மாறும் அவர்களிடம் கூறுங்கள்’’ எனக்கூறிவிட்டு ‘‘அஷ்ஷைக் அப்துழ்ழாஹ் அவர்களைப் போன்று அறபுலகிலும், இஸ்லாமிய உலகிலும் யாரும் இல்லை’’ என்றார்கள்.

இன்னும் அவர்களைப் புகழ்ந்தவர்களில் நின்றுமுள்ள வர்கள்தான்:

- **சிரியாவின் முப்தியான அஷ்ஷைக் அபுல்யஸ்ர் ஆபிதீன் அவர்கள்.**
- **அல்அல்லாமதுல் முதபன்னின் அப்துழ்ழாஹிப்னுஸ் ஸித்தீக் அல்குமாரீ அவர்கள்.**
- **அல்அல்லாமஹ் அப்துல் அஸீஸ் இப்னு ஸித்தீக் அல்குமாரீ அவர்கள்.**

- **முஸ்னிதுல் ஆலம் ஷைகுல் ஹதீஸி வல் இஸ்னாதி முஹம்மத் யாஸீன் அல்பாதானீ அவர்கள்.**
- **அல் முஹத்திஸுல் கபீர் அல்அல்லாமஹ் ஹபீபுர் றஹ்மான் அல்அ.ஃழமீ அவர்கள்.**
- **ஷைகுல் ஹதீஸ் அல்அல்லாமஹ் முஹம்மத் ஸகரிய்யா அல்கான்தஹ்லவீ அவர்கள்.**

## ஷைக் அவர்களின் பைரூத் வருகை:

ஷைக் அவர்கள் ஹிஜ்ரீ 1370, கி.பி. 1950ல் பைரூத்திற்கு வந்தார்கள். பின்பு ஷைக் காழீ முஹ்யித்தீன் அல்-அஜ்ஊஸ் இன்னும் அஷ்ஷைக் அல்முஸ்தஷார் முஹம்மத் அஷ்ஷரீப் போன்ற பைரூத்தின் மூத்த ஷைக் மார்கள் அவர்களை விருந்தாளியாக எடுத்துக் கொண்டார் கள். மேலும் அக்கார் என்ற இடத்தின் முப்தி பஹாஉத்தீன் அல்கைலானி அவர்கள் மேலும் அல் பஸ்தல் பௌகா ஜுமுஆ மஸ்ஜிதின் இமாம் அஷ்ஷைக் அப்துல் வஹ்ஹாப் அல்-பூதாரி அவர்கள் மேலும் புர்ஜ் அபீ ஹைதர் ஜுமுஅஹ் மஸ்ஜிதின் முஅத்தினும் இமாமுமான அஷ்ஷைக் அஹ்மத் இஸ்கன்தரானி போன்ற உலமாக்கள் அஷ்ஷைக் முஹம்மத் அஷ்ஷரீப் அவர்களின் வீட்டிலே இணைந்து, ஷைக் அவர்களைப் பற்றிப்பிடித்து அவர்களிடத்திலிருந்து பிரயோசனமும் கண்டு கொண்டார்கள். இன்னும் இவர்கள் தவிர பலர் உதாரணமாக முன்னால் பத்வாக் குழுவின் தலைவர் அஷ்-ஷைக் முக்தார் அல்-அலாலி அவர்கள் ஷைக் அவர்களின் சிறப்பையும் அறிவின் விசாலத்தையும் உறுதிப்படுத்தி தாருல் பத்வாவின் மூலம் பைரூத்திலுள்ள பள்ளிவாயல்களில் மார்க்கரீதியான மஜ்லிஸ்களை நடாத்துவதற்கு எழுத்து மூல சான்றை வழங்கினார்கள். அதே போன்று ஹிஜ்ரி 1389, கி.பி. 1969ல் அப்போது லெபனானில் இருந்த அல்அஸ்ஹர் கலாபீடத்தின் நிர்வாகியின் வேண்டுகோளுக்கிணங்க அல்அஸ்ஹர் மாணவர்களுக்கு அகீதஹ் தொடர்பான ஒரு கருத்தரங்கையும் நடத்தினார்கள்.

## இமாமவர்களின் தஸவ்வுப் பயணம்:

ஷைக் அவர்கள் இஸ்லாமிய அறிவுகள் பலவற்றில் ஒளிவீசும் தீபமாகவும், தூணாகவும் இருந்தது போலவே ஸூபித்துவ துறையிலும் முன்னோடியாகத் திகழ்ந்தார்கள். இரவு வணக்கங்கள், பணிவு, சகிப்புத்தன்மை, பொறுமை, தாழ்வு, அர்ப்பணிப்பு, உலகப்பற்று போன்ற ஸூபி மகான்களின் அதி உன்னத பண்புகளுடன் மிளிர்ந்தார்கள். இஸ்லாமிய அகீதாவை கூடுதல் கவனம் செலுத்தி கற்பித்ததுடன், தரீக்கஹ் விழுமியங்களையும், ஸூபி மகான்களின் வழிகாட்டல்களையும் வழங்கி தம் மாணவர் களையும், முரீதுகளையும் நன்நெறிப்படுத்தும் ஷைய்காகவும் விளங்கினார்கள். அவர்கள் ‘‘காதிரிய்யஹ்’’ மற்றும் ‘‘ரிபாயிய்யஹ்’’ தரீக்கஹ்களின் ஷைய்காக இஜாஸா பெற்றிருந்ததுடன் அத்தரீக்கஹ்களை உயிர்ப்பித்த ஞான குருவாகவும் திகழ்ந்தார்கள். மேலும் ஏனைய தரீக்கஹ் களிலும் இஜாஸா பெற்றிருந்தார்கள். பல கராமத்துகளை உடைய பெரும் வலிய்யுழ்ழாஹ்வாகவும், வலிமார்கள் பலரை உருவாக்கிய ஒரு பெருந்தகையாகவும் திகழ்ந்தார் கள்.

## அவர்களுடைய மரணம்:

இமாம் அப்துழ்ழாஹ் அல்ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களுக்கு நோய் கடுமையானது. ஆகையால் அது அவர்களை சில மாதங்களாக படுக்கையில் ஆக்கியது. அப்போது கூட அவர்கள் அகீதா பற்றியும் வழிகேடான சிந்தனைகளை எச்சரிப்பதையும் விடாது தன்னை சந்திக்க வருபவர்களிடமெல்லாம் நினைவூட்டிக்கொண்டே இருப்பார் கள். அவர்கள் ஹிஜ்ரீ 1429, கி.பி. 2008ம் ஆண்டு ரமழான் மாதம் இரண்டாம் நாள் செவ்வாய் கிழமை பஜ்ருடைய நேரத்தில் மரணித்தார்கள். அவர்கள் பைரூத்திலே அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய கப்றரையை இன்றும் மக்கள் பறகத் பெறும் நோக்கில் தரிசித்து வருகின்றனர்.

அழ்ழாஹ் அவர்களது ஹித்மாத்களைப் பொருந்திக் கொண்டு, மேலான பிர்தௌஸை அவர்களுக்குக் கூலியாக வழங்குவானாக!

## ஷைக் அவர்களின் நூற்கள்:

மக்களின் நம்பிக்கைக் கோட்பாட்டை சீர் செய்தல், மார்க்கத்திற்கு முரணானவர்களை எதிர்த்தல், வழிகெட்ட பித்அத்வாதிகளின் பித்னாக்களை அடக்குதல் போன்றவற்றில் ஷைக் அவர்கள் மும்முறமாக ஈடுபட்டதாலும், இதற்காக வெனவே நேரடியாக களத்தில் இறங்கி பல இடங்களுக்கு பயணம் மேற்கொண்டு சத்தியத்தை பாதுகாக்க குரல் கொடுத்து வந்ததாலும் கிதாபுகளை கோர்வை செய்வதில் பெரிதும் அவர்களால் கவனம் செலுத்த முடியாமல் போனது. அவ்வாறிருந்தும் பல பெறுமதி மிக்க கிதாபுகளை விட்டுச் சென்றுதான் உள்ளார்கள்.

அவைகளில் சில:

1. **அஸ்ஸிறாதுல் முஸ்தகீம்.**
2. **அஷ்ஷர்ஹுல் கவீம்.**
3. **ஸரீஹுல் பயான்.**
4. **இழ்ஹாருல் அகீததிஸ் ஸுன்னிய்யஹ்.**
5. **அல் மதாலிபுல் வபிய்யஹ்.**
6. **ரிஸாலதுர் றத்தி அலத் தாஈ அல் காதியானீ.**
7. **அத்தஅக்குபுல் ஹஸீஸ்.**
8. **அந் நஹ்ஜுஸ் ஸவீய்.**
9. **முஹ்தஸர்.**
10. **பு.ஃ.யதுத் தாலிப்.**

இவைகள் ஷைக் அவர்களின் கோர்வைகளில் சிலதே. இங்கு குறிப்பிடப்படாத பெறுமதியான இன்னும் பல நூற்கள் அவர்களுக்குள்ளன.

# முஹ்தஸர் அப்தில்லாஹ் அல்-ஹறரீ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# முன்னுரை

புகழ் அனைத்தும் படைப்புகள் அனைத்தையும் ஆளக்கூடிய, மரணமில்லாத, (பிறரின் பால்) தேவை காணாத, படைப்புகள் அனைத்தையும் நிர்ணயிக்கக் கூடிய அழ்ழாஹ்வுக்கே உரித்தாகும். ஸலாதும், ஸலாமும் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது உண்டாவதாக!

**(அழ்ழாஹ்வைப் புகழ்ந்து, நபி ﷺ அவர்கள் மீது ஸலாதும் ஸலாமும் சொன்னதன்) பின்பு....**

இது (இஸ்லாமிய கடமைகளைச் செய்யப்) பணிக்கப்பட்ட[1] அனைவரும் அவசியம் அறிந்திருக்க வேண்டிய:

- கொள்கை,
- இமாம் ஷாபிஈ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் மத்ஹபின் அடிப்படையில் சுத்தம் தொடக்கம் ஹஜ் வரைக்கும்,
- கொடுக்கல்வாங்கல் சட்டங்கள் சிலவற்றின் சட்டக்கலை விடயங்கள்,
- உள்ளம், நாவு மற்றும் அது அல்லாதது போன்ற உறுப்புக்களினது பாவங்களின் தெளிவு,

ஆகிய மிக அவசியமான விடயங்களில் பெரும்பாலானதை உள்ளடக்கிய ஒரு சுருக்கமான நூலாகும்.

(1). ‘‘பணிக்கப்பட்டவர்’’ என்பதன் மூலம் புத்தியுள்ள, பருவத்தை எத்திய, ‘‘லா இலாஹ இல்லழ்ழாஹு முஹம்மதுர் றஸூலுழ்ழாஹ்’’ என்ற இஸ்லாமிய அடிப்படைப் பிரச்சாரம் எத்திய ஒருவரையே நாடப்படும்.

(இதன்) மூல நூலானது (யமன் நாட்டின்) ‘‘ஹழரமவ்த்’’ (எனும் பகுதியைச்) சேர்ந்த மார்க்க அறிஞர்களில் ஒருவரான அப்துழ்ழாஹிப்னு ஹுஸைனிப்னி தாஹிர் (றஹிமஹுழ்ழாஹ்) அவர்களுக்குரியதாகும்.

இதில் ‘‘தஸவ்வுப்’’ சம்பந்தமாக அவர்கள் கூறியிருந்தவற்றை நீக்கப்பட்டு, தலைப்பு மாறாத விதத்தில் வசனங்கள் சிலதை மாற்றியமைக்கப்பட்டுள்ளதுடன் பெறுமதிவாய்ந்த அதிகமான மஸ்அலாக்களும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் மூல நூலில் இருக்கும் விடயம் பலவீனமாக இருக்கும் பட்சத்தில் ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த மார்க்க அறிஞர்களில் இமாம் புல்கீனி (றஹிமஹுழ்ழாஹ்) போன்றோர் மேம்படுத்தியதை சிலவேளை நாம் குறிப்பிடுவோம். எனவே ஒருவர் தனது வணக்க வழிபாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக இந்நூலில் கவனம் செலுத்துவது அவசியமாகும். இந்நூலிற்கு (مختصر عبد الله الهرري الكافل بعلم الدين الضروري) ‘‘முஹ்தஸர் அப்திழ்ழாஹ் அல்-ஹறரீய்யில் காபிலு பிஇல்மித்தீனிழ்ழரூரிய்யி’’ என்று பெயர் வைத்துள்ளோம்.

# கொள்கைக் கோட்பாடும் “ரித்தது”ம்

# கொள்கைக் கோட்பாட்டில் மிக அவசியமானவை

(இஸ்லாமிய கடமைகளைச் செய்யப்) பணிக்கப் பட்ட அனைவரும் இஸ்லாமிய மார்க்கத்தில் நுழைந்து, எக்காலமும் அதிலே உறுதியாக நிலைத்திருப்பதுடன் அவர்கள் மீது அவசியமான சட்டங்களைக் கடை பிடிப்பதும் கட்டாயமாகும்.

அறிவதும், பொதுவாக (எல்லா நிலமைகளிலும்) உறுதிகொள்வதும் மேலும் மொழிவதும் - காபிராக இருந்தால் உடனடியாகவும், அவ்வாறு இல்லாமல் முஸ்லிமாக இருந்தால் தொழுகையிலும் - கடமையான வற்றில் நின்றுமுள்ளதுதான் இரண்டு ஷஹாதஹ் கலிமாக்களுமாகும்.

அவ்விரண்டு (ஷஹாதஹ் கலிமாக்களு)மாகிறது:

(أشهد أن لا إله إلا الله وأشهد أن محمدا رسول الله ﷺ) "அஷ்ஹது அல்லா இலாஹ இல்லழ்ழாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் றஸூலுழ்ழாஹி ஸல்லழ்ழாஹு அலைஹி வஸல்லம்." என்பதாகும்.

(أشهد أن لا إله إلا الله) "அஷ்ஹது அல்லா இலாஹ இல்லழ்ழாஹ்" என்பதன் கருத்து: உண்மையில் வணங்கி வழிபடுவதற்குத் தகுதியானவன் அழ்ழாஹ்வைத் தவிர வேறு யாருமில்லையென்று அறிந்து, உள்ளத்தினால் உறுதிகொண்டு நாவினால் ஏற்றுக்கொள்கின்றேன் என்பதாகும். (மேலும் அவன் இணையின்றித்) தனித்தவன், (பங்கு பெறுவதை ஏற்றுக்கொள்ளாத) ஒருவன், ஆரம்பமில்லாதவன், பூர்வீகமானவன், மரணமில்லாதவன், (பிறரின் பால் தேவை காணாது) தனித்து நிற்பவன், அழிவில்லாதவன், படைப்பாளன், வாழ்வாதாரமளிப்பவன், (அனைத்தையும் நன்கு)

அறிந்தவன், (அனைத்தின் மீதும்) வல்லமையுடையவன், நாடியவற்றை செய்பவன், அவன் நாடியவைகளே நடைபெறும். இன்னும் அவன் நாடாத எதுவும் நடைபெற மாட்டாது. (பாவத்தை விட்டு) விலகுதலும், (நன்மை யைச் செய்ய) சக்தி பெறுதலும் அவனைக் கொண்டே யன்றி முடியாது. அவனுக்கு தகுதியான, பரிபூரண அனைத்து தன்மைகளைக் கொண்டும் வர்ணிக்கப் பட்டவன். (மேலும்) அவனுடைய விடயத்தில் குறைபாடான அனைத்தை விட்டும் பரிசுத்தமாக்கப் பட்டவன். ﴿لَيْسَ كَمِثْلِهِۦ شَىْءٌ ۖ وَهُوَ ٱلسَّمِيعُ ٱلْبَصِيرُ﴾[2] ("எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை. அவன் கேட்பவனும், பார்ப்பவனுமாவான்").

எனவே அவன் பூர்வீகமான (ஆரம்பமில்லாத தன்மையுடைய)வனாகும். அவன் அல்லாதவை பூர்வீகமற்றவையாகும். மேலும் அவன் படைப்பாள னாவான், அவனல்லாதவை (அவனால்) படைக்கப்பட்ட வையாகும். எனவே தூசி தொடக்கம் "அர்ஷ்" வரையுமுள்ள அனைத்து சடப் பொருட்களிலிருந்தும் மேலும் அடியார்களுடைய ஒவ்வொரு அசைவு, அமைதி, எண்ணங்கள், ஊசலாட்டங்கள் போன்ற செயற்களிலி ருந்தும் உள்ளமையில் நுழைந்துவிட்ட பூர்வீகமற்ற அனைத்தும் அழ்ழாஹ்வின் உருவாக்கத்தை கொண் டாகும். அழ்ழாஹ்வைத் தவிர வேறு யாரும் அவை களைப் படைக்கவில்லை; இயற்கையுமில்லை, காரணியு மில்லை. மாறாக, அழ்ழாஹ்வின் நாட்டம், வல்லமை, நிர்ணயம், ஆரம்பமில்லாத அறிவின் மூலமே அவை உள்ளமையில் நுழைந்தன. ஏனெனில் அழ்ழாஹு தஆலா ﴿وَخَلَقَ كُلَّ شَىْءٍ﴾[3] ("அவனே அனைத்தையும்

(2). ஸூறதுஷ்ஷூறா: (11).
(3). ஸூறதுல் புர்கான்: (02).

படைத்தான்") என கூறியிருப்பதற்காகவேண்டியாகும். அதாவது அவனே அவற்றை இல்லாமையிலிருந்து இருப்புக்கு கொண்டுவந்தான். எனவே இவ்வர்த்தத்தில் "படைத்தல்" (எனும் தன்மை) அழ்ழாஹ்வைத் தவிர வேறு யாருக்கு மில்லை. மேலும் அழ்ழாஹு தஆலா ﴿هَلۡ مِنۡ خَٰلِقٍ غَيۡرُ ٱللَّهِ﴾[4] ("அழ்ழாஹ்வையன்றி படைப்பாளன் வேறு யாருமுண்டோ?!") எனக் கூறியுள்ளான்.

(இமாம்) அந்-நஸபிய் (றஹிமஹுழ்ழாஹ்) அவர்கள் "ஒருவர் கல்லினால் கண்ணாடியொன்றுக்கு எறிந்து, அதை உடைத்தால் (அப்போது நடைபெற்ற) அவ்வெறிதல், உடைத்தல், உடைதல் என்பவை அழ்ழாஹு தஆலாவின் படைப்பின் மூலமாகும். அடியானுக்கு (كسب) "கஸ்பை"[5] தவிர வேறு எதுவு மில்லை" எனக் கூறியுள்ளார்கள்[6]. எனவே படைத்தல் (எனும் இல்லாமையிலிருந்து உருவாக்கல்) அழ்ழாஹ் வையன்றி வேறு எவருக்குமில்லை.

அழ்ழாஹு தஆலா ﴿لَهَا مَا كَسَبَتۡ وَعَلَيۡهَا مَا ٱكۡتَسَبَتۡۗ﴾[7] ("அது (ஆத்மா) சம்பாதித்ததன் பலன் அதற்குரியதே மேலும் அது சம்பாதித்ததன் விளைவு அதற்குரியதே") எனக் கூறியுள்ளான்.

அழ்ழாஹ்வின் பேச்சு (எனும் தன்மை) அவனது ஏனைய தன்மைகளைப் போன்றே பூர்வீகமான (ஆரம்பமற்ற)தாகும். ஏனெனில் பரிசுத்தமான அழ்ழாஹ் யதார்த்தத்திலும், தன்மைகளிலும், செயற்களிலும்

(4). ஸூறதுல் பாதிர்: (03).

(5). "கஸ்பு" என்பது: அடியான் ஒரு செயலை செய்வதற்கு அவனது நாட்டத்தை முன்வைப்பதாகும்.

(6). "அல்மதாலிபுல் வபிய்யஹ் ஷர்ஹுல் அகீததின் நஸபிய்யஹ்": (ப/159).

(7). ஸூறதுல் பகறஹ்: (286).

அனைத்துப் படைப்புகளை விட்டும் வேறுபட்டவனாவான். மேலும் அழ்ழாஹ் அநியாயக்காரர்கள் (காபிர்கள்) கூறுவதை விட்டும் தூய்மையானவனும், மிக உயர்ந்தவனுமாவான்.

முன் சென்றவற்றின் அர்த்தத்திலிருந்து குர்ஆனிலே அதே வார்த்தையில் அல்லது அதன் அர்த்தத்தில் அதிகம் மீட்டி மீட்டி பிரஸ்தாபிக்கப்பட்ட பதின்மூன்று (13) தன்மைகளை அழ்ழாஹு தஆலாவிற்கு தரிபடுத்துவது தெளிவாகின்றது.

**அவையாவன:**

- உள்ளமை.
- (இணையின்றித்) தனித்திருத்தல்.
- பூர்வீகம் அதாவது ஆரம்பமின்மை.
- முடிவின்மை.
- தன்னிலே நிலைத்திருத்தல் (பிறரின் பால் தேவைகாணாதிருத்தல்).
- வல்லமை.
- நாட்டம்.
- அறிவு.
- கேட்டல்.
- பார்த்தல்.
- மரணமில்லாமை.
- பேச்சு.
- படைப்புகளுக்கு மாற்றமாக இருத்தல்.

இந்தத் தன்மைகள் மார்க்க (நேரடி)க்கூற்றுக்களில் அதிகமாக கூறப்பட்டிருப்பதனால் “அவற்றை அறிவது ஒவ்வொருவரின் மீதும் கட்டாயக் கடமையாகும்” என மார்க்க அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அழ்ழாஹு தஆலாவுடைய யதார்த்தத்திற்கு பூர்வீகம் (ஆரம்பமில்லாத தன்மை) தரிபட்டிருப்பதனால் அவனுடைய தன்மைகள் பூர்வீகமானதாக இருப்பது அவசியமாகிவிடுகின்றது. ஏனெனில் ஒரு தன்மை புதிதாக ஏற்படுவது யதார்த்தம் புதிதாக உண்டாகி யிருப்பதை அவசியப்படுத்துகிறது.

(أشهد أن محمدا رسول الله) "அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுழ்ழாஹ்" என்பதன் கருத்து நிச்சயமாக குறைஷி யைச் சார்ந்த முஹம்மத் இப்னு அப்தில்லாஹிப்னி அப்தில் முத்தலிபிப்னி ஹாஷிமிப்னி அப்தி மனாப் அவர்கள் அழ்ழாஹ்வின் அடியார் என்றும், அனைத்துப் படைப்புக்களுக்கும் அவனது தூதரென்றும் அறிந்து, உறுதிகொண்டு, ஏற்றுக் கொள்கின்றேன் என்பதாகும்.

மேலும் அவர்கள் மக்காவில் பிறந்து அங்கேயே நபியாக அனுப்பப்பட்டார்கள் என்றும், மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள் என்றும் உறுதி கொள்வது அதனைப் பின்துயர்கின்றது. மேலும் அவர்கள் அழ்ழாஹ்வைத் தொட்டும் அறிவித்த மற்றும் எத்திவைத்த அனைத்திலும் உண்மையாளர் என்பதை அது உள்ளடக்கிக் கொள்கின்றது.

**அவற்றில் சில:**

- கப்றின் வேதனையும் அதன் இன்பமும்.
- முன்கர், நகீர் (அலைஹிமஸ்ஸலாம்) எனும் மலக்குகளின் விசாரணை.
- (கப்ரில் இருந்து) எழுப்பப்படுதல்.
- (மஹ்ஷரில்) ஒன்று திரட்டப்படுதல்.
- மறுமைநாள்.
- விசாரணை.
- நற்கூலி (வழங்கப்படுதல்).

- தண்டனை (வழங்கப்படுதல்).
- (நன்மை, தீமை நிறுக்கப்படும்) தராசு.
- நரகம்.
- (“ஸிராத்” எனும்) பாலம்.
- (“ஹவ்ழ்” எனும்) நீர் தடாகம்.
- (“ஷபாஅத்” எனும்) பரிந்துரை.
- சுவர்க்கம்.
- விதம், இடம், திசையின்றி - அதாவது படைப்புக்கள் பார்க்கப்படுவது போன்றல்லாது - மறுமையில் அழ்ழாஹ்வை கண்ணால் பார்த்தல்.
- அவ்விரண்டிலும் (அதாவது சுவர்க்கம் மற்றும் நரகத்தில் அதற்கதற்குரியவர்கள்) நிரந்தரமாக இருத்தல்.
- அழ்ழாஹ்வின் மலக்குமார்களை,
- மேலும் அவனது தூதர்களை,
- மேலும் அவனது வேதங்களை,
- மேலும் (قدر) “கதரை” அதன் நலவையும் கெடுதியையும்,
- மேலும் (முஹம்மத் ﷺ) அவர்கள் நபிமார்களில் இறுதியானவர் என்றும்,
- மேலும் அவர்கள் ஆதமுடைய மக்கள் அனைவருக்கும் தலைவர் என்றும் ஈமான் கொள்ளுதல்.

மேலும் நிச்சயமாக அழ்ழாஹ்வின் நபிமார்களில் நின்றும் ஒவ்வொரு நபியும் உண்மை, அமானிதம் மற்றும் விவேகத்தைக் கொண்டும் வர்ணிப்புப் பெற்றவர்களாக இருப்பது அவசியம் என நம்புவது கட்டாயமாகும். எனவே பொய், மோசடி, அசிங்கம்,

புத்திக்குறைபாடு, மடமை, கோழைத்தனம் இன்னும் அவர்களிடமிருந்து (இஸ்லாமிய) அழைப்பை ஏற்றுக் கொள்வதில் வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய அனைத்தும் அவர்களுக்கு சாத்தியமற்றவைகளாகும்.

மேலும் (كفر) ''குப்ர்'', பெரும் பாவங்கள் மற்றும் இழிவிற்குரிய சிறு பாவங்கள் ஆகியவற்றிலிருந்து நபியாக அனுப்பப்படுவதற்கு முன்னரும், அனுப்பட்டதற்கு பின்னரும் அவர்களுக்கு (அழ்ழாஹ்வின்) பாதுகாப்பு அவசியமானதாகும். மேலும் பாவங்களிலிருந்தும் அவையல்லாதவை (அதாவது இழிவற்ற சிறிய பாவங்கள்) அவர்களுக்கு ஏற்படலாம். என்றாலும் அதிலே அவர்களை பிறர் பின்பற்ற முன்னர் உடனடியாக (توبة) ''தௌபஹ்'' செய்வதற்கு உணர்த்தப்படுவார்கள்.

எனவே இழிவான அச்செயல்களை புரிந்த பின்யாமீனைத் தவிரவுள்ள யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய ஏனைய சகோதரர்களுக்கு நபித்துவம் செல்லுபடியற்றது என்பது இங்கிருந்துதான் அறியப்படு கிறது. வஹியருளப்பட்ட (الأسباط) ''அல்-அஸ்பாத்'' (என்று குர்ஆனில் குறிப்பிடப்பட்டவர்கள்) அவர்களின் சந்ததி யில் நபித்துவம் வழங்கப்பபட்டவர்களேயாகும்.

## (ரித்தத் எனும் மதம் மாறுதல் பற்றிய) பாடம்

ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் தனது இஸ்லாத்தை வீணாக்கிப் பாழாக்கித் துண்டித்துவிடக்கூடியவைகளை விட்டும் அதனைப் பாதுகாப்பது கட்டாயமாகும். அதுவே மதம் மாறுவதாகும். அழ்ழாஹு தஆலா நம்மை பாதுகாப்பானாக!

(இமாம்) நவவீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களும் மற்றும் அவர்களல்லாதோரும் “மதம் மாறுதல் குப்ரின் வகைகளில் மிகவும் மோசமானதாகும்” எனக் கூறியுள்ளார்கள்[8].

தற்காலத்தில் பேச்சில் பொடுபோக்கு அதிகரித்து விட்டது. எந்த அளவுக்கென்றால் ஒரு சிலரிடத்திலிருந்து அவர்களை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடுகின்ற சில வார்த்தைகள் வெளியாகி விடுகின்றன. அவற்றை அவர்கள் (كفر) “குப்ர்” எனக் கருதுவது ஒருபுறமிருக்க அவற்றை பாவமெனக் கூடக் கருதுவதில்லை.

இது, “நிச்சயமாக ஓர் அடியான் ஒரு வார்த்தை யை குற்றம் எனக் கருதாமல் பேசிவிடுகின்றான். அதன் மூலம் அவன் எழுபது வருடம் (அதாவது இறக்கத்தில் எழுபது வருட தொலை தூரம்) நரகில் விழுந்து விடுவான்.” எனும் நபி ﷺ அவர்களின் கூற்றின் உண்மையாகும். அது (அதாவது எழுபது வருட தொலைதூரமானது) நரகின் தீர்ச்சையாகும். மேலும் அது காபிர்களுக்கென குறிப்பானதாகும்.

இந்த ஹதீஸை (இமாம்) திர்மிதீ (றஹிமஹுழ்ழாஹ்) அவர்கள் அறிவிப்புச் செய்து விட்டு,

(8). “றவ்ழதுத் தாலிபீன்”: (10/64).

அதனை "ஹஸன்" எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்[9]. மேலும் இதே அர்த்தத்தில் ஒரு ஹதீஸ் உள்ளது. அதனை (இமாம்களான) புகாரீ[10] மற்றும் முஸ்லிம்[11] (றஹிமஹுமழ்ழாஹ் ஆகியோர்) அறிவித்துள்ளனர்.

மேலும் (ஒரு மனிதன்) குப்ரில் விழுவதற்கு - "பிக்ஹுஸ்ஸுன்னஹ்" எனும் நூல் குறிப்பிடுவதைப் போன்று[12] - சட்டத்தை அறிந்திருப்பதோ அல்லது (அவ்வார்த்தையை மொழியும் போது) உள்ளம் அதனைப் பொருந்திக்கொள்வதோ அல்லது அந்த வார்த்தையின் பொருளை உறுதி கொள்வதோ நிபந்தனையிடப்படமாட்டாது என்பதற்கு இந்த ஹதீஸ் ஆதாரமாக உள்ளது.

அவ்வாறே (كفر) குப்ரில் விழுவதற்கு கோபமின்மை நிபந்தனையிடப்படமாட்டாது. இதனை (இமாம்) நவவீ (றஹிமஹுழ்ழாஹ்) அவர்கள் "ஒரு மனிதன் அவனது பிள்ளை அல்லது அவனது அடிமையின் மீது கோபம் கொண்டு, கடுமையாக அவனை அடிக்கின்றான். அப்பொழுது அவனிடம் இன்னொரு மனிதன் "நீ ஒரு முஸ்லிமில்லையா?" எனக் கேட்டதற்கு, அவன் மனமுரண்டாக "இல்லை" எனக் கூறிவிட்டால் அவன் காபிராகி விடுகிறான்"[13] எனும் கூற்றின் மூலம் சுட்டிக்காட்டியதைப் போன்றாகும். மேலும் இதனை ஹனபி மத்ஹபைச் சேர்ந்தவர்

(9). "ஸுனனுத் திர்மிதீ": எண்: 2314.
(10). "ஸஹீஹுல் புகாரீ": எண்: 6477.
(11). "ஸஹீஹு முஸ்லிம்": எண்: 7481.
(12). "பிக்ஹுஸ்ஸுன்னஹ்" எனும் நூலில்: ஒருவர் குப்ரில் விழுவதற்கு உள்ளம் அக்குப்ரைப் பொருந்திக்கொள்வது நிபந்தனையாகுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
(13). "றவ்ழதுத் தாலிபீன்": (10/68)

களிலிருந்தும் மற்றும் அவர்கள் அல்லாதவர்களில் ஏனையோரும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த (இமாம்) நவவீ மற்றும் அவர் அல்லாதோரும், ஹனபி மத்ஹபைச் சேர்ந்தோரும் அவர்கள் அல்லாதோரும் (“ரித்தத்” எனும்) மதம் மாறுவதை வகைப்படுத்தியதைப் போன்று அவை நம்பிக்கை சார்ந்தவை, செயல் சார்ந்தவை, சொல் சார்ந்தவை என மூன்று வகைப்படும். அவை ஒவ்வொன்றும் பல பங்குகளாகப் பிரிகின்றன.

**முதலாவதில் நின்றுமுள்ளதுதான்:**

- அல்லாஹ்வில் அல்லது அவனது தூதரில் அல்லது குர்ஆனில் அல்லது இறுதி நாளில் அல்லது சுவர்க்கத்தில் அல்லது நரகத்தில் அல்லது கூலியில் அல்லது தண்டனையில் அல்லது இவை போன்ற மார்க்கத்தில் நிர்ப்பந்தமாக அறியப்பட்ட, ஏகோபித்துக் கூறப்பட்ட விடயமொன்றில் சந்தேகம் கொள்ளல்.
- அல்லது அகிலம் அதன் இனம் மற்றும் இணைப்போ அல்லது அதன் இனம் மாத்திரமோ பூர்வீகமானது மற்றும் ஆரம்ப மற்றது என நம்புதல்.
- அல்லது “அல்லாஹு தஆலா அறிந்தவனாக இருத்தல்” போன்ற ஏகோபித்த அடிப்படையில் அவனுக்கு அவசியம் இருக்க வேண்டிய தன்மைகளில் ஒன்றை மறுத்தல்.

- அல்லது ஏகோபித்த அடிப்படையில் அவனைப் பரிசுத்தப்படுத்துவது அவசியமான "சடம்" போன்ற ஒன்றை (அவன் பால்) இணைத்தல்.
- அல்லது விபச்சாரம், "லிவாத்"[14], கொலை, திருட்டு, அபகரிப்பு போன்ற யாரும் தெரியாமல் இருக்க முடியாத மார்க்கத்தில் நிர்ப்பந்தமாக அறியப்பட்ட, ஏகோபித்த அடிப்படையில் (ஹறாமாகத்) தடுக்கப்பட்டதை ஆகுமாக்குதல்.
- அல்லது அவ்வாறே வியாபாரம், திருமணம் போன்ற வெளிப்படையான ஹலாலை ஹறாமாக்குதல்.
- அல்லது அவ்வாறே ஐவேளைத் தொழுகைகள் அல்லது அவற்றின் ஒரு ஸுஜூது மற்றும் ஸகாத், நோன்பு, ஹஜ், வுழூஉ போன்ற ஏகோபித்த அடிப்படையில் கடமையாக்கப் பட்டதை மறுத்தல்.
- அல்லது அவ்வாறே ஏகோபித்த அடிப்படையில் கடமையாகாததை கடமை யாக்குதல்.
- அல்லது அவ்வாறே ஏகோபித்த அடிப்படையில் மார்க்கமாக்கப்பட்டதை மறுத்தல்.
- அல்லது எதிர்காலத்தில் காபிராகுவதற்கு அல்லது மேற்கூறப்பட்ட விடயங்களில் ஏதாவதொன்றை செய்வதற்கு உறுதி கொள்ளல். அல்லது (தனது) நாட்டமின்றி உள்ளத்தில் ஊசலாடுவது இல்லாமல் (அவற்றை செய்வதா? இல்லையா? எனத்) தடுமாறுதல்.

(14). "லிவாத்" என்பது மனைவி, அடிமைப்பெண் அல்லாத ஒரு பெண்ணின் அல்லது ஆணின் பின்துவாரத்தில் ஆண் உறுப்பின் முன் பகுதியை நுழைவிப்பதாகும்.

- அல்லது எமது தலைவர் அபூபக்ர் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களின் தோழமை யை மறுத்தல்.
- அல்லது றஸூல்மார்களில் நின்றும் எவரது ரிஸாலத்தை ஏகோபிக்கப்பட்டதோ அத்தகைய ஒருவரின் ரிஸாலத்தை மறுத்தல்.
- அல்லது குர்ஆனில் நின்றுமுள்ளதென ஏகோபித்த அடிப்படையில் உள்ள ஓர் எழுத்தை மறுத்தல். அல்லது அது இல்லை யென ஏகோபித்த அடிப்படையில் உள்ள ஓர் எழுத்தை அதில் நின்று முள்ளதென உறுதி கொண்டு வேண்டுமென்று அதிலே அதிகரித்தல்.
- அல்லது ஒரு ரஸூலை பொய்ப்பித்தல். அல்லது அவரில் குறை காணுதல். அல்லது இழிவுபடுத்தும் நோக்குடன் அவரின் பெயரை சிற்றெடுப்பு எடுத்தல்.
- அல்லது எமது நபி முஹம்மத் ﷺ அவர்களுக்குப் பின் ஒருவருக்கு நபித் துவத்தை ஆகுமாக்குதல்.

**இரண்டாவது பகுதி: செயற்கள் சார்ந்தவை.**

- சிலைக்கு அல்லது சூரியனுக்கு அவ் விரண்டையும் வணங்குவதை நாடியோ அல்லது நாடாமலோ ஸுஜூத் செய்வதைப் போல.
- மேலும் ஒரு மனிதனை வணங்கும் நோக்கில் ஸுஜூத் செய்வதைப் போல. (அதாவது) சூபிகளைப் போன்று நடிக்கும் சில ஷைக்மார் களுக்கு மடையர்களில் சிலர் அவர்களை

வணங்கும் நோக்கில் ஸுஜூத் செய்வதைப் போல. அப்போது அது குப்ராகிவிடும். அவ்வாறு அவர்களை வணங்கும் நோக்கில் லையென்றால் அது குப்ராகமாட்டாது. எனினும் அது ஹறாமாகும்.

**மூன்றாவது பகுதி: சொற்கள் சார்ந்தவை.**

இவைகள் மட்டிட முடியாத அளவு மிக அதிகமானவையாகும். அவற்றில் நின்றுமுள்ளவைதான்:

- ஒரு முஸ்லிமை காபிரே! அல்லது யஹூதியே! அல்லது நஸ்ரானியே! அல்லது மார்க்க மற்றவனே! என்று முன்னிலைப் படுத்தப் படுபவர் இருக்கும் மார்க்கம் குப்ரானது அல்லது யஹூதிய்யத்தானது அல்லது நஸ்ரானிய்யத்தானது அல்லது மார்க்கமற்றது என்று நாடியவராக ஒப்பாக்கும் நாட்ட மில்லாமல் அழைப்பது.
- மேலும் அழ்ழாஹு தஆலாவின் திருநாமங் களில் ஒரு திருநாமத்தை அல்லது அவனுடைய வாக்குறுதியை அல்லது அவனது எச்சரிக்கையை - அவற்றை பரிசுத்த மான அவனின் பக்கம் இணைக்கப்படுவது தெரியாமலிருக்க முடியாதவர் - பரிகசிப்பதைப் போல.
- மேலும் "இவ்வாறு அழ்ழாஹ் எனக்கு ஏவி யிருந்தாலும் நான் அதனை செய்யமாட்டேன்" என்றும்,
- அல்லது "கிப்லஹ் இந்தத் திசையிலிருந் தாலும் நான் அதனை நோக்கி தொழ மாட்டேன்" என்றும்,

- அல்லது “அழ்ழாஹ் எனக்கு சுவர்க்கத்தைத் தந்தாலும் நான் அதில் நுழையப் போவ தில்லை” என்றும் (முன் சென்ற) அனைத் திலும் அற்பமாக கருதியவராகவோ அல்லது மனமுரண்டை வெளிப்படுத்திய வராகவோ கூறுவதைப் போல.
- மேலும் “நான் இருக்கும் நோயுடன் தொழுகையை விட்டதற்கு அழ்ழாஹ் என்னை குற்றம் பிடித்தால் அவன் எனக்கு அநியாயம் செய்து விட்டான்” என்று கூறுவதைப் போல.
- அல்லது நிகழ்ந்த ஒரு செயலுக்கு, “இது அழ்ழாஹ்வின் நிர்ணயமின்றி நடைபெற்றது” என்றும்,
- அல்லது “என்னிடத்தில் நபிமார்கள் அல்லது மலக்குமார்கள் அல்லது அனைத்து முஸ்லிம் களும் இவ்வாறுதான் என சாட்சி கூறினாலும் நான் அவர்களை ஏற்றுக் கொள்ளப்போவ தில்லை” என்றும் கூறுவதைப் போல.
- அல்லது பரிகசிக்கும் எண்ணத்தில் “அது ஸுன்னத்தாக இருந்தபோதிலும் நான் அவ்வாறு செய்யமாட்டேன்” என்றும்,
- அல்லது “இன்னார் நபியாக இருந்தபோதிலும் நான் அவரை ஈமான் கொள்ளமாட்டேன்” என்றும்,
- அல்லது ஓர் ஆலிம் அவருக்கு கொடுத்த “பத்வாவை” மார்க்க சட்டத்தை அற்பமாக கருதுவதை நாடியவராக “இதென்ன மார்க்கம்?” என்றும் கூறுவதைப் போல.

- அல்லது “ஒவ்வோர் ஆலிமின் மீதும் அழ்ழாஹ்வின் சாபம் உண்டாவதாக” என அனைவரையும் உள்ளடக்கி அடையவளைத்துக்கொள்வதை நாடியவராகக் கூறுவதை போல. ஆனாலும் ஆலிம்கள் அனைவரையும் உள்ளடக்கி அடையவளைத்துக்கொள்வதை நாடாமல் குறித்த சில ஆலிம்களை சபிப்பதை மட்டும் நாடி, அவர்களது நிலைமைகள் சீர்கெட்டு விட்டதென அவர்களை பற்றி அவர் எண்ணி, அதன் மீது அறிவிக்கக்கூடிய ஒரு காரணியும் அங்கு பெற்றுக் கொள்ளப்பட்டால் அப்போது அவர் காபிராகமாட்டார். அவருடைய பேச்சு பாவத்தை விட்டும் நீங்கிவிடாமலிந்தபோதிலும் சரியே.
- அல்லது (ஒருவர்) நான் அழ்ழாஹ்வை அல்லது மலக்குகளை அல்லது ஒரு நபியை அல்லது ஷரீஅத்தை அல்லது இஸ்லாத்தை விட்டும் நிரபராதி (அதாவது அவர்களுக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை) என்று கூறுவதைப் போல.
- அல்லது அழ்ழாஹ்வினது சட்டத்தை பரிகசித்தவராக “அச்சட்டம் எனக்குத் தெரியாது” என்று கூறுவதைப் போல.
- அல்லது ஒரு பாத்திரத்தை நிரப்பியவராக ﴿وَكَأْسًا دِهَاقًا﴾[15] (“பானங்கள் நிரம்பிய கிண்ணங்களும்”) என்றோ அல்லது ஒரு பானத்தை கொட்டியவராக ﴿فَكَانَتْ سَرَابًا﴾[16]

(15). ஸூறதுன் நப:: (34).
(16). ஸூறதுன் நப:: (20).

(“அவை கானல் நீராகிவிடும்”) என்றோ அல்லது அளவை நிறுவையின் போது ﴿وَإِذَا كَالُوهُمْ أَو وَّزَنُوهُمْ يُخْسِرُونَ﴾[17] (“இவர்கள் அவர்களுக்கு அளந்தோ, நிறுத்தோ கொடுக்கும் போது குறைத்துவிடுகின்றனர்”) என்றோ அல்லது ஒரு கூட்டத்தை பார்க்கும் போது ﴿وَحَشَرْنَاهُمْ فَلَمْ نُغَادِرْ مِنْهُمْ أَحَدًا﴾[18] (“அவர்களை நாம் திரட்டுவோம். அவர்களில் ஒருவரையும் விட்டுவைக்கமாட்டோம்”) என்றோ இந்த வசனங்கள் அனைத்திலும் அர்த்தத்தை பரிகசிக்கும் நோக்கில் கூறு வதைப் போல.

அவ்வாறே இந்நோக்கில் குர்ஆன் உபயோகிக்கப் படும் ஒவ்வோர் இடங்களுமாகும். அது இந்நோக்கமின்றி யிருந்தால் அவர் காபிராகமாட்டார். என்றாலும் “அது ஹறாமென்பது தூரமான விடயமல்ல” என அஷ்ஷெய்க் அஹ்மத் இப்னு ஹஜர் அல்-ஹைதமி (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்[19].

- அவ்வாறுதான் ஒரு மலக்கை அல்லது ஒரு நபியை ஏசியவரும்,
- அல்லது “நான் தொழுதால் விபச்சார முகவராக ஆகிவிடுவேன்” என்றோ அல்லது “நான் தொழுதது முதல் எப்பலனையும் அடைந்ததில்லை” என்றோ அல்லது

(17). ஸூறதுல் முதப்பிபீன்: (03).
(18). ஸூறதுல் கஹ்ப்: (47).
(19). “அல் இ:லாம் பிகவாதிஇல் இஸ்லாம்”: (ப/369).

பரிகசிக்கும் நோக்கில் ''தொழுகை எனக்கு சரிபட்டுவராது'' என்றோ கூறியவரும்,

- அல்லது ஒரு முஸ்லிமுக்கு ''நான் உனது விரோதியும், உனது நபியின் விரோதியு மாவேன்'' என்றோ அல்லது நபி ﷺ அவர்களை நாடி, அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு, ''நான் உனது விரோதியும், உனது பாட்டனாரினது விரோதியு மாவேன்'' என்றோ கூறியவரும்,
- அல்லது இவை போன்ற கேவலமான அசிங்கமான வார்த்தைகளில் ஏதாவது ஒன்றைக் கூறுபவரும் காபிராகிவிடுவார்.

ஹனபியைச் சார்ந்த அல்-பகீஹ் பத்ருர் ரஷீத் மற்றும் மாலிகியைச் சார்ந்த அல்-காழி இயாழ் ரஹிமஹுமழ்ழாஹ் போன்ற அதிகமான மார்க்க சட்டக் கலை வல்லுனர்கள் (இது போன்ற) அதிகமான விடயங் களை தொகுத்துக் கூறியுள்ளார்கள். எனவே அவற்றை அறிந்திருப்பது அவசியமாகும். ஏனெனில் நிச்சயமாக தீங்கை அறியாதவர் அதிலே விழுந்து விடுவார்.

**(மேற்குறித்த விடயங்களின்) அடிப்படை விதி:**

அழ்ழாஹ்வை அல்லது அவனுடைய வேதங்களை அல்லது அவனுடைய தூதர்களை அல்லது அவனுடைய மலக்குகளை அல்லது அவனுடைய சின்னங்களை அல்லது அவனின் மார்க்க அடையாளங்களை அல்லது அவனுடைய சட்டங்களை அல்லது அவனது வாக் குறுதியை அல்லது அவனுடைய எச்சரிக்கையை அற்பமாக கருதுவதை அறிவிக்கக்கூடிய ஒவ்வொரு நம்பிக்கையும் அல்லது செயலும் அல்லது சொல்லும் குப்ராகும். எனவே மனிதன் இயன்றளவு எந்நிலையிலும் அவற்றிலிருந்து எச்சரிக்கையாக இருந்து கொள்ளட்டும்.

## (மதம் மாறியவரின் சட்டங்கள் தொடர்பான) பாடம்

மதம் மாற்றத்தில் விழுந்தவர், இரு ஷஹாதாக்களை மொழிந்து, எதன் மூலம் அம் மதம்மாற்றம் நிகழ்ந்ததோ அதனைக் களைந்து உடனடியாக இஸ்லாத்தின் பால் மீளுவது கடமையாகும். மேலும் அது தன்னிடம் ஏற்பட்டதற்காக வருந்துவதும், அது போன்றதற்கு மீளாமல் இருப்பதை உறுதிகொள்வதும் அவர் மீது கடமையாகும். எனவே ஷஹாதஹ்வின் மூலம் அவரின் குப்ரை விட்டும் அவர் மீளாவிட்டால் (توبة) ‘‘தௌபஹ்’’ செய்யும்படி வேண்டப்படுவது கடமையாகும். அவரிடமிருந்து இஸ்லாத்தையோ அல்லது மதம் மாறியதற்காக கொலை செய்யப்படுவதையோ தவிர (வேறு எதனையும்) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இஸ்லாத்தின் பால் மீளுவதை அவருக்கு முன்வைத்த தன் பின்னர் கலீபஹ்தான் அதனை அவர் மீது அமுல்படுத்துவார். மேலும் அதிலே கலீபஹ் நீதமான இரு சாட்சியாளர்களின் சாட்சியத்திலோ அல்லது அவரின் அங்கீகாரத்திலோ உறுதிகொள்வார். இது புகாரியுடைய (من بدل دينه فاقتلوه) ‘‘யார் தனது மார்க்கத்தை மாற்றிக்கொண்டாரோ, அவரைக் கொலை செய்து விடுங்கள்’’[20] எனும் ஹதீஸுக்காகவாகும்.

மேலும் அதன் மூலம் அவரின் நோன்பும், தயம்முமும், உடலுறவுக்கு முன்னால் உள்ள திருமணமும் முறிந்துவிடும். மேலும் அதற்குப் பின்னால் இத்தஹ்விலே இஸ்லாத்திற்கு மீளாவிட்டாலும் அவ்வாறுதான்.

(20). ‘‘ஸஹீஹுல் புகாரீ’’: எண்: 6922.

மேலும் அவர் முஸ்லிமான மற்றும் முஸ்லி மல்லாத பெண்ணை திருமண ஒப்பந்தம் செய்வதும் செல்லுபடியாகமாட்டாது.

மேலும் அவரினால் அறுக்கப்பட்டதும் ஹறாமாகும்.

மேலும் அவர் அனந்தரம் பெறவோ மற்றும் அனந்தரம் பெறப்படவோமாட்டாது.

மேலும் அவர் மீது தொழுகை நடாத்தப்படவோ, குளிப்பாட்டப்படவோ, கபன்செய்யப்படவோ, முஸ்லிம் களினது மையவாடிகளில் அடக்கம் செய்யப்படவோ மாட்டாது.

மேலும் அவருடைய சொத்து (فيء) "பைஉ" ஆகும். அதாவது சீரான ஒரு "பைதுல் மால்" இருந்தால் அதற்குரியதாகும். அவ்வாறு இல்லாவிட்டால் ஸாலிஹான ஒரு மனிதர் அதனை எடுத்து, முஸ்லிம் களின் (பொதுவான) நற்காரியங்களில் செலவு செய்ய முடியுமென்றிருந்தால் அதனையே செய்வார். தற்காலத் தில் எந்த ஒரு சீரான "பைதுல் மாலும்" கிடையாது (என்பது குறிப்பிடத்தக்கதாகும்).

## (கடமைகளை நிறைவேற்றுவது மற்றும் விலக்கள்களை தவிர்ந்திருப்பது பற்றிய) பாடம்

(இஸ்லாமிய கடமைகளைச் செய்யப்) பணிக்கப் பட்ட ஒவ்வொருவர் மீதும் அழ்ழாஹ் அவருக்கு கடமையாக்கிய அனைத்தையும் நிறைவேற்றுவது அவசியமாகும். மேலும் அவற்றின் கடமைகள் மற்றும் நிபந்தனைகளைக் கொண்டுவரும்படி அழ்ழாஹ்

அவருக்கு ஏவியதன் பிரகாரம் அவற்றை நிறைவேற்று வதும், அவற்றை முறிக்கக்கூடியவைகளைத் தவிர்ந்து இருப்பதும் அவா் மீது கடமையாகும்.

மேலும் அவற்றிலிருந்து ஏதாவது ஒன்றை விடுபவரையோ அல்லது அவற்றை முறைப் பிரகாரம் நிறைவேற்றாதவரையோ அவர் கண்டால் அவற்றை முறைப் பிரகாரம் நிறைவேற்றும் படி ஏவுவதும் அவர் மீது கடமையாகும்.

மேலும் அவருக்கு முடியுமென்றிருந்தால் அவற்றின் மீது வற்புறுத்துவதும் அவா் மீது கடமை யாகும். அவ்வாறின்றி வற்புறுத்தவும், ஏவவும் அவருக்கு முடியாவிட்டால் உள்ளத்தால் வெறுப்பது அவருக்குக் கடமையாகும். இது ஈமானின் மிக பலயீனமானதாகும். அதாவது இயலாமையின் போது மனிதனுக்கு அவசிய மானவற்றில் மிகக்குறைந்ததாகும்.

இன்னும் தடுக்கப்பட்ட அனைத்தையும் விடுவதும், அவற்றை செய்யக்கூடியவரை விலக்குவதும் அவருக்கு முடியுமென்றிருந்தால் அவற்றை வற்புறுத்தியாவது தடுப்பதும் அவசியமாகும். அவ்வாறு இல்லையானால் அவற்றை உள்ளத்தால் வெறுப்பது கடமையாகும்.

“ஹறாம்” என்பது எதை செய்யக்கூடியவருக்கு தண்டனையை அழ்ழாஹ் எச்சரிக்கை செய்து, அதை விட்டுவிடுபவருக்கு கூலியை வாக்களித்தானோ அதுவாகும். அதற்கு நேர்மாற்றமானது வாஜிபாகும்.

# வணக்க வழிபாடு

## சுத்தமும் தொழுகையும்

## (ஐவேளைத் தொழுகைகளின் நேரங்களும், அதனுடன் தொடர்பானவைகள் பற்றிய) பாடம்

கடமையில் நின்றுமுள்ளதுதான் இரவு பகலில் (உள்ள) ஐவேளைத் தொழுகைகளும்.

**ளுஹ்ர்:** இதன் நேரம் சூரியன் (நடுவானத் திலிருந்து) சாய்ந்ததிலிருந்து மத்திய நேர நிழலின்றி ஒவ்வொரு பொருளின் நிழலும் அது போன்று ஆகும் வரை.

**அஸ்ர்:** இதன் நேரம் ளுஹ்ருடைய நேரத்திற்கு பின்னாலிருந்து சூரியன் (முழுமையாக) மறையும் வரை.

**ம∴ரிப்:** இதன் நேரம் சூரியன் மறைந்ததற்கு பின்னாலிருந்து செம்மேகம் மறையும் வரை.

**இஷா:** இதன் நேரம் ம∴ரிபுடைய நேரத்திற்கு பின்னாலிருந்து (அல்-பஜ்ருஸ்ஸாதிக்) மெய்யான விடியல் உதயமாகும் வரை.

**ஸுப்ஹ்:** இதன் நேரம் இஷாவுடைய நேரத்திற்கு பின்னாலிருந்து சூரியன் உதயமாகும் வரை.

இக்கடமைகள் அவற்றின் நேரங்களில் முஸ்லிமான, பருவத்தை எத்திய, புத்தியுள்ள, சுத்தமான - அதாவது மாதவிடாய் மற்றும் மகப்பேற்றுப் பெண் அல்லாத - ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும்.

எனவே எத்தங்கடமுமின்றி அவற்றை அவற்றின் நேரத்தைக் கான முற்படுத்துவதும் மேலும் அதை விட்டும் அவற்றைப் பிற்படுத்துவதும் ஹறாமாகும்.

(தொழுகையின்) நேரத்திலிருந்து அதனை நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவும் மேலும்

தொடர் சிறுநீர் போக்குடையவர் போன்றோருக்கு (அத்துடன்) அதற்கு சுத்தமாகப் போதுமான அளவும் கழிந்ததன் பின்னால் மாதவிடாய் போன்ற தடை குறிக்கிட்டால் அத்தொழுகையைக் “கழாஉ” செய்வது அவருக்கு கடமையாகும்.

அல்லது நேரத்திலிருந்து தக்பீருடைய அளவு எஞ்சியிருக்கும் நிலையில் அத்தடை நீங்கிவிட்டால் அவருக்கு அத்தொழுகை அவசியமாகிவிடும். அவ்வாறே அதற்கு முன்னால் உள்ளதும் (அவசியமாகும்) அதனுடன் சேர்த்துத் தொழப்படக்கூடியதாக அது இருந்தால்.

எனவே சூரிய மறைவிற்கு முன்னால் தக்பீருடைய அளவு இருக்கும் போது தடை நீங்கிவிட்டால் ளுஹ்ருடன் அஸ்ரும் மேலும் பஜ்ருக்கு முன்னால் தக்பீருடைய அளவை அடைவதன் மூலம் மஃரிபுடன் இஷாவும் அவசியமாகும்.

## (தொழுகை தொடர்பாக சிறுவர்களின் பாதுகாவலர் மற்றும் அதிகாரமுடையோர் இன்னும் முஸ்லிம்கள் மீது கடமையானவை பற்றிய) பாடம்

பகுத்தறிவுள்ள ஆண் பெண் சிறு பிள்ளைகளின் பாதுகாவலர் மீது சந்திர ஏழு வருடங்களுக்குப் பின்னால் அவ்விருவருக்கும் தொழும்படி ஏவுவதும் மேலும் அவ் விருவருக்கும் அதன் சட்டங்களைப் படித்துக் கொடுப்பதும் மேலும் பத்து வருடங்களுக்குப் பின்னால் அதனை விட்டதற்காக அவ்விருவரையும் அடிப்பதும் கடமையாகும். அவ்வாறே அவ்விருவருக்கும் முடியுமான நோன்புமாகும்.

மேலும் கொள்கைக் கோட்பாடுகள் மற்றும் மார்க்க சட்டங்களில் ‘‘இது போன்றது வாஜிப்’’, ‘‘இது போன்றது ஹறாம்’’ எனவும், மிஸ்வாக்குச் செய்வது மேலும் ஜமாஅத்துடன் தொழுவது மார்க்கமாக்கப் பட்டவை எனவும் அவ்விருவருக்கும் கற்றுக் கொடுப்பதும் அவர் மீது கடமையாகும்.

மேலும் சோம்பேறித்தனமாகத் தொழுகையை விட்டவரை அவர் (توبة) ‘‘தௌபஹ்’’ செய்யாவிட்டால் கொலை செய்வது (அரசினால்) அதிகாரம் கொடுக்கப் பட்டவர் மீது கடமையாகும். அவர் முஸ்லிம் என்பதே அவருக்குரிய தீர்ப்பாகும்.

மேலும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் தமது குடும்பத்தினரையும் மற்றும் அவர்களல்லாதவர்களில் தனக்கு முடியுமான ஒவ்வொருவரையும் தொழுகையைக் கொண்டு ஏவுவது கடமையாகும்.

# (“வுழூஉ”வின் கடமைகளை விளக்கும்) பாடம்

“வுழூஉ” தொழுகையின் நிபந்தனைகளிலுள்ள தாகும். அதன் கடமைகள் ஆறாகும். (அவையாவன):

**முதலாவது:** தொழுகைக்காக சுத்தம் செய்வதை யோ அல்லது செல்லுபடியாகக்கூடிய நிய்யத்களில் அது அல்லாததையோ முகத்தைக் கழுவும் போது - அதாவது இமாம் ஷாபிஈ (றஹிமஹுமுல்லாஹ்) அவர்களிடத்தில் அதனை கழுவுவதுடன் இணைந்ததாக - நிய்யத் வைத்தல். மேலும் (இமாம்) மாலிக் (றஹிமஹுமுல்லாஹ்) அவர்களிடத்தில் நிய்யத்தை வைப்பது முகத்தைக் கழுவுவதைக்கான சற்று முந்தியிருந்தாலும் போதுமான தாகும்.

**இரண்டாவது:** தலை முடி முளைக்கும் இடங்களிலிருந்து நாடிக்குழி வரையிலும் மேலும் காதிலிருந்து மற்றைய காது வரையிலும் ஆணுடைய அடர்த்தியான தாடி மற்றும் இரு பக்கதாடியின் உற்புறம் அல்லாமல் முடி, தோல் உட்பட முகம் முழுவதையும் கழுவுதல்.

**மூன்றாவது:** இரு கைகளை முழங்கைகள் உட்படவும் மற்றும் அவ்விரண்டின் மீதுள்ளவைகளையும் கழுவுதல்.

**நான்காவது:** தலையையோ அல்லது அதன் சிலதையோ “மஸ்ஹ்” செய்தல். அது அதன் எல்லையில் உள்ள ஒரு முடியாயினும் சரியே.

**ஐந்தாவது:** இரு கால்களையும் கரண்டைக் கால்கள் உட்படக் கழுவுதல். அல்லது காலுறையுடைய

நிபந்தனைகள் பூர்த்தியானால் அதன் மீது ‘‘மஸ்ஹ்’’ செய்தல்.

**ஆறாவது:** இவ்வாறே ஒழுங்கு முறைப்படி செய்தல்.

## (‘‘வுழூஉ’’வை முறிக்கும் காரியங்கள் பற்றிய) பாடம்

(பின்வருவன) ‘‘வுழூஉ’’வை முறித்துவிடும்:

- விந்து அல்லாது (முன், பின்) இரு துவாரங் களினால் வெளியானவை.
- மனித (ஆண், பெண்) குறியை அல்லது பின்துவாரத்தை திரையின்றி உள்ளங்கையினால் தொடுதல்.
- இச்சை கொள்ளப்படும் திருமணம்செய்ய முடியுமான பெண்ணின் தோலைத் தொடுதல்.
- பித்தட்டை இடம்பாடாக்கி உட்கார்ந்தவரின் தூக்கம் அல்லாது (வேறொன்றினால்) புத்தி நீங்குதல்.

## (மல சலத்திலிருந்து சுத்தம் செய்வது பற்றிய) பாடம்

முன், பின் இரு துவாரங்களில் ஒன்றிலிருந்து வெளியாகும் விந்து அல்லாத ஈரலிப்பான ஒவ்வொன்றி லிருந்தும் அவ்விடம் சுத்தமாகும் வரை தண்ணீர் மூலமும் அல்லது அது இடம் பெயராது காய்வதற்கு முன்னால் இருக்கும் போது தண்ணீர் இருந்தபோதிலும்

கல் அல்லது தாள் போன்ற கலட்டக்கூடிய, சுத்தமான, கட்டியான, கண்ணியப்படுத்தப்படாத ஒன்றின் மூலம் அவ்விடம் சுத்தமாகும் வரை மூன்று தடவை அல்லது அதை விட அதிகமாக தடவுவதன் மூலமும் சுத்தம் செய்வது கடமையாகும். அதன் அடையாளம் இருந்த போதிலும் சரியே (அது குறைவாக இருப்பதனால் மன்னிக்கப்படும்).

ஆனால் அது தரிபட்ட இடத்தை விட்டும் இடம் பெயர்ந்து விட்டால் அல்லது காய்ந்து விட்டால் (அதனை சுத்தம் செய்ய) தண்ணீர் அவசியமாகிவிடும்.

## (குளிப்பைக் கடமையாக்கக்கூடியவை மற்றும் அதன் கடமைகள் பற்றிய) பாடம்

பெருந்தொடக்கிலிருந்து குளிப்பதன் மூலம் அல்லது குளிக்க இயலாதவர் தயம்மத்தின் மூலம் சுத்தமாகியிருப்பதும் தொழுகையின் நிபந்தனைகளில் உள்ளதாகும்.

**அதனைக் கடமையாக்கக்கூடியது ஐந்து விடயங்களாகும்.** (அவை பின்வருமாறு):

- விந்து வெளியாகுதல்.
- உடலுறவு கொள்ளுதல்.
- மாதவிடாய்.
- பிள்ளை பேற்று இரத்தம்.
- பிள்ளை பெறல்.

**குளிப்பின் கடமைகள் இரண்டாகும்.** (அவை பின் வருமாறு):

- பெருந்தொடக்கை நீக்குவதை நிய்யத் வைத்தல் அல்லது அது போன்றது.
- தோல், முடி உட்பட - அவை அடர்த்தியாக இருந்த போதிலும் - உடல் முழுவதையும் தண்ணீரினால் அடையவளைத்து(க் கழுவி)க் கொள்ளல்.

## (சுத்தம் செல்லுபடியாவதற்கான நிபந்தனைகள் மற்றும் தயம்மத்தின் சட்டங்கள் பற்றிய) பாடம்

**சுத்தத்தின் நிபந்தனைகள்** (பின்வருமாறு):

- முஸ்லிமாக இருத்தல்.
- பகுத்தறியக்கூடியவராக இருத்தல்.
- கழுவப்படும் உறுப்பிற்கு தண்ணீர் செல்வதைத் தடுக்கக்கூடியது இல்லாதிருத்தல்.
- (தண்ணீரை) ஓடவிடுதல்.
- தண்ணீர் (இன்னொன்றைச்) சுத்தப்படுத்தக் கூடியதாக ஆகியிருத்தல். அதாவது தண்ணீரு க்கு அவசியமில்லாத சுத்தமான பொருள் கலப்பதன் மூலம் அதனுடைய ("தண்ணீர்" எனும்) பெயர் கலட்டப்படாமலும், நஜிஸின் மூலம் சிறிதளவேனும் மாற்றமடையாமலும் இருப்பதாகும்.

எனினும் தண்ணீர் குல்லத்தைனை விடக் குறைவாக இருந்தால் அதனுடன் மன்னிக்கப்படாத நஜிஸ் சேராமலிருப்பதும் மேலும் தொடக்கை அகற்று வதில் அல்லது நஜிஸை நீக்குவதில் அது பாவிக்கப் படாததாக இருப்பதும் நிபந்தனையிடப்படும்.

யார் தண்ணீரைப் பெற்றுக்கொள்ளவில்லையோ அல்லது யாருக்கு தண்ணீர் தீங்கிளைக்குமோ அவர் நேரம் நுழைந்து, மன்னிக்கப்படாத நஜிஸ் நீங்கியதன் பின்னால் புழுதி இருக்கும், சுத்தமான, தூய்மையான மண்ணின் மூலம் (அதனை) இடம்பெயர்த்து, முகத்தின் ஆரம்பத்தைத் தடவுவதுடன் தொழுகையின் பர்ழை ஆகுமாக்கத் தேடும் நிய்யத்தோடு முகத்திலும், இரு கைகளிலும் இரு அடிகள் கொண்டு அவ்விரண்டையும் ஒழுங்குபடுத்தியவராக தயம்மும் செய்து கொள்வார்.

## (தொடக்குள்ளவர்களுக்கு ஹறாமாக்கப்படும் விடயங்கள் பற்றிய) பாடம்

யாருடைய வுழூஉ முறிந்துவிட்டதோ அவர் மீது

- தொழுவதும்,
- தவாப் செய்வதும்,
- குர்ஆனை சுமப்பதும்,
- மற்றும் அதனை தொடுவதும் ஹறாமாகும்.

எனினும் சிறுபிள்ளை கற்றுக்கொள்வதற்காக அதனை (சுமக்க) இடம்பாடாக்கிக் கொடுக்கப்படும்.

மேலும் பெருந்தொடக்காளியின் மீது

- இவையும்,
- மற்றும் குர்ஆனை ஓதுவதும்,
- பள்ளிவாயலில் தரித்திருப்பதும் ஹறாமாகும்.

மேலும் மாதவிடாய் மற்றும் மகப்பேற்றுப் பெண் மீது

- இவையும்,

- (இரத்தம்) துண்டிப்பாவதற்கு முன்னால் நோன்பு நோற்பதும்,
- குளிப்பதற்கு முன்னால் கணவன் மற்றும் எஜமானுக்கு தொப்புளுக்கும் முழங்காலுக்கும் மத்தியில் இன்பமடைய இடம்பாடாக்கிக் கொடுப்பதும் ஹறாமாகும்.

மேலும் உடலுறவைத் தவிரவுள்ளவை ஹறாமாக மாட்டாது எனவும் கூறப்பட்டுள்ளது.

## (நஜிஸை விட்டும் சுத்தமாகுதல் மற்றும் அதனை நீக்கும் முறை பற்றிய) பாடம்

தொழுகையின் நிபந்தனைகளில் நின்றுமுள்ளது தான்:

- உடல்,
- உடை,
- இடம்,
- மற்றும் - (சட்டைப்) பையில் சுமந்திருக்கும் குப்பி போன்ற - தன்னால் சுமக்கப்பட்டதில் நஜிஸை விட்டும் சுத்தமாக இருப்பதாகும்.

எனவே அவரிலோ அல்லது அவரினால் சுமக்கப் பட்டதிலோ நஜிஸ் பட்டுவிட்டால் அவரின் தொழுகை முறிந்துவிடும். ஆனால் உடனடியாக அதனை எறிந்து விட்டாலோ அல்லது தனது காயத்தின் இரத்தத்தைப் போன்ற மன்னிக்கப்பட்டதாக இருந்தாலோ தவிர.

சுத்தமாக்கும் நீரினால் சுவை, நிறம், வாடை ஆகிய மன்னிக்கப்படாத நஜிஸின் பெறுமானத்தை நீக்குவது கொண்டும்;

மேலும் நிறமோ, சுவையோ, வாடையோ பெற்றுக் கொள்ளப்படாத (حكمية) “ஹுக்மிய்யத்”தான நஜிஸை அதன் மீது தண்ணீரை ஓட விடுவது கொண்டும்;

மேலும் (كلبية) “கல்பிய்யத்”தான (நாய், பன்றி சார்ந்த) நஜிஸை ஏழு தடவை அதில் ஒன்றில் சுத்தமான மண்ணைக்கொண்டு கலக்கப்பட்ட நிலையில் கழுவுவது கொண்டும் நஜிஸை அகற்றுவது கடமையாகும். பெறுமானத்தை நீக்கக்கூடிய(கழுவுதலான)து பலதாக இருந்த போதிலும் ஒன்றேயாகும்.

தண்ணீர் குறைவாக இருந்தால் (நஜிஸின் மீது) அது ஓடுவது நிபந்தனையிடப்படும்.

## (தொழுகையின் ஏனைய நிபந்தனைகள் பற்றிய) பாடம்

தொழுகையின் நிபந்தனைகளில் நின்றுமுள்ளது தான்:

- கிப்லஹ்வை முன்னோக்குதல்.
- தொழுகைக்கான நேரம் நுழைந்திருத்தல்.
- முஸ்லிமாக இருத்தல்.
- பகுத்தறியக்கூடியவராக இருத்தல். அதாவது ஒரு குழந்தை பேச்சை விளங்கி, அதற்கு பதில் கூறக்கூடிய வயதினை அடைந்திருத்தல்.
- (பர்ளான தொழுகையை) பர்ளென அறிந்திருத்தல்.
- அதன் பர்ழுகளில் ஒரு பர்ழை ஸுன்னத் என உறுதி கொள்ளாமலிருத்தல்.

- சுதந்திரமான பெண்ணுடைய உடம்பின் முகம் மற்றும் இரு மணிக்கட்டுகள் தவிர உள்ள அனைத்தின் தோலின் நிறத்தை மறைக்கக் கூடிய ஒன்றின் மூலமும் மேலும் ஆண் மற்றும் அடிமைப் பெண்ணுக்கு (அவர்களின்) தொப்புளுக்கும் முழங்காலிற்கும் மத்தியி லுள்ளதை மறைக்கக் கூடிய ஒன்றின் மூலமும் கீழ்புறமல்லாது அனைத்து புறத்தாலும் மறைத்தல்.

## (தொழுகையை முறிக்கும் விடயங்கள் பற்றிய) பாடம்

(பின்வரும் காரணிகளால்) தொழுகை முறிந்து விடும்.

- பேசுவதனால். அது இரு எழுத்துக்கள் அல்லது புரியவைக்கும் ஒரு எழுத்தைக் கொண்டதாக இருந்தாலும் சரியே. ஆனால் மறந்து குறைவாக(ப் பேசி) இருந்தாலே தவிர.
- அதிக செயலினால். அது சில மார்க்க அறிஞர் களிடத்தில் ஒரு ரக்அத்துக்கு போதுமான கால அளவாகும். மேலும் தொடர்ச்சியான மூன்று அசைவுகள் எனவும் கூறப்பட்டுள்ளது. எனினும் ஆதாராத்தால் முதலாவது பலமானதாகும்.
- எல்லை மீறிய அசைவினால்.
- செயல் சார்ந்த ஒரு கடமையை அதிகப் படுத்துவதனால்.
- விளையாட்டுக்கான ஓர் அசைவினால்.

- சாப்பிடுவது மற்றும் குடிப்பதனால். ஆனால் மறந்து குறைவாக இருந்தாலே தவிர.
- தொழுகையைத் துண்டிக்க நாடுவதனால்.
- அதனை துண்டிப்பதை வேறோரு விடயத்தின் மீது தொடர்புபடுத்துவதனால்.
- அதிலே (அதாவது தொழுகையை துண்டிக்கும் விடயத்தில்) தடுமாற்றம் கொள்வதனால்.
- இஹ்ராமுடைய நிய்யத்தில் சந்தேகத்துடன் ஒரு கடமை கழிவதனால் அல்லது சந்தேகத்தின் காலம் நீடிப்பதனால்.

## (அழ்ழாஹ்விடத்தில் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய நிபந்தனைகள் பற்றிய) பாடம்

அழ்ழாஹு ஸுப்ஹானஹு வதஆலாவிடத்தில் அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்சென்றவற்றுடன் (பின்வரும் விடயங்கள்) நிபந்தனையிடப்படும்.

- அதன் மூலம் அழ்ழாஹு தஆலாவின் பொருத்தத்தை மாத்திரம் நாடுதல்.
- (தொழும் நேரத்தில்) அவர் உண்ட உணவும், உடுத்திய ஆடையும், தொழுமிடமும் ஹலாலானதாக இருத்தல்.
- அதில் அவரது உள்ளம் ஒரு விநாடியேனும் அழ்ழாஹ்வை அஞ்சுதல். அவ்வாறு அது உண்டாகவில்லையென்றால் கூலியின்றி அவருடைய தொழுகை செல்லுபடியாகும்.

# (தொழுகையின் கடமைகள் பற்றிய) பாடம்

தொழுகையின் கடமைகள் பதினேழாகும். (அவை பின்வருமாறு):

**முதலாவது:** (தொழும்) செயலை உள்ளத்தினால் நிய்யத் வைத்தல். மேலும் காரணமுடையதை அல்லது நேரமுடையதை குறிப்பிடுதல். மேலும் பர்ளிலே "பர்ளு" என்பதை நிய்யத் வைத்தல்.

மேலும் சொல் ரீதியான ஒவ்வொரு கடமையையும் போன்று தனக்கு கேட்கும் விதத்தில் (الله أكبر) "அழ்ழாஹு அக்பர்" என்று கூறுதல். இது அதன் **இரண்டாவது** கடமையாகும்.

**மூன்றாவது:** சக்தியுள்ளவர் பர்ளில் நிற்றல்.

**நான்காவது:** (بسم الله) "பிஸ்மில்லாஹ்" மற்றும் (شَدّة) "ஷத்து"களுடன் பாதிஹாவை ஓதுதல். மேலும் அது தொடராகவும், ஒழுங்கு முறைப்படியும், எழுத்துக்களை அவற்றை வெளியாக்கும் இடங்களிலிருந்து வெளியாக்கியும், (أنعمت) "அன்அம்த"வுடைய (تاء) "தாஉ"விற்கு (ضم) "ழம்மு" செய்வதைப்போன்று அர்த்தத்தை மாற்றி விடக்கூடிய பிழை இல்லாமலும் இருப்பது நிபந்தனை யிடப்படும். மேலும் அர்த்தத்தை மாற்றாத பிழை ஹறாமாகும், எனினும் அது (தொழுகையை) முறித்து விடமாட்டாது.

**ஐந்தாவது:** அவருடைய இரு உள்ளங்கைகளும் அவருடைய இரு முழங்கால்களை அடையும் விதத்தில் குனிவதன் மூலம் ருகூஉ செய்தல்.

**ஆறாவது:** (سبحان الله) ‘‘ஸுப்ஹானழ்ழாஹ்’’ வினுடைய அளவு அதில் தாமதித்தல். அ(த்தாமதித்த லாகிற)து ஒவ்வொரு எலும்பும் அதனிடத்தில் ஒரே விடுத்தமாக அமைதிபெறுவதாகும்.

**ஏழாவது:** ருகூ.ஃ.விற்கு பின்னர் நிமிர்ந்து நிற்பதன் மூலம் (اعتدال) ‘‘இ.ஃ.திதால்’’ செய்தல்.

**எட்டாவது:** அதில் தாமதித்தல்.

**ஒன்பதாவது:** தனது கீழ்ப்புறத்தை மேல்புறத்தைக் கான உயர்ந்ததாக ஆக்கி, குனிந்தவராக தான் தொழுமிடத்தில் தனது நெற்றியனைத்தையும் அல்லது அதில் சிலதை திறந்த நிலையிலும் மேலும் அதன் மூலம் அழுத்தம் கொடுத்தவராக வைத்தும் தனது முழங்கால்கள், உள்ளங்கைகள், மற்றும் கால் விரல்களின் உற்பகுதிகளின் ஒரு பகுதியை வைத்தும் இரண்டு விடுத்தம் ‘‘ஸுஜூத்’’ செய்தல். மேலும் (ஷாபிஈ) மத்ஹபுக்கு வெளியிலுள்ள சில அறிஞர்கள் ‘‘ஸுஜூதில் அவ்வாறு குனிவது நிபந்தனையில்லை’’ எனக் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே அவருடைய தலை பித்தட்டைக்கான உயர்ந்திருந்தாலும் அவர்களிடத்தில் தொழுகை செல்லுபடியாகிவிடும்.

**பத்தாவது:** அதில் தாமதித்தல்.

**பதினொராவது:** இரு ஸுஜூதுகளுக்கு மத்தியில் அமர்தல்.

**பன்னிரண்டாவது:** அதில் தாமதித்தல்.

**பதின்மூன்றாவது:** இறுதி அத்தஹிய்யாத் ஓதுவதற் காகவும், அதற்கு பின்னாலுள்ள நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத் சொல்லல் மேலும் ஸலாம் சொல்லல் ஆகியவற்றிற்காகவும் உட்காருதல்.

**பதினான்காவது:** இறுதி “அத்தஹிய்யாத்’’ ஓதுதல்.

"التَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ الصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لِلّهِ السَّلامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ السَّلامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ أَشْهَدُ أَنْ لا إِلهَ إِلا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ الله"

‘‘அத்தஹிய்யாத்துல் முபாரகாதுஸ் ஸலவாதுத் தய்யிபாது லில்லாஹி அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுழ்ழாஹி வபறகாதுஹு. அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அல்லா இலாஹ இல்லழ்ழாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுழ்ழாஹ்’’ என்றோ அல்லது அதன் குறைந்த அளவையோ ஓதுவார்.

அதுவாகிறது:

"التَّحِيَّاتُ لِلّهِ سلامٌ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ سَلامٌ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ أَشْهَدُ أَنْ لا إِلهَ إِلا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ الله"

‘‘அத்தஹிய்யாது லில்லாஹி ஸலாமுன் அலைக அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுழ்ழாஹி வபறகாதுஹு. ஸலாமுன் அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அல்லா இலாஹ இல்லழ்ழாஹு வஅன்ன முஹம்மதர் ரஸூலுழ்ழாஹ்’’ என்பதாகும்.

**பதினைந்தாவது:** நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுதல். அதன் குறைந்த அளவு ‘‘அழ்ழாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்’’ (اللهم صل على محمد) என்பதாகும்.

**பதினாறாவது:** ஸலாம் கூறுதல். அதன் குறைந்த அளவு (السلام عليكم) "அஸ்ஸலாமு அலைக்கும்" என்பதாகும்.

**பதினேழாவது:** ஒழுங்கு முறைப்படி செய்தல். எனவே ருகூவிற்கு முன்னால் ஸுஜூது செய்வது போன்று வேண்டுமென்று அதனை விட்டுவிட்டால் தொழுகை முறிந்துவிடும். மேலும் அவர் மறந்து விட்டால் அதன்பால் மீளுவார். அது போன்றதில் அல்லது அதற்கு பின்னால் உள்ளதில் இருந்தாலே அன்றி. அப்போது அதன் மூலம் அவரது றக்அத் பூர்த்தியாகிவிடும். மேலும் அவர் மறந்தது வீணாகிவிடும். எனவே அவர் ருகூஉவை விட்டதை அதற்குப் பின்னாலுள்ள நிலையில் ருகூஉ செய்ததன் பின்னால் அல்லது அதற்குப் பின்னால் உள்ள ஸுஜூதிலே ஞாபகம் செய்தால் அவற்றிற்கு மத்தியில் அவர் செய்தது வீணாகிவிடும்.

## (ஜமாஅத்துத் தொழுகை மற்றும் ஜும்ஆத் தொழுகை பற்றிய) பாடம்

ஜமாஅத் தொழுகை தங்கடம் வழங்கப்படாத, பருவத்தை அடைந்த, (பிரயாணியல்லாத) தங்கியிருப்பவர்களாகிய, சுதந்திரவாசிகளான ஆண்கள் மீது (فرض كفاية) ‘‘பர்ளு கிபாயஹ்’’வாகும். மேலும் ஜும்ஆத் தொழுகை கட்டிடங்களில் வசிக்கக்கூடிய (ஊர்வாசிகளாகிய, மார்க்கக் கடமைகளைச் செய்யப்) பணிக்கப்பட்ட நாற்பது பேர்களாக இருந்தால் அவர்கள் மீது (فرض عين) ‘‘பர்ளு ஐன்’’ ஆகும். கூடாரங்களில் இருந்தால் அல்ல; ஏனெனில் கூடாரங்களுடையோர் மீது அது கடமையாகமாட்டாது.

மேலும் அவர்களிடத்தில் பூர்த்தியான நான்கு நாட்கள் - அதாவது நுழைவதன் மற்றும் வெளியாவதன் நாட்களின்றி - தங்குவதை நாடியவர் மீதும் மேலும் (ஜும்அஹ் நடைபெறும்) அந்த ஊருக்கு அண்மித்திருக்கும் (ஊரின்) ஓரப்பகுதியிலுள்ள எவர்களை உயர்ந்த சப்தமுடையவரின் அதான் அடையுமோ அவர்கள் மீதும் அது கடமையாகும்.

## (ஜும்அஹ் தொழுகை செல்லுபடியாவதற்குரிய) அதன் நிபந்தனைகள்

- ளுஹ்ருடைய நேரம்.
- அதிலே (அந்நேரத்திலே) அதற்கு (அதாவது தொழுகைக்கு) முன்பு நாற்பது பேர் செவிமடுக்கும் இரண்டு குத்பாக்கள். அவர்களுடன் அது ஜமாஅத்தாக தொழப்படல்.

- ஒரே ஊரில் அதனுடன் இன்னொன்று சேரா திருத்தல்.

அவ்விரண்டில் ஒன்று இஹ்றாம் தக்பீர் மூலம் முந்திவிட்டால் முந்தியதே செல்லுபடியாகும். பிந்தியது செல்லுபடியாகமாட்டாது. இது ஒரே இடத்தில் ஒன்று சேர்வது அவர்களுக்கு முடியுமாக இருந்தால்தான். எனவே அது சிரமமானால் முந்தியதும், பிந்தியதும் செல்லுபடியாகிவிடும்.

## இரு குத்பாக்களினதும் கடமைகள்

**அவ்விரண்டிலும்**

- அழ்ழாஹ்வைப் புகழுதல்,
- நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லல்,
- தக்வாவைக் கொண்டு ‘‘வஸிய்யத்’’ செய்தல்.

**மேலும் அவ்விரண்டிலொன்றில்**

- புரியவைக்கும் ஒரு (குர்ஆன்) வசனம்.

**மேலும் இரண்டாவதில்**

- மு.்.மின்களுக்காக துஆ செய்தல்.

## அவ்விரண்டினதும் நிபந்தனைகள்

- இரு தொடக்கை விட்டும் மேலும் உடல், இடம் மற்றும் சுமக்கப்பட்டதில் இருக்கும் நஜிஸை விட்டும் சுத்தமாக இருத்தல்.
- "அவ்ரத்தை" (அதாவது உடலில் மறைக்க வேண்டிய பகுதியை) மறைத்தல்.
- நிற்றல்.
- அவ்விரண்டிற்கு மத்தியில் உட்காருதல்.
- அவ்விரண்டின் கடமைகளுக்கு மத்தியிலும் மேலும் அவ்விரண்டிற்கும், தொழுகைக்கும் மத்தியிலும் தொடராக இருத்தல்.
- அவ்விரண்டும் அறபியில் இருத்தல்.

## (பின்பற்றித் தொழுவதன் நிபந்தனைகள் பற்றிய) பாடம்

ஜும்அஹ்விலோ அல்லது அது அல்லாததிலோ பின்பற்றித் தொழக்கூடிய ஒவ்வொருவரின் மீதும் (பின்வருபவை) கடமையாகும்.

- தனது இமாமை விட நிற்குமிடத்திலும், இஹ்றாமிலும் முந்தாமலிருத்தல். என்றாலும் இஹ்றாமில் (இமாமுடன்) சேர்ந்து செல்வது (தொழுகையை) முறித்துவிடும். ஆனாலும் அது அல்லாததிலே அது (அதாவது சேர்ந்து செல்வது) மக்ரூஹாக்கப்படும். "ஆமீன்" கூறுவதிலே தவிர.

மேலும் செயல் ரீதியான ஒரு கடமையின் மூலம் அவரை முந்துவது ஹறாமாகும்.

மேலும் செயல் ரீதியான, தொடர்படியான, நீளமான இரு கடமைகள் மூலமோ அல்லது நீளமான ஒரு கடமை மற்றும் சுருக்கமான ஒரு கடமையின் மூலமோ இமாமை விட எத்தங்கடமுமின்றி முந்துவதன் மூலம் தொழுகை முறிந்துவிடும்.

மேலும் எத்தங்கடமுமின்றி அவ்விரண்டின் மூலமும் மேலும் ஏதோ ஒரு தங்கடத்திற்காக இருந்த போதிலும் நீளமான மூன்று கடமைகளை விட அதிகமானதின் மூலமும் அவரை விட்டுப்பிந்துவதும் அவ்வாறே. (தொழுகையை முறித்துவிடும்); எனவே இமாம் ருகூஉவையும் இரு ஸுஜூதுகளையும் முடித்துக் கொண்டு அத்தஹிய்யாத்துக்காக உட்காரும் வரை அல்லது எழும்பும் வரை பாதிஹாவை பூர்த்தி செய்வதற்காக அவர் பிந்தினால் (பாதிஹாவைப் பூர்த்தி செய்வதை விட்டுவிட்டு) இமாம் எதிலே இருக்கின்றாரோ அதிலே அவரைத் துயர்வார். இன்னும் இமாமுடைய ஸலாத்திற்குப் பின்னால் ஒரு றக்அத்தைக் கொண்டு வருவார். மேலும் அதற்கு முன்னால் அதனை பூர்த்தி செய்துவிட்டால் தனது ஒழுங்கின் பிரகாரம் செல்வார்.

- தனது இமாமின் நகர்கவுளை அறிதல்.
- பள்ளிவாயலிலோ அவ்வாறில்லையானால் முந்நூறு கைமுழ தூரத்திலோ அவ்விருவரும் ஒன்று சேர்ந்திருத்தல்.
- (இமாமளவில்) நடந்து செல்வதைத் தடுக்கும் ஒரு திரை அவ்விருவருக்கும் மத்தியில் இல்லாமலிருத்தல்.
- அவ்விருவரினதும் தொழுகையின் ஒழுங்க மைப்பு நேர்பட்டிருத்தல். எனவே ஜனாஸாத் தொழுகை(யைத் தொழக் கூடியவரு)க்குப்

பின்னால் பர்ளுத் தொழக்கூடியவரின் பின் பற்றுதல் செல்லுபடியாகமாட்டாது.

- - முதலாவது அத்தஹிய்யாத்தில் உட்காருவ தைப் போன்று - செய்வதால் மற்றும் - மறதிக் கான ஸுஜூதைப் போன்று - விடுவதால் மாற்றம் செய்வது எதிலே மிக மோசமாகுமோ அத்தகைய சுன்னத்தில் இமாமுக்கு மாற்றம் செய்யாதிருத்தல்.
- ஜும்அஹ்விலே இஹ்றாம் தக்பீருடனும், அது அல்லாததிலே (இமாமைப்) பின் தொடர் வதற்கும், நீண்ட எதிர்பார்ப்பிற்கும் முன்னர் பின்பற்றுவதை நிய்யத் வைத்தல்.

ஜும்அஹ்விலும், (معادة) ‘‘முஆதஹ்’’விலும் இமாமத்தை நிய்யத் வைப்பது இமாம் மீது கடமையாகும். அவ்விரண்டும் அல்லாதவைகளில் ஸுன்னத்தாகும்.

(معادة) ‘‘முஆதஹ்’’ என்பது ஒருவர் ஜமாஅத்தாக வோ அல்லது தனியாகவோ தொழுததன் பின்னால் இரண்டாவது தடவையாக ஜமாஅத்தாகத் தொழக்கூடிய தொழுகையாகும்.

## (மரணித்தவருக்கு செய்யவேண்டிய கடமைகள் பற்றிய) பாடம்

மரணித்தவர் உயிருடன் பிறந்த ஒரு முஸ்லிமாக இருந்தால்

- அவரைக் குளிப்பாட்டுவதும்,
- (كفن) ‘‘கபன்’’ செய்வதும்,
- அவர் மீது தொழுகை நடாத்துவதும்,
- அவரை அடக்கம் செய்வதும் (فرض كفاية) ‘‘பர்ழு கிபாயஹ்’’வாகும்.

மேலும் (ذمي) ‘‘திம்மிக்’’காபிரை

- (كفن) ‘‘கபன்’’ செய்வதும்,
- அடக்கம் செய்வதும்,

மேலும் உயிரற்ற சிசுவை

- குளிப்பாட்டுவதும்,
- (كفن) ‘‘கபன்’’ செய்வதும்,
- அடக்கம் செய்வதும் கடமையாகும்.

ஆனால் அவ்விருவருக்கும் தொழுகை நடாத்தப் படமாட்டாது.

காபிர்களுடனான போரிலே அதன் காரணமாக மரணித்தவர் அவருடைய ஆடைகளிலே (كفن) ‘‘கபன்’’ செய்யப்படுவார். அவை அவருக்குப் போதாவிட்டால் அதை விட அதிகரிக்கப்படும். மேலும் அடக்கம் செய்யப் படுவார். அவர் குளிப்பாட்டப்படவோ, அவருக்கு தொழுகை நடாத்தப்படவோ மாட்டாது.

**குளிப்பாட்டுவதன் குறைந்தபட்சமானது:** நஜிஸை நீக்கி, அவருடைய தோல் மற்றும் அவருடைய முடி - அது அடர்த்தியாக இருந்தபோதிலும் - அனைத்தையும் சுத்தமாக்கும் நீரினால் ஒரு முறை அடைய வளைத்துக்கொள்ளல்.

**(كفن) "கபன்" செய்வதன் குறைந்த பட்சமானது:** முழு உடம்பையும் மறைக்கக்கூடியதும் மேலும் தனது கடனை விட மேலதிகமானதை விட்டுச் சென்று, மூன்று சுத்துக்களை விடும்படி "வஸிய்யத்" செய்யாதவருக்கு அவைகளும் (அதாவது மூன்று சுத்துகளும்).

**அவருக்காகத் தொழுவதன் குறைந்த பட்சமானது:**

- அவருக்காகத் தொழும் செயலையும், பர்ளு என்பதையும் நிய்யத் வைப்பது மேலும் (ஜனாஸஹ் தொழுகையைத் தொழுவதெனக்) குறிப்பிடுவது.
- மேலும் சக்திபெற்றிருந்தால் நின்ற நிலையில் (الله أكبر) "அழ்ழாஹு அக்பர்" எனச் சொல்வது.
- பிறகு பாதிஹாவை ஓதுவது, பிறகு (الله أكبر) "அழ்ழாஹு அக்பர்" எனச் சொல்வது.
- பிறகு (اللهم صل على محمد) "அழ்ழாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்" எனச் சொல்வது.
- பிறகு (الله أكبر ، اللهم اغفر له وارحمه) "அழ்ழாஹு அக்பர், அழ்ழாஹும்ம.்.பிர்லஹு வர்ஹம்ஹு" எனச் சொல்வது.

- பிறகு (الله أكبر ، السلام عليكم) "அழ்ழாஹு அக்பர், அஸ்ஸலாமு அலைக்கும்" எனச் சொல்வது.

மேலும் தொழுகையின் நிபந்தனைகளும் இன்னும் (அதனை) முறிக்கக்கூடியவற்றை விடுவதும் அதிலே அவசியமாகும்.

**அடக்கம் செய்வதன் குறைந்தபட்சமானது:** நாற்றத்தை மறைத்து, மிருகங்களிடமிருந்து அதனை பாதுகாக்கும் ஒரு குழியாகும். மேலும் (ஒருவர்) நின்று (கைகளை உயர) விரிக்குமளவு அது தாட்டப்படுவதும், விசாலமாக்கப்படுவதும் ஸுன்னத்தாகும். மேலும் "கிப்லஹ்"வின் பக்கம் அதனை முன்னோக்கி வைப்பதும் கட்டாயமாகும். மேலும் கல்லறை மாடத்தில் அடக்குவது ஆகுமாக மாட்டாது.

# ஸகாத்

## (ஸகாதின் சட்டங்கள் பற்றிய) பாடம்

(பின்வருவனவற்றில்) ஸகாத் கொடுப்பது கடமையாகும்.

- ஒட்டகம்.
- மாடு.
- ஆடு.
- ஈத்தம் பழம்.
- திராட்சை.
- விருப்பு நிலையில் உட்கொள்ளப்படும் தானியங்கள்.
- தங்கம்.
- வெள்ளி.
- அவ்விரண்டின் சுரங்கம்,
- மற்றும் புதையல்.
- வியாபாரச் சரக்குகள்.
- மேலும் (உடம்பிற்குரிய ஸகாதாகிய) (زكاة الفطر) "ஸகாதுல் பித்ர்".

## (கால்நடைகளில் ஸகாத் கடமையாகுவதற்குரிய நிபந்தனைகள்)

- (ஸகாத் கடமையாகும்) ஆரம்ப அளவு: ஒட்டகத்தில் ஐந்தும், மாட்டில் முப்பதும், ஆட்டில் நாற்பதுமாகும். எனவே அதற்கு முன் (அவற்றில்) ஸகாத் கிடையாது.

- இன்னும் அதற்குப் பின் ஒரு வருடம் (கழிவது) அவசியமாகும்.
- மேலும் ஆகுமான மேய்ச்சல் தளத்தில் மேய்வது அவசியமாகும். அதாவது அவற்றின் உரிமையாளர் அல்லது அவர் அனுமதியளித்தவர் உரிமையாளரற்ற (ஆகுமான) மேய்ச்சல் தளத்திலே அவற்றை மேய்ப்பதாகும்.
- மேலும் அவை வேலை செய்யக்கூடியதாக இல்லாமலிருப்பதும் அவசியமாகும். எனவே உழுதல் போன்றவற்றில் வேலை செய்யக் கூடியதில் ஸகாத் கிடையாது.

எனவே ஒவ்வொரு ஐந்து ஒட்டகங்களில் ஒரு ஆடும், நாற்பது ஆடுகளில் ஒரு வயதை அடைந்த பெண் செம்மறியாடு அல்லது இரு வயதை அடைந்த பெண் வெள்ளாடும், முப்பது மாடுகளில் ஒரு வயதை அடைந்த ஆண் மாடும் கடமையாகும்.

பின்பு அவரது கால்நடை அதை விட அதிகரித்து விட்டால் அம்மேலதிகமானதிலும் (ஸகாத் உள்ளது). மேலும் அவற்றில் அழ்ழாஹு தஆலா அவருக்கு கடமையாக்கியவற்றை கற்றுக்கொள்வது அவர் மீது அவசியமாகும்.

## (பேரீத்தம்பழம், திராட்சை, தானியங்களில் ஸகாத் கடமையாவதற்குரிய நிபந்தனைகள்)

- பேரீத்தம்பழம், திராட்சை மற்றும் தானியங்களின் ஆரம்ப அளவு ஐந்து (وسق) “வஸக்” களாகும். அவை ﷺ அவர்களின் (صاع) “ஸாஉ”வின் பிரகாரம் முந்நூறு (صاع) “ஸாஉ”

களாகும். அதனுடைய அளவுகோல் (தற்போதும்) ஹிஜாஸில் உள்ளது.

- மேலும் அளவைப் பூர்த்தி செய்வதில் ஒரு வருடத்தின் விளைச்சலில் சிலது மற்றும் சிலதுடன் இணைக்கப்படும். ஆனாலும் - கோதுமையுடன் தொலிக் கோதுமையைப் போன்று - ஒரு இனம் இன்னுமொரு இனத்தின் மூலம் பூர்த்தியாக்கப்படமாட்டாது.
- மேலும் (சாப்பிடுவதற்குரிய) பருவம் வெளிப்படு வதன் மூலமும் தானியம் முத்துவதன் மூலமும் (அவற்றில்) ஸகாத் அவசியமாகும்.
- மேலும் செலவீனத்தின் மூலம் நீர் பாய்ச்சப்படா விட்டால் பத்தில் ஒன்றும் அதன் மூலம் நீர் பாய்ச்சப்பட்டால் அதில் அரைவாசியும் அதிலே கடமையாகும்.

மேலும் (ஸகாத் கடமையாகும்) அளவை விட மேலதிகமானதிலிருந்து அதன் பங்கின் பிரகாரம் வெளியாக்கப்படும். மேலும் அளவை விடக் குறைந்ததில் நன்மையை நாடி செய்தாலே தவிர ஸகாத் கிடையாது.

## (தங்கம், வெள்ளியில் ஸகாத் கடமையாவதற்குரிய நிபந்தனைகள்)

- தங்கத்தின் (ஸகாத் கடமையாகும்) அளவு இருபது (مثقال) ''மிஸ்கால்''களும், வெள்ளியின் அளவு இருநூறு (درهم) ''திர்ஹம்''களுமாகும்.
- மேலும் அவ்விரண்டிலும் பத்தில் ஒன்றில் நான்கில் ஒன்று (அதாவது நாற்பதில் ஒன்று) கடமையாகும்.

- மேலும் (அவற்றை விட) மேலதிகமானதில் அதன் கணக்கை கொண்டாகும்.
- மேலும் அவ்விரண்டிலும் ஒரு வருடம் (கழிவது) அவசியமாகும்; சுரங்கம் அல்லது புதையலில் கிடைத்தவற்றைத் தவிர. அப்போது அதனை உடனடியாக வெளியாக்குவார். மேலும் புதையலில் ஐந்தில் ஒன்று (கடமையாக) இருக்கிறது.

## (வியாபாரப் பொருட்களில் ஸகாத் கடமையாவதற்குரிய நிபந்தனைகள்)

வியாபாரத்தின் ஸகாத் (கடமையாகும்) அளவு இரு நாணயத்திலிருந்தும் எதன் மூலம் அது வாங்கப்பட்டதோ அதன் அளவாகும்.

இரு நாணயங்களுமாவன அவை தங்கம் மற்றும் வெள்ளியாகும்.

அது வருடத்தின் கடைசியிலேயன்றி கணக்கெடுக் கப்படமாட்டாது. மேலும் அதிலே பெறுமதியின் பத்தில் ஒன்றில் நான்கில் ஒன்று அவசியமாகும்.

மேலும் (பலரின் பொருட்களைக்) கலப்பதன் நிபந்தனைகள் பூர்த்தியாகிவிட்டால் கலந்த இருவரின் அல்லது பலரின் பொருள் அளவிலும், வெளியாக்கப் படுவதிலும் தனியொருவரின் பொருளைப் போன்றாகும்.

## (زكاة الفطر) "ஸகாதுல் பித்ரி"ன் சட்டங்கள்)

(زكاة الفطر) "ஸகாதுல் பித்ர்" றமழான் மற்றும் ஷவ்வாலுடைய ஒரு பகுதியை அடைவதன் மூலம் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அவருக்காகவும் மற்றும் எவர்களுக்கு செலவு செய்வது அவர் மீது கடமையோ அவர்கள் முஸ்லிம்களாக இருந்தால் அவர்களுக்காக வும், அவருடைய கடன், ஆடை, வசிப்பிடம் மற்றும் பெருநாளுடைய பகல் இன்னும் அதனுடைய இரவிலே அவருடைய உணவு மேலும் எவர்களுக்கு செலவளிப்பது அவர் மீது கடமையோ அவர்களுடைய உணவை விடவும் மேலதிகமாக இருந்தால் ஊரின் பெரும்பான்மையான உணவிலிருந்து ஒவ்வொருவருக் காகவும் ஒரு (صاع) "ஸாஉ" என்ற அடிப்படையில் கடமையாகும்.

அனைத்து வகையான ஸகாத்திலும் வெளியாக்கப் படும் அளவை வேறுபடுத்துவதோடு நிய்யத் வைப்பது அவசியமாகும்.

மேலும் எட்டுக் கூட்டங்களிலிருந்து பொருளிருக் கும் ஊரில் உள்ளவர்களுக்கு அதனைக் கொடுப்பது கடமையாகும்.

(அக்கூட்டத்தினர்)

- **"அல்-புகராஉ":** (பகீர்கள்: தங்களுக்கு அத்தியவசியமான தேவைகளின் அரைப் பகுதியைக் கூட பெற்றுக் கொள்ளாதவர்கள்).
- **"அல்-மஸாகீன்":** (மிஸ்கீன்கள்: தங்களுக்கு அத்தியவசியமான அனைத்து தேவைகளையும் பெற்றுக் கொள்ளாவிட்டாலும் அவற்றில் அரைப்பகுதியை மாத்திரம் பெற்றுக் கொள்பவர்கள்).

- **“அல்-ஆமிலூன அலைஹா”:** (அதற்காக உழைப்பவர்கள்: அதாவது அவர்கள் எந்த ஊதியமுமின்றி ஸகாத்தை வசூலிக்க கலீபாவி னால் நியமிக்கப்பட்டவர்கள்).
- **“அல்-முஅல்லபது குலூபுஹும்”:** (இவர்கள் புதிதாக இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களுடன் அண்டிப்பழகாததினால் வெறுட்சியை உணர் பவர்கள்).
- **“அர்ரிகாப்”:** (முன்னுரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள்).
- **“அல்-காரிமூன்”:** அவர்கள் (கடனை) நிறை வேற்ற இயலாத கடனாளிகள்.
- **“பீ ஸபீலில்லாஹ்”:** அவர்கள் (ஊதியத்தை எதிர்பாராமல் தன்னிச்சையாகச் சேவை செய்யும்) தொண்டர்களான போர்வீரர்கள். **அதன் அர்த்தம் அனைத்து நற்காரியங் களுமல்ல.**
- **“இப்னுஸ்ஸபீல்”:** அவர் நாடும் இடத்தின் பக்கம் அவரை கொண்டு சேர்க்கக்கூடியது அவரோடு இல்லாத பயணி.

எனவே இவர்களல்லாதோருக்கு அதனைக் கொடுப்பது கூடாது மற்றும் அது செல்லுபடியுமாகாது.

## (நோன்பின் சட்டங்கள் பற்றிய) பாடம்

றமழான் மாதத்தில் நோன்பு நோற்பது (மார்க்கக் கடமைகளைச் செய்யப்) பணிக்கப்பட்ட முஸ்லிமான ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும். மேலும் அது மாதவிடாய் மற்றும் பிள்ளைப்பேற்றுப் பெண்களிடமிருந்து செல்லுபடியாகாது. எனவே அவ்விருவரின் மீதும் “கழாஉ” செய்வது கட்டாயமாகும்.

மேலும் கஸ்ருடைய பிரயாணத்தை[21] மேற் கொள்ளும் பிரயாணிக்கு நோன்பு நோற்பது சிரமமில்லாவிட்டாலும் அவர் நோன்பை விடுவது ஆகுமாகும்.

மேலும் நோயாளி, கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண் ஆகிய தன்னால் சுமக்க முடியாத சிரமமுள்ளவர்களுக்கு நோன்பை விடுவது (ஆகுமாக) உள்ளது. எனினும் அவர்கள் மீது “கழாஉ” செய்வது அவசியமாகும்.

- ஒவ்வொரு நாளுக்காகவும் நிய்யத்தை இரவில் நிகழச்செய்வதும்,
- (அதனைக்) குறிப்பாக்குவதும்,
- மேலும் உடலுறவு,
- கை போன்றதன் மூலம் விந்தை வெளி யேற்றுதல்,
- வாந்தி எடுத்தல்,
- மதம் மாறுதல்,

(21). சுருக்கித் தொழ அனுமதிக்கப்பட்ட பிரயாணம்.

- மற்றும் சுரக்குமிடத்திலிருந்து உண்டான அவருடைய தூய்மையான, சுத்தமான உமிழ்நீரைத் தவிர பருமனுள்ள பொருளொன்று உட்செல்லல் ஆகியவற்றை விட்டும் தவிர்ந்தி ருப்பதும்,
- ஒரு விநாடியேனும் பைத்தியம் ஏற்படாமலிருப்ப தும்,
- பகல் முழுவதும் மயக்கமுறாமலிருப்பதும் அவசியமாகும்.

மேலும் இருபெருநாட்கள் மற்றும் தஷ்ரீகுடைய நாட்களில் நோன்பு நோற்பது செல்லுபடியாகமாட்டாது. அவ்வாறுதான் சந்தேகத்துக்குரிய நாளும், ஷ.ஃ.பானு டைய கடைசிப் பாதியும்; அதற்கு முன்னுள்ளதுடன் அதனை சேர்த்தாலோ அல்லது “கழாஉ” செய்வதற் காக வேண்டி, அல்லது நேர்ச்சைக்காக வேண்டி அல்லது (ورد) “விர்து”க்காக வேண்டி இருந்தாலோ தவிர.

ரமழானின் ஒரு நாளின் நோன்பை விடுவதற்கு அவருக்கு எச்சலுகையும் இல்லாத நிலையில் உடலுறவின் மூலம் எவர் பாழாக்குவாரோ அவர் மீது பாவமும், உடனடியாக “கழாஉ” செய்வதும், (ظهار) “ழிஹாரு”டைய குற்றப்பரிகாரமும் அவசியமாகும். அதுவாகிறது: ஓர் அடிமையை உரிமையிடுதல். (அதற்கு) சக்தி பெறாவிட்டால் தொடர்ச்சியாக இரு மாதங்கள் நோன்பு நோற்றல். (அதற்கும்) சக்தி பெறாவிட்டால் அறுபது மிஸ்கீன்களுக்கு உணவளித்த லாகும். அதாவது அவர்களில் ஒவ்வொரு வருக்கும் ஊரின் பெரும்பாலான உணவிலிருந்து ஒரு (مد) “முத்தை” உடந்தையாக்குவதாகும்.

# ஹறஜ்

## (ஹஜ் மற்றும் உம்றஹ்வுடைய சட்டங்கள் பற்றிய) பாடம்

ஹஜ்ஜும் உம்றஹ்வும் (இஸ்லாமியக் கடமைகளைச் செய்யப்) பணிக்கப்பட்ட, சுதந்திர, முஸ்லிமான தன்னை (மக்காவுக்குக்) கொண்டு சேர்த்து தனது நாட்டுக்கு திருப்பியனுப்பக்கூடியதன் மூலம் சக்தி பெற்றவர் மீது அவருடைய கடன் மற்றும் அவருக்குத் தகுதியான இடம், ஆடை மேலும் அவர் போய் திரும்பக்கூடிய காலத்தில் எவருடைய செலவீனம் அவர் மீது கடமையோ அவருடைய செலவை விடவும் மேலதிகமாக இருக்கக்கூடிய நிலையில் வாழ்வில் ஒரு தடவை கடமையாகும்.

**ஹஜ்ஜின் ‘‘ருக்ன்’’கள் ஆறாகும்.** (அவை பின்வருமாறு):

**முதலாவது:** இஹ்றாம் நிய்யத் வைத்தல். அது ‘‘ஹஜ் அல்லது உம்றஹ் செய்வதில் நுழைந்துவிட்டேன்’’ என்று உள்ளத்தினால் கூறிக்கொள்வதாகும்.

**இரண்டாவது:** அறபாவுடைய நாள் (உச்சியிலிருந்து) சூரிய சாய்விற்கும், பெருநாள் இரவு பஜ்ருக்கும் மத்தியில் அறபாவில் தரித்தல்.

**மூன்றாவது:** க.்.பாவை வலம் வருதல்.

**நான்காவது:** ஸபா, மர்வஹ்விற்கு மத்தியில் ஒரு எல்லையிலிருந்து மற்ற எல்லை வரை ஏழு முறை தொங்கோட்டம் ஓடுதல்.

**ஐந்தாவது:** (முடியை) சிரைத்தல் அல்லது கத்தரித்தல்.

**ஆறாவது:** பெரும்பான்மையான ‘‘ருக்ன்’’களை ஒழுங்கு முறைப்படி செய்தல்.

(அறபாவில்) தரிப்பதைத் தவிரவுள்ள இவை அனைத்தும் உம்றஹ்வினதும் ‘‘ருக்ன்’’களாகும்.

இந்த ‘‘ருக்ன்’’களுக்கு சில பர்ழ்களும், நிபந்தனைகளும் உள்ளன. அவற்றை கவனிப்பது அவசியமாகும்.

(குறிப்பிட்ட) தூரத்தைக் கடப்பது தவாபிற்கு நிபந்தனையிடப்படும். அது ‘‘ஹஜருல் அஸ்வதி’’லிருந்து ‘‘ஹஜருல் அஸ்வத்’’ வரை ஏழு விடுத்தங்களாகும்.

மேலும் ‘‘அவ்ரத்’’தை மறைப்பதும், சுத்தமாக இருப்பதும், க.்.பஹ்பாவை முன்னோக்காமலும் பின் னோக்காமலும் தனது இடப்புறத்தில் ஆக்கிக் கொள்வதும் அதன் நிபந்தனைகளிலுள்ளதாகும்.

**இஹ்ராம் நிய்யத் வைத்த ஒருவர் மீது (பின்வருபவை) ஹறாமாகும்:**

- நறுமணம்.
- தலை மற்றும் தாடிக்கு எண்ணெய் அல்லது கரையக்கூடிய கொழுப்பு மற்றும் தேன்மெழுகு மூலம் பூசுதல்.
- நகம் மற்றும் முடியை நீக்குதல்.
- உடலுறவு மற்றும் அதன் துவக்க செயல்கள்.
- திருமண ஒப்பந்தம்.
- சாப்பிடப்படும் தரைவாழ் காட்டு விலங்குகளை வேட்டையாடுதல்.
- ஒரு ஆணுக்கு: அவரது தலையை மறைத்தல் மேலும் தையலினால் அல்லது ஒட்டுவதனால்

அல்லது அவை போன்றதினால் சூழப்பட்டதை அணிதல்.

- இஹ்றாம் நிய்யத் வைத்த ஒரு பெண்ணுக்கு: அவளது முகத்தை மூடுதல் மற்றும் கையுறை.

யாராவது இந்த ஹறாமாக்கப்பட்ட விடயங்களில் ஒன்றை செய்தால் அவர் மீது பாவமும், தெண்டமும் இருக்கின்றது. எனினும் உடலுறவு ஹஜ்ஜை பாழாக்கு வதையும், உடனடியாகக் ‘‘கழாஉ’’ செய்வது மற்றும் பாழாகியதை பூர்த்திசெய்வதின் அவசியத்தையும் (அத்தோடு) அதிகப்படியாக்கிவிடும். எனவே எவர் தனது ஹஜ்ஜை உடலுறவு மூலம் பாழாக்குவாரோ அவர் அதனை இடைநிறுத்தாமல் தொடர்ச்சியாகச் செய்து முடித்து, பின்பு அடுத்த வருடம் அதைக் ‘‘கழாஉ’’ செய்வார்.

**மேலும் (பின்பருபவை) வாஜிபாகும்:**

- (ميقات) ‘‘மீகாதி’’லிருந்து இஹ்ராமுடைய நிய்யத்தை வைத்தல். ‘‘மீகாத்’’ எனப்படுவது இஹ்ராமிற்காக றஸூலுழ்ழாஹி ﷺ அவர்கள் குறிப்பாக்கிய இடமாகும். மதீனா வாசிகளுக்கும், அவர்களின் பாதையினூடாக செல்பவர்களுக்கும் (ذو الحليفة) ‘‘துல்ஹுலைபா’’ எனப்படும் பூமியைப் போன்று.
- ஒரு கருத்தின் படி ஹஜ்ஜில் (مزدلفة) ‘‘முஸ்தலிபா’’வில் இராத்தரித்தல்.
- மேலும் ஒரு கருத்தின் படி (منى) ‘‘மினா’’விலும்.

இன்னொரு கருத்தின் பிரகாரம் அவ்விரண்டும் வாஜிபாக மாட்டாது.

- பெருநாளுடைய நாளன்று (جمرة العقبة) "ஜம்ரதுல் அகபா"வுக்கு கல்லெறிதல்.
- (أيام التشريق) "அய்யாமுத்தஷ்ரீகு"டைய நாற்களில் மூன்று "ஜம்ராஹ்"களுக்கும் கல்லெறிதல்.
- மத்ஹபின் ஒரு கூற்றின் பிரகாரம் (طواف الوداع) "தவாபுல்-வதாஉ" (பிரியாவிடைத்தவாப்).

இந்த ஆறு விடயங்களும் அவற்றை யார் செய்யவில்லையோ அவருடைய ஹஜ் பாழாகமாட்டாது. அவர் மீது இருப்பதெல்லாம் பாவமும் தெண்டமுமாகும். முன்சென்ற "ருக்ன்"களுக்கு மாற்றமாக; ஏனெனில் அவைகளின்றி ஹஜ் உண்டாகமாட்டாது. அவற்றை எவர் விடுவாரோ அதனை (دم) "தம்" - அதாவது ஆட்டை அறுப்பது - அடைத்துவிடமாட்டாது.

இரு ஹறத்தினுடைய வேட்டைப் பிராணி மற்றும் அதன் தாவரம் இஹ்றாமுடைய நிய்யத் வைத்தவர் மீதும், வைக்காதவர் மீதும் ஹறாமாகும். மக்கா தெண்டம் அவசியமாகுவதை (அத்தோடு) அதிகப்படி யாக்கும். எனவே மதீனாவுடைய ஹறத்தின் வேட்டைப் பிராணியிலும், அதன் தாவரத்தை வெட்டுவதிலும் தெண்டம் கிடையாது.

மேலும் மதீனாவுடைய ஹறமாகிறது (عير) "அய்ர்" மலைக்கும் மற்றும் (ثور) "ஸவ்ர்" மலைக்கும் மத்தியிலுள்ளதாகும்.

# கொடுக்கல் வாங்கல்

# கொடுக்கல், வாங்கல்

## (அதன் முக்கியத்துவம் மற்றும் சில சட்டங்கள் பற்றிய) பாடம்

அழ்ழாஹு தஆலா எதனை ஹலாலாக்கி இருக்கின்றான் மற்றும் எதனை ஹறாமாக்கி இருக்கின்றான் என்பதை அறியும் வரை எந்தவொரு விடயத்திலும் நுழையாமல் இருப்பது (இஸ்லாமியக் கடமைகளைச் செய்யப்) பணிக்கப்பட்ட முஸ்லிமான ஒவ்வொருவர் மீதும் அவசியமாகும். ஏனெனில் அழ்ழாஹு சுப்ஹானஹு வதஆலா எங்களை சில விடயங்களைக் கொண்டு பணித்திருக்கின்றான். எனவே அவன் எங்களை பணித்திருக்கின்றவற்றை கவனிப்பது அவசியமாகும்.

மேலும் அவன் வியாபாரத்தை ஹலாலாகவும், வட்டியை ஹறாமாகவும் ஆக்கியுள்ளான். மார்க்கம் அவ்வியாபாரத்தை ("அல்" எனும்) குறிப்பாக்கும் குறியீட்டின் மூலம் ("அவ்வியாபாரம்" என) வரையறைப் படுத்தியுள்ளது. ஏனெனில் அனைத்து வியாபாரங்களும் ஹலாலாகமாட்டாது. நிபந்தனைகளையும் கடமைகளை யும் பூர்த்தியாக்கிக் கொண்டவற்றைத் தவிர. எனவே அவற்றைக் கருத்தில் கொள்வது அவசியமாகும்.

எனவே கொடுக்கல் வாங்கலை நாடக்கூடியவர் மீது அவற்றை கற்றுக்கொள்வது அவசியமாகும்; இல்லாவிடில், விரும்பியோ விரும்பாமலோ அவர் வட்டியை சாப்பிட்டுவிடுவார்.

றஸூலுழ்ழாஹி ﷺ அவர்கள் "உண்மையான வியாபாரி கியாமத் நாளில் நபிமார்கள், உண்மையாளர்

கள் மற்றும் ஷுஹதாக்களுடன் ஒன்று சேர்க்கப்படுவார்'' எனக் கூறியுள்ளார்கள்.[22]

இது ஒப்பந்தங்களை மார்க்க முறைப்படி நிறை வேற்றுவதற்காக தனது ஆத்மாவுடனும், ஆசையுடனும் போராடுவதில் மற்றும் அதனை அடக்குவதில் நின்றும் அவர் சந்தித்த ஒன்றுக்காகவேண்டியாகும்.

அவ்வாறில்லையானால் வரையறைகளை மீறக் கூடியவர்களுக்கு அழ்ழாஹ் எச்சரித்தது மறைவான தல்ல.

மேலும் வாடகை, முதலீடு, அடமானம், பிரதி நிதித்துவம், வைப்பு, இரவல், கூட்டு, (பேரீட்சை, திராட்சைப் பயிரைப்) பராமரிப்பு போன்ற எஞ்சிய ஒப்பந்தங்களும் அவ்வாறே. அவற்றின் நிபந்தனைகள் மற்றும் கடமைகளைக் கவனிப்பதும் அவசியமாகும்.

அவற்றை இழப்பதனால் ஏற்படக்கூடியதை விட்டும் எச்சரிக்கையாக இருப்பதற்காக வேண்டி திருமண ஒப்பந்தம் மேலதிக பேணுதல் மற்றும் உறுதிப்பாட்டின் பால் தேவையாகின்றது.

இதனை சங்கையான குர்ஆன் அழ்ழாஹு தஆலாவு டைய ﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ قُوٓاْ أَنفُسَكُمۡ وَأَهۡلِيكُمۡ نَارٗا وَقُودُهَا ٱلنَّاسُ وَٱلۡحِجَارَةُ﴾[23]

("ஈமான் கொண்டவர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் நரகை விட்டும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதன் எரிகொல்லி மனிதர்களும் கற்களுமாகும்") எனும் கூற்றின் மூலம் சுட்டிக்காட்டு கின்றது.

(22). திர்மிதி: எண்: 1209.
(23). சூறதுத் தஹ்ரீம் (06)

(இதனை விளக்குகையில்) அதா.·. றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் ‘‘நீர் எவ்வாறு தொழுவது மேலும் எவ்வாறு நோன்பு நோற்பது மேலும் எவ்வாறு விற்பது மற்றும் வாங்குவது மேலும் எவ்வாறு திருமணம் முடிப்பது மேலும் எவ்வாறு ‘‘தலாக்’’ சொல்வது என்பதை நீர் கற்றுக் கொள்வதாகும்’’ எனக் குறிப்பிட்டுள்ளார் கள்[24].

(24). ‘‘அல்பகீஹு வல்முதபக்கிஹ்’’: (1/49).

# வட்டி
# (வட்டியின் சட்டங்கள் பற்றிய)
# பாடம்

வட்டி: அதன் ஒப்பந்தம் மேலும் அதன் பயன் மேலும் அதனை எடுத்தல் மற்றும் எழுதுதல் மேலும் அதற்கு சாட்சி சொல்லுதல் என்பன ஹறாமாகும்.

அது: தங்கம், வெள்ளியில் ஒன்றை மற்றொன் றுக்குப் பகரமாக தவணையடிப்படையிலோ,

அல்லது ஒருவருக்கொருவர் கைப்பற்றாமலோ,

அல்லது அதனுடைய இனத்துக்கு பகரமாக அவ்வாறே: தவணையடிப்படையிலோ,

அல்லது ஒருவருக்கொருவர் கைப்பற்றாமல் பிரிந்தோ,

அல்லது இரு பகுதியின் ஒன்றில் மற்றதை விட நிறையில் மேலதிகமிருப்பதுடன் ஏற்றத்தாழ்வுடனோ விற்பதாகும்.

உணவாக உட்கொள்ளப்படுபவைகளில் சிலது சிலதுடன் அவ்வாறே; அதாவது: தொழிக்கோதுமையுடன் கோதுமையைப் போன்று இனம் வேறுபட்டிருக்கும்போது தவணையில்லாமலிருத்தல் மற்றும் ஒருவருக்கொருவர் கைப்பற்றுவதற்கு முன்னாள் பிரியாமலிருத்தல் ஆகிய இரு நிபந்தனைகளைக் கொண்டேயன்றி அவற்றை வியாபாரம் செய்வது ஹலாலாகமாட்டாது. மேலும் இனம் ஒன்றுபட்டிருக்கும்போது (இரு பொருள்களும்) சமமாக இருப்பதுடன் இவ்விரு நிபந்தனைகளும் நிபந்தனையிடப் படும்.

## (ஹறாமாக்கப்பட்ட சில வியாபாரங்கள் பற்றிய) பாடம்

**(பின்னால் குறிப்பிடப்படும் வியாபாரங்கள்) ஹறாமாகும்:**

- ஒருவர் தான் கைப்பற்றாததையும்,
- மேலும் பிராணிக்கு பதிலாக இறைச்சியையும்,
- கடனுக்கு பதிலாகக் கடனையும் விற்றல்.
- மேலும் (بيع الفضولي) ‘‘பைஉல் புழூலி’’. அதாவது தனக்கு உடந்தையோ, அதிகாரமோ இல்லாத ஒன்றை விற்றல்.
- மேலும் காணாத ஒன்றையும் (விற்றல்). எனினும் ஷாபிஈ (றஹிமஹுல்லாஹ்) அவர்களின் ஒரு கூற்றின் பிரகாரம் (அதனை) வர்ணிப்பதுடன் ஆகுமாகும்.

மேலும் (இஸ்லாமியக் கடமைகளைச் செய்யப்) பணிக்கப்படாதவர் விற்பதும், வாங்குவதும் செல்லுபடியாகாது. அதாவது பைத்தியக்காரர் மற்றும் சிறு பிள்ளையின் வியாபாரம் செல்லுபடியாகாது. எனினும் இமாம் அஹ்மத் (றஹிமஹுல்லாஹ்) அவர்களின் மத்ஹபில் பகுத்தறிவுள்ள சிறு பிள்ளையின் வியாபாரம் ஆகுமாகும்.

- அல்லது ஒருவரால் ஒப்படைக்க முடியாத ஒன்றையும்,
- மேலும் எதில் பிரயோஜனமில்லையோ அதையும் (விற்றல்).
- மேலும் சிலரிடத்தில் (வியாபார ஒப்பந்தத்திற்கான) வார்த்தையின்றி செல்லுபடியாகாது. எனினும் மற்றும் சிலரிடத்தில் இருவரும் பொருந்திக் கொள்வது போதுமாகும்.

- மேலும் (தனது) உரிமையின் கீழ் நுழைந்துவிடாத ஒன்றை விற்றல். சுதந்திரமானவர் மற்றும் உரிமை யாளரில்லாத, பராமரிப்பற்ற பூமியைப் போன்று.
- மேலும் அறியப்படாததை விற்றல்,
- மேலும் இரத்தம் மற்றும் போதையை ஏற்படுத்தும் ஒவ்வொன்றையும் போன்ற அசுத்தத்தை விற்றல்,
- மேலும் தடைசெய்யப்பட்ட ஒன்றையும் (விற்றல்). (طنبور) "தும்பூரைப்" போன்று, அது வீணைக்கு ஒப்பாகும் வேடிக்கைக்குரிய ஒரு வாத்தியக் கருவியாகும்.
- மேலும் ஹலாலான சுத்தமான ஒரு பொருளை அதன் மூலம் பாவம் செய்வதை நாடுவார் என நீர் அறிந்த ஒருவருக்கு விற்பது ஹறாமாகும். திராட்சையை சாராயத்துக்காக நாடும் ஒருவருக்கு (விற்பதை)ப் போன்று. மேலும் ஆயுதத்தை மக்களின் மீது அடந்தேறக்கூடியவருக்கு (விற்பதை)ப் போன்று.
- மேலும் போதையை ஏற்படுத்தும் பொருட்களை விற்றல்.
- மேலும் குறையுள்ள பொருளை அதன் குறையை வெளிப்படுத்தாமல் விற்றல்.

## (மையித் விட்டுச்சென்ற பொருட்களைப் பங்குவைப்பதற்கு முன்னால் செய்யப்படுபவை பற்றிய) பயன்மிக்க (தகவல்) ஒன்று

மரணித்தவரின் கடன்கள் மற்றும் "வஸிய்யத்"கள் நிறைவேற்றப்படாமலும், ஹஜ், உம்றஹ் அவர் மீது கடமையாக இருந்தால் அவ்விரண்டுடைய கூலி வெளியாக்கப்படாமலுமிருக்கும் காலமெல்லாம் அவர் விட்டுச்சென்றதை பங்குவைப்பதும் மேலும் அதிலிருந்து

ஏதாவதொன்றை விற்பதும் செல்லுபடியாகமாட்டாது; அவற்றை நிறைவேற்றுவதற்கு ஏதாவதொன்று விற்கப் பட்டாலே அன்றி. எனவே மரணித்தவர் விட்டுச்சென்றது அதனை அடகுவைக்கப்பட்டதைப் போன்றாகும். மேலும் ஒரு (دانق) "தானிக்"கை எடுத்தாயினும் குற்றம் புரிந்த அடிமையைப் போன்றுமாகும். அவருடைய பொறுப்பி லிருப்பதை நிறைவேற்றும் வரை அல்லது அவரை விற்பதற்கு நஷ்டமடைந்தவர் அனுமதிக்கும் வரை அவரை விற்பது செல்லுபடியாகமாட்டாது.

- மேலும் விலை முடிவானதன் பின்னால் வாடிக்கை யாளர் அல்லது வியாபாரியின் ஆசையை போக்குவது - அவருக்கு எதிராக விற்பதற்கோ அல்லது அவரிடமிருந்து வாங்குவதற்கோ - ஹறாமாகும். மேலும் (வியாபார) ஒப்பந்தத்திற்குப் பின்னால் இஷ்டத்தினுடைய காலத்தில் (இவ்வாறு செய்வது ஹறாத்தில்) கடினமானதாகும்.
- மேலும் விலையுயர்வு மற்றும் தேவையினுடைய காலத்தில் உணவை தடுத்துவைத்து, மிக உயர்ந்த விலைக்கு விற்பதற்காக அதனை வாங்குவதும்,
- மேலும் பிறரை ஏமாற்றுவதற்காக பொருளின் விலையை அதிகரிப்பதும்,
- மேலும் ஓர் அடிமைப் பெண்ணையும், அவளின் குழந்தையையும் (அப்பிள்ளைப்) பகுத்தறிவதற்கு முன்னால் பிரிப்பதும்,
- மேலும் அளவை நிறுவை, (நீட்டல்) அளவு மற்றும் எண்ணிக்கையில் மோசடி செய்வதும் அல்லது ஏமாற்றுவதும் அல்லது பொய் சொல்வதும் (ஹறாமாகும்).

- மேலும் ஒருவர் பஞ்சை அல்லது பொருற்களில் அது அல்லாததை விற்று, வாங்குபவருக்கு அதற்கு மேலாக சில திர்ஹம்களைக் கடனாகக் கொடுத்து, அக்கடனுக்காக வேண்டி அப்பொரு ளின் விலையை அதிகரிப்பதும் (ஹறாமாகும்).
- மேலும் ஒரு நெசவாளி அல்லது கூலிக்காரர்களில் அவர் அல்லாதவருக்கு கடன் கொடுத்து, அக்கடனுக்காக வேண்டி நடப்பு ஊதியத்தை விட குறைந்ததற்குப் பகரமாக அவரிடம் வேலை வாங்குவதும் (ஹறாமாகும்); அதனை நிபந்தனை யிட்டிருந்தால். அதற்கு (الربطة) “அர்றப்தா” என (அறபியில்) பெயர் சொல்வார்கள்.
- அல்லது விவசாயிகளுக்கு அறுவடையின் நேரம் வரைக்கும் கடன் கொடுத்து, அவர்களின் உணவை விலையை விட சற்று குறைவானதற்கு பகரமாக அவருக்கு அவர்கள் விற்கவேண்டுமென நிபந்தனையிடுவதும் (ஹறாமாகும்). அதற்கு (المقضي) “அல்மக்ழீ” என (அறபியில்) பெயர் சொல்வார்கள்.

இவ்வாறுதான் இக்காலத்துடையோரின் கொடுக்கல் வாங்கலில் பெரும்பாலானவை, அவற்றில் அதிகமானவை மார்க்கச் சட்டத்திற்கு அப்பால் இருக்கின்றன. எனவே அழ்ழாஹு ஸுப்ஹானஹுவின் பொருத்தத்தையும், தனது மார்க்க மற்றும் உலக ஈடேற்றத்தையும் நாடக்கூடியவர் மீது ஹலாலானவற்றை யும் ஹறாமானவற்றையும் தனது மார்க்கத்தில் பற்றுள்ள, பிறர் நலம் நாடும் பேணுதல்மிக்க ஓர் ஆலிமிடமிருந்து கற்றுக்கொள்வது அவசியமாகும். ஏனெனில் ஹலாலைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

## (செலவினத்தின் சட்டங்கள் பற்றிய) பாடம்

வசதியுள்ளவர் மீது தனது வசதியற்ற அடிப்படைகளான ஏழைத் தந்தையர்கள் மற்றும் தாய்மார்களுக்கு - அவர்கள் சம்பாதிக்க சக்திபெற்றிருந்த போதிலும் - செலவளிப்பதும் மேலும் தனது கிளைகளான குழந்தைகள் மற்றும் குழந்தைகளின் குழந்தைகளுக்கு அவர்கள் வசதியற்று, சிறுபிரயாத்தின் காரணமாக அல்லது சப்பானி போன்ற சம்பாத்தியத்தை தடுக்கும் நோய்க்காக வேண்டி அவர்களுக்கு சம்பாதிக்க இயலாவிட்டால் செலவளிப்பதும் கடமையாகும்.

மேலும் மனைவிக்கு செலவு செய்வதும் மற்றும் அவளுடைய “மஹரு”ம் கணவன் மீதும் கடமையாகும். மேலும் அவளினால் ஏற்பட்ட காரணமின்றி அவ்விருவருக்கும் மத்தியில் பிரிவு ஏற்படுமானால் அவளுக்கு (متعة) “முத்அஹ்”[25] கொடுப்பது அவர் மீது கடமையாகும்.

மேலும் அடிமைகள் மற்றும் மிருகங்களின் உரிமையாளரின் மீது அவர்களுக்கு செலவு செய்வதும், வேலையில் அவர்களுக்கு முடியாததை அவர்களுக்குப் பணிக்காமலிருப்பதும், எந்த உரிமையுமின்றி அவர்களுக்கு அடிக்காமலிருப்பதும் அவசியமாகும்.

மேலும் மனைவியின் மீது - தனது ஆத்மாவில் ஆகாதவற்றிலே தவிர - அவருக்கு வழிப்படுவதும், அவரின் அனுமதியின்றி நபில் நோன்பு நோற்காமலிருப்பதும், அவரின் வீட்டிலிருந்து வெளியாகமலிருப்பதும் கடமையாகும்.

---

(25). கணவனால் தலாக் சொல்லப்பட்ட மனைவிக்குக் கொடுக்கப்படவேண்டிய இழப்பீடு.

# உள்ளத்தின் கடமைகளும் உறுப்புக்களின் பாவங்களும் மற்றும் “தௌபஹ்”வும்

# உள்ளம் சார்ந்த கடமைகள்
# (உள்ளம் சார்ந்த கடமைகளை விளக்கும்) பாடம்

உள்ளம் சார்ந்த கடமைகளில் நின்றுமுள்ளதுதான்:

- அழ்ழாஹ்வையும் இன்னும் அழ்ழாஹ்வைத் தொட்டு வந்தவற்றையும் ஈமான் கொள்ளல்.
- அழ்ழாஹ்வின் ரஸூலையும் இன்னும் அழ்ழாஹ்வின் ரஸூல் ﷺ அவர்களைத் தொட்டு வந்தவற்றையும் ஈமான் கொள்ளல்.
- மனத்தூய்மை. அது அழ்ழாஹ்விற்காக மாத்திரம் வழிபாட்டைச் செய்வதாகும்.
- பாவங்களுக்காக வருந்துதல்.
- அழ்ழாஹ்விடம் பொறுப்புச் சாட்டுதல்.
- அழ்ழாஹ்வை (தொடர்ச்சியாகப் பயந்து உள்ளத் தினால் مراقبة) ‘‘முறாகபஹ்’’ செய்தல்.
- அழ்ழாஹ்விற்கு கட்டுப்பட்டு, அவனை ஆட்சேபிப்பதை விடுவது எனும் அர்த்தத்தில் அவனைத் தொட்டும் பொருந்திக் கொள்ளுதல்.
- அழ்ழாஹ்வின் அடையாளச் சின்னங்களை கண்ணியப்படுத்துதல்.
- அழ்ழாஹ்வின் அருட்கொடைகளுக்காக அவற்றை பாவத்தில் பயன்படுத்தாமல் இருப்பது எனும் அர்த்தத்தில் நன்றி செலுத்துதல்.
- அழ்ழாஹ் கடமையாக்கியவற்றை நிறைவேற்று வதன் மீது பொறுமையாக இருத்தல் மேலும் அழ்ழாஹு தஆலா ஹறாமாக்கியவற்றை விட்டும் இன்னும் அழ்ழாஹ் உன்னை சோதித்தவற்றின் மீதும் பொறுமையாக இருத்தல்.

- ஷைத்தானை வெறுத்தல்.
- பாவங்களை வெறுத்தல்.
- அழ்ழாஹ்வை நேசித்தல்.
- அவனது கலாமையும், அவனது தூதரையும் மற்றும் ஸஹாபாக்களையும், (முஹம்மத் ﷺ அவர்களின்) குடும்பத்தாரையும் இன்னும் ஸாலிஹூன்களையும் நேசித்தல்.

# உறுப்புகளின் பாவங்கள்

## (உள்ளத்தின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்) பாடம்

உள்ளத்தின் பாவங்களில் நின்றுமுள்ளதுதான்:

- நல்லமல்களை (பிறருக்குக்) காண்பித்தல். அது மக்களுக்காக வேண்டி அதாவது அவர்கள் அவரை புகழ்வதற்காக வேண்டி செய்வதாகும். அது அவற்றின் கூலியை அழித்துவிடும். மேலும் அது பெரும் பாவங்களில் நின்றுமுள்ளதாகும்.
- அழ்ழாஹ்வை வழிபடுவது கொண்டு தற்பெருமை கொள்ளுதல். அது இபாதத்தை (தனது) நப்ஸிலிருந்து வெளிப்பட்டதாகவும், (அழ்ழாஹ் வின்) உபகாரத்தை விட்டும் மறைந்ததாகவும் காண்பதாகும்.
- அழ்ழாஹ்வில் சந்தேகம்.
- அழ்ழாஹ்வின் தண்டனையிலிருந்து அச்சமற்றிருத்தல்.
- அழ்ழாஹ்வின் அருளை விட்டும் நிராசை.
- அவனின் அடியார்கள் மீது பெருமை கொள்ளல். அது சத்தியத்தைக் கூறியவரின் மீது அதனை மறுப்பதும் மற்றும் மனிதர்களை அற்பமாகக் கருதுவதுமாகும்.
- வஞ்சகம். அது (உள்ளத்தில்) விரோதத்தை மறைத்து, அது தூண்டுகின்ற விடயத்தை வெறுக்காமல் செய்வதாகும்.
- பொறாமை. அது ஒரு முஸ்லிமிற்குரிய அருட் கொடையை வெறுப்பதும் மற்றும் அதனை சுமையாகக் கருதுவதுமாகும். அதனை

வெறுக்காமல் அது தூண்டுகின்ற விடயத்தை செய்தால்.

- தர்மத்தை சொல்லிக்காட்டுதல்[26]. அது அதன் கூலியை அழித்துவிடும்.
- பாவத்தை தொடராகச் செய்தல்[27].
- அழ்ழாஹ்வைப் பற்றியும் அழ்ழாஹ்வின் அடியார்கள் பற்றியும் தவறான எண்ணம் கொள்ளல்.
- (قدر) "கதரை" (ஏற்பாட்டை)ப் பொய்ப்பித்தல்.
- தன்னிடம் அல்லது பிறரிடமுள்ள பாவத்தைக் கொண்டு சந்தோஷமடைதல்.
- மோசடி. அது ஒரு காபிருக்காயினும் சரியே! அவனுக்கு அபயமளித்து, பின்பு அவனைக் கொலை செய்வதைப் போன்றாகும்.
- சூழ்ச்சி.
- ஸஹாபாக்கள் இன்னும் (முஹம்மத் ﷺ அவர்களின்) குடும்பத்தினர் மற்றும் ஸாலிஹூன்களைக் கோபித்தல்.
- அழ்ழாஹ் கடமையாக்கியவற்றில் கஞ்சத்தனமும், கடும் கஞ்சத்தனமும்.
- பேராசை.
- அழ்ழாஹ் கண்ணியப்படுத்தியவற்றை கேவலமாகக் கருதுதல்.

---

(26). சொல்லிக்காட்டுவது நாவின் பாவத்துடன் தொடர்புடையதாக இருந்தபோதிலும் தர்மம் பெற்றவரை நோவினை செய்வதை நாடுவதே இதற்கு அடிப்படையாக இருப்பதால் இதனை உள்ளத்தின் பாவங்களில் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது.

(27). பாவத்தை தொடராகச் செய்வது உள்ளத்தின் பாவங்களில் ஒன்றாகக் கணிக்கப்படக் காரணம் அதில் தொடர்படியாக இருப்பதை உள்ளம் நாடுவதனாலாகும்.

- வழிபாடு அல்லது பாவம் அல்லது குர்ஆன் அல்லது அறிவு அல்லது சுவர்க்கம் அல்லது நரக வேதனையிலிருந்தும் அழ்ழாஹ் வலுப்பமாக் கியவற்றை சிறுமைப்படுத்தல்.

## (வயிற்றின் பாவங்களை தெளிவுபடுத்தும்) பாடம்

வயிற்றின் பாவங்களில் நின்றுமுள்ளதுதான்:

- வட்டி, வரி, அபகரித்தது, திருடியது மற்றும் மார்க்கம் ஹறாமாக்கிய கொடுக்கல் வாங்கலின் மூலம் எடுக்கப்பட்ட அனைத்தையும் சாப்பிடுதல்.
- மது அருந்துதல். அதனை அருந்தியவருக்குரிய தண்டனை: சுதந்திரவாதிக்கு நாற்பது கசையடிகளும், அடிமைக்கு அதன் அரைவாசியுமாகும். மேலும் எச்சரிக்கைக்காக வேண்டி (அதைவிட) அதிகரிப்பதும் இமாமுக்கு உண்டு.
- அவற்றில் நின்றுமுள்ளதுதான்: போதையை ஏற்படுத்தக்கூடிய அனைத்தையும் மேலும் நஜிஸான மற்றும் அருவருப்பான அனைத்தையும் சாப்பிடுதல்.
- அநாதையின் சொத்தையும் அல்லது வக்பு செய்தவர் நிபந்தனையிட்டதற்கு மாற்றமாக வக்பு களையும் இன்னும் மனவிருப்பமின்றி வெட்கப்படும் அமைப்பில் எடுக்கப்பட்டதையும் சாப்பிடுதல்.

## (கண்களின் பாவங்களை தெளிவுபடுத்தும்) பாடம்

கண்களின் பாவங்களில் நின்றுமுள்ளதுதான்:

- அஜ்னபிய்யத்தான பெண்களை (அவர்களின்) முகத்தையும், இரு மணிக்கட்டுகள் வரையும் இச்சையுடனும் மற்றும் அவையல்லாததை பொதுவாகவும் பார்த்தல். மேலும் அவர்கள் அவர்களை (அதாவது ஆண்களை)ப் பார்ப்பதும் அவ்வாறே. அது தொப்புள் மற்றும் முட்டங் கால்களுக்கு மத்தியில் உள்ளவற்றின் பால் இருந்தால்.
- ‘‘அவ்ரத்’’களைப் பார்த்தல்.

ஆண் மற்றும் பெண்ணின் மீது தனிமையில் தேவையின்றி அவ்றத்தை திறப்பது ஹறாமாகும். மேலும் மஹ்றமானவருடன் அல்லது ஒரே பாலைச் சேர்ந்தவருடன் தொப்புள் மற்றும் முட்டங்காலுக்கு மத்தியிலுள்ளதை தவிர்ந்ததைப் பார்ப்பது இச்சையின்றி இருந்தால் ஹலாலாகும்.

- ஒரு முஸ்லிமை அற்பமாகப் பார்ப்பதும், பிறர் வீட்டிற்குள் அவர் அனுமதியின்றிப் பார்ப்பதும் ஹறாமாகும். அல்லது அவர் மறைத்து வைத்த ஒரு பொருளும் (அதாவது அதனைப் பார்ப்பதும்) அவ்வாறே.

## (நாவின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்) பாடம்

நாவின் பாவங்களில் நின்றுமுள்ளதுதான்:

- புறம். அது முஸ்லிமான உன்னுடைய சகோதரரிடம் இருக்கும், அவர் வெறுக்கும் விடயமொன்றை அவருக்குப் பின்னால் குறிப்பிடுவதாகும்.
- கோள். அது குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகப் பேச்சை (இன்னொருவருக்கு)த் திருப்புவதாகும்.
- பேச்சை (இன்னொருவருக்கு)த் திருப்பாமல் சண்டை மூட்டுதல். அது கால் நடைகளுக்கு மத்தியில் இருந்த போதிலும் சரியே.
- பொய். அது நிகழ்வுக்கு மாற்றமாக அறிவிப்பதாகும்.
- பொய்ச் சத்தியம்.
- இட்டுக்கட்டுக்குரிய வார்த்தைகள். அவை அதிகமானவையாகும். அவற்றின் சுருக்கம்: ஒரு மனிதனையோ அல்லது அவரின் உறவில் ஒருவரையோ விபச்சாரத்துடன் இணைக்கும் ஒவ்வொரு வார்த்தையுமாகும். எனவே அவை தெளிவாக (இருந்தால்) பொதுவாகவோ அல்லது மறைமுகமாக (இருந்தால்) நாட்டத்துடனோ யாரின் பக்கம் இணைக்கப்பட்டதோ அவரை இட்டுக்கட்டுவதாகும்.

  மேலும் இட்டுக்கட்டிய சுதந்திரவாதிக்கு எண்பது கசையடிகளும், அடிமைக்கு அதில் அரைவாசியும் தண்டனையாக கொடுக்கப்படும்.

மேலும் அவற்றில் நின்றுமுள்ளதுதான்:

- ஸஹாபாக்களை ஏசுதல் மற்றும் பொய்ச் சாட்சியம்.
- செல்வந்தர் பிற்போடுதல். அதாவது முடியுமான வசதியிருந்தும் கடனைக் கொடுப்பதை பிற்படுத்து வதாகும்.
- ஒரு முஸ்லிமை ஏசுதல், சபித்தல், பரிகசித்தல் மற்றும் அவரை நோவினைப்படுத்தும் ஒவ்வொரு வார்த்தையும்.
- அழ்ழாஹ் மற்றும் அவனது தூதர் மீதான பொய்.
- பொய்யான வாதம்.
- (بدعة) “பித்அத்”தான “தலாக்”. அது மாதவிடாயின் நிலையில் அல்லது உடலுறவு கொண்ட சுத்த (கால)த்தில் நிகழ்ந்ததாகும்.
- (الظهار) “அழ்ழிஹார்”. அது தனது மனைவிக்கு “நீ என் மீது எனது தாயின் முதுகைப்போன்று” - அதாவது நான் உன்னுடன் உடலுறவு கொள்ளமாட்டேன் - எனக் கூறுவதாகும். மேலும் அதற்குப் பின் அவர் உடனடியாகத் “தலாக்” சொல்லவில்லையானால் அதில் குற்றப்பரிகாரம் உள்ளது. அது ஈடேற்றமான, மு.ஃ.மினான, அடிமையை உரிமையிடுவதாகும். அதற்கு இயலாவிட்டால் அவர் தொடர்ச்சியாக இரு மாதங்கள் நோன்பு நோற்பார். அதற்கும் இயலாவிட்டால் அறுபது ஏழைகளுக்கு அறுபது (مد) “முத்து” உணவளிப்பார்.

மேலும் அவற்றில் நின்றுமுள்ளதுதான்:

- குர்ஆனில் அர்த்தத்தை மாற்றிவிடக்கூடிய பிழை விடுதல் அல்லது (சொல்லின்) குறியீட்டில் பிழை

விடுதல்; அது அர்த்தத்தை மாற்றிவிடா விட்டாலும் சரியே.

- பணத்தின் மூலமோ அல்லது தொழிலின் மூலமோ வசதிபெற்றவர் யாசித்தல்.
- அனந்தரக்காரருக்கு (அனந்தரத்தை)த் தடுக்கும் நோக்கில் நேர்ச்சை.
- பிறருக்குத் தெரியாத (தன்மீதுள்ள) கடனில் அல்லது (தன்னிடமுள்ள பிறரின்) பொருளில் ‘‘வஸிய்யத்’’தை விடுதல்.
- தனது தந்தையல்லாதவரின் பக்கமோ அல்லது தனது எஜமான்கள் அல்லாதோர் பக்கமோ இணைந்து கொள்ளல்.
- தனது சகோதரரின் திருமணப் பேச்சிற்கு எதிராகத் திருமணம் பேசுதல்.
- அறிவில்லாமல் தீர்ப்பு வழங்குதல்.
- தீங்கேற்படுத்தும் ஒரு கல்வியை எவ்வித மார்க்கக் காரணமுமின்றி கற்றல் மற்றும் கற்றுக் கொடுத்தல்.
- அல்லாஹ்வின் தீர்ப்புக்கு மாற்றமாகத் தீர்ப்பளித்தல்.
- (மையித்துக்காகச்) சப்தமிட்டு அழுதல் மற்றும் ஒப்பாரி வைத்தல்.
- ஹறாத்தைத் தூண்டும் அல்லது கடமையை விட்டும் சோர்வுபடுத்தும் ஒவ்வொரு வார்த்தையும்.
- மார்க்கத்தை அல்லது நபிமார்களில் ஒருவரை அல்லது மார்க்க அறிஞர்களை அல்லது குர்ஆனை அல்லது அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களில் ஒன்றைக் குறை கூறும் ஒவ்வொரு பேச்சும்.

மேலும் அவற்றில் நின்றுமுள்ளதுதான்:

- புல்லாங்குழல் ஊதுதல்.
- நல்லதை ஏவித் தீயதைத் தடுக்கும் விடயத்தில் எவ்விதத் தங்கடமுமின்றி மௌனம் சாதித்தல்.
- கட்டாய அறிவை (அதைத்) தேடுபவர் இருக்கும் போது மறைத்தல்.
- காற்று வெளியாகியதற்காக அல்லது ஒரு முஸ்லிமை அற்பமாகக் கருதிச் சிரித்தல்.
- சாட்சியத்தை மறைத்தல்.
- உன் மீது வாஜிபான ஸலாமிற்கு பதிலளிப்பதை விடுதல்.
- ஹஜ் மற்றும் உம்றஹ் செய்பவர் இச்சையுடனும் மேலும் பர்ளான நோன்பு நோற்றவர் விந்து வெளியாகுவதைப் பயந்தாலும் (முத்தமிடுவது ஹறாமாகும்). இன்னும் யாரை முத்தமிடுவது ஆகாதோ அவர்களை முத்தமிடுவதும் ஹறாமாகும்.

## (காதின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்) பாடம்

காதின் பாவங்களில் நின்றுமுள்ளதுதான்:

- ஒரு கூட்டம் அவரை விட்டும் மறைத்த பேச்சையும், புல்லாங்குழலையும், வீணைக்கு ஒப்பான கருவியாகிய (طنبور) “தும்பூரை”யும் மற்றும் ஹறாமாக்கப்பட்ட ஏனைய சப்தங் களையும் செவிமடுத்தல்.
- மேலும் புறம், கோள் மற்றும் அவை போன்றதை செவிமடுப்பதையும் போன்று. எனினும்

(அவற்றைக்) கேட்பது அவருள் வலுக்கட்டாயமாக நுழைந்து, அதனை அவர் வெறுத்ததற்கு மாற்றமாக. ஆனாலும் அவர் சக்தி பெற்றிருந்தால் (அதனைத்) தடுப்பது அவருக்கு அவசியமாகும்.

## (கரங்களின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்) பாடம்

கரங்களின் பாவங்களில் நின்றுமுள்ளதுதான்:

- அளவை, நிறுவை மற்றும் (நீட்டல்) அளவுகளில் குறைவு செய்தல்.
- களவு. ஒரு தீனாரின் நான்கில் ஒன்றுக்கு சமமானதை அதன் பாதுகாப்பிற்குரிய இடத்திலிருந்து களவெடுத்தால் அவரது வலது கையை, பிறகு (அதன்பால்) மீண்டால் இடது காலை, அதற்குப் பிறகு இடது கையை, அதற்குப் பிறகு வலது காலை வெட்டுவதன் மூலம் தண்டிக்கப்படுவார்.

மேலும் அவற்றில் நின்றுமுள்ளதுதான்:

- பகிரங்கமான கொள்ளையும், அபகரிப்பும், வரியும், (غنيمة) ‘‘கனீமத்’’தில் களவாடுவதுமாகும்.
- கொலை. அதில் பொதுவாகவே குற்றப்பரிகாரம் உள்ளது. அது ஈடேற்றமான, மு∴மினான, ஓர் அடிமையை உரிமையிடுவதாகும். அதற்கு இயலாவிடின் அவர் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் நோன்பு நோற்பார்.

வேண்டுமென்ற கொலையில் பலிக்குப்பலி உள்ளது. அனந்தரக்காரர் தெண்டப்பணத்திற்காக அல்லது இலவசமாக அவரை மன்னித்தாலே தவிர.

மேலும் தவறிலும் அதற்கு ஒப்பானதிலும் தெண்டம் உள்ளது. அது முஸ்லிமான சுதந்திர ஆணிலே நூறு ஒட்டகமும், முஸ்லிமான சுதந்திர பெண்ணிலே அதன் அரைவாசியுமாகும்.

மேலும் தெண்டத்தின் தன்மைகள் கொலையின் விதத்தின் பிரகாரம் வித்தியாசப்படும்.

மேலும் அவற்றில் நின்றுமுள்ளதுதான்:

- எவ்வித உரிமையுமின்றி அடித்தல்.
- லஞ்சம் எடுத்தல் மற்றும் கொடுத்தல்.
- விலங்கை எரித்தல். அது நோவினையளித்து அதைத் தடுப்பதற்குரிய வழியாக அது (அதாவது எரிப்பது) குறிப்பானாலே தவிர.
- விலங்கை (அதன் உறுப்புக்களைத் துண்டித்து) சித்திரவதை செய்தல்.
- (نرد) ‘‘நர்த்’’ விளையாடுதல்.
- சூது உள்ள அனைத்தும். அக்ரோட், (كعاب) ‘‘கிஆபி’’ன் மூலம் சிறுவர்கள் விளையாடுவது உட்பட.
- வீணை, (رباب) ‘‘றபாப்’’, புல்லாங்குழல், வயலின் போன்ற ஹறாமாக்கப்பட்ட வேடிக்கைக் கருவிகளின் மூலம் விளையாடுதல்.
- அஜ்னபிய்யத்தான ஒரு பெண்ணை எந்தத் திரையுமின்றியோ அல்லது அதனுடன் இச்சையுடனோ ஒரே பாலாருடன் அல்லது மஹ்ரமானவருடன் இருந்த போதிலும் வேண்டுமென்று தொடுதல்.

- உயிருள்ளதை உருவமைத்தல்.
- ஸகாத்தை அல்லது அதில் சிலதை (அது) கடமையாகி (கொடுக்க) முடியுமானதன் பின்னால் தடுத்தல். மேலும் (அதில்) செல்லுபடியாகாததை (ஸகாத்தாக) வெளியாக்குதல். அல்லது அதற்கு தகுதியற்றவருக்கு அதனை வழங்குதல்.
- கூலிக்காரருக்கு அவருடைய கூலியை(க் கொடுக்காது) தடுத்தல்.
- நிர்ப்பந்திக்கப்பட்டவருக்கு (அவரின் தேவையை) அடைக்கும் ஒன்றைத் தடுத்தலும் இன்னும் (நீரில்) மூழ்குபவரை பாதுகாக்காமல் இருத்தலும். அவ் விரண்டிலும் எவ்விதத் தங்கடமுமில்லாத நிலையில்.
- எவற்றை பேசுவது ஹறாமாகுமோ அவற்றை எழுதுதல்.
- மோசடி. அது நலவை நாடுவதற்கு மாற்றமான தாகும். அது செயல்களையும், சொற்களையும், நிலமைகளையும் பொதிந்து கொள்ளும்.

## (அபத்தின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்) பாடம்

அபத்தின் பாவங்களில் நின்றுமுள்ளதுதான்:

- விபச்சாரம்.
- (لواط) “லிவாத்”[28].

திருமணம் முடித்த சுதந்திர ஆணோ, பெண்ணோ (மேற்குறித்த இரு பாவ காரியங்களையும் செய்தால்) மரணிக்கும் வரை நடுத்தரமான கல்லால் எறிவதன் மூலமும் அவர் அல்லாத சுதந்திரவாதிக்கு நூறு கசையடிகள் மற்றும் ஒரு வருட நாடு கடத்தல் மூலமும் தண்டிக்கப்படுவார். ஆனால் அது அடிமைக்கு அரைவாசியாக்கப்படும்.

மேலும் அவற்றில் நின்றுமுள்ளதுதான்:

- கால்நடைகளுடன் புணர்தல். அவை அவருக்குச் சொந்தமானதாக இருந்தபோதிலும் சரியே.
- மனைவி மற்றும் அவருக்கு ஹலாலான அடிமை அல்லாதோரின் கையினால் இந்திரியத்தை வெளியாக்குதல்.
- மாதவிடாய் அல்லது பிள்ளைப் பேறு இரத்தத்தின் காலத்தில் அல்லது அவ்விரண்டும் துண்டிப்பாகி குளிப்பதற்கு முன்னர் அல்லது குளிப்பவளின் நிய்யத் இன்றி குளித்ததன் பின்னர் அல்லது அதன் நிபந்தனைகளில் ஏதாவதொரு நிபந்தனை இழக்கப்பட்டிருப்பதுடன் உடலுறவு கொள்ளல்.

(28). இதன் விபரம் 34ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

- தன்னைப் பார்ப்பது ஹறாமானவரிடத்தில் அல்லது தனிமையில் எவ்வித நோக்கமுமின்றி (அவ்ரத்தைத்) திறந்து இருத்தல்.
- மலம், சலம் கழிக்கையில் எவ்வித திரையுமின்றியோ அல்லது அத்திரை அவரை விட்டு மூன்று முழங்களை விட அதிகம் தூரமாக உள்ளபோதோ அல்லது அது ஒரு முழத்தின் மூன்றில் இரண்டை விடக் குறைவாக இருக்கும் போதோ ‘‘கிப்லஹ்’’வை முன்னோக்குதல் அல்லது பின்னோக்குதல். எனினும் அதற்காகத் தயாரிக்கப்பட்டதிலே தவிர. அதாவது தேவையை நிறைவேற்றுவதற்குத் தயாரிக்கப்பட்ட இடத்திலே தவிர.
- கப்ரின் மீது மலம் கழித்தல்.
- - பாத்திரத்திலாகினும் - பள்ளிவாயலிலும் மற்றும் கண்ணியப்படுத்தப்பட்டதன் மீதும் சிறுநீர் கழித்தல்.
- பருவமடைந்தவர் (ختنة) ‘‘கத்னஹ்’’ செய்வதை விடுதல். எனினும் அது (இமாம்) மாலிக் (றஹிமஹுல்லாஹ்) அவர்களிடத்தில் ஆகுமாகும்.

## (காலின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்) பாடம்

காலின் பாவங்களில் நின்றுமுள்ளதுதான்:

- பாவத்திற்காக நடந்து செல்லல். ஒரு முஸ்லிமை மூட்டிக்கொடுப்பதற்கோ அல்லது அவரை எவ்வித உரிமையுமின்றி கொலை செய்வதற்கோ நடந்து செல்வதைப் போன்று.

- அடிமையும், மனைவியும் விரண்டோடுதல். மற்றும் பலிக்குப்பலி அல்லது கடன் அல்லது செலவீனம் அல்லது பெற்றோருக்கு உபகாரம் செய்தல் அல்லது பிள்ளை வளர்ப்பு ஆகிய கடமைகள் எவர் மீது உள்ளதோ அவரும் அவற்றை விட்டும் (விரண்டோடுதல்).
- நடையில் பெருமை.
- இடைவெளிக்காகவேயன்றி பிடரிகளைக் கடந்து செல்லல்.
- (سترة) ‘‘சுத்ரா’’வின் நிபந்தனைகள் பரிபூரண மடைந்திருக்கும் போது தொழக்கூடியவருக்கு முன்னால் (குறுக்கே) நடந்து செல்லல்.
- குர்ஆன் உயரத்திலில்லாமலிருக்கும் போது அதன் பால் காலை நீட்டுதல்.
- ஹறாத்தின் பக்கமுள்ள ஒவ்வொரு நடையும் மற்றும் கடமையை விட்டுமுள்ள ஒவ்வொரு பின்வாங்குதலும்.

## (உடலின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்) பாடம்

உடலின் பாவங்களில் நின்றுமுள்ளதுதான்:

- பெற்றோர்களை நோவினை செய்தல்.
- யுத்தத்தில் இருந்து விரண்டோடுதல். அது ஒருவர் யுத்த களத்திற்கு சமூகமளித்ததன் பின்னர் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்பவர்களுக்கு மத்தியிலிருந்து விரண்டோடுவதாகும்.
- உறவைத் துண்டித்தல்.

- அயலவரை வெளிப்படையாக நோவினை செய்தல். அவர் பாதுகாப்பு வழங்கப்பட்ட காபிராக இருந்த போதிலும் சரியே.
- முடிக்குக் கறுப்பினால் நிறம் பூசுதல்.
- ஆடை மற்றும் அது அல்லாதவற்றில் இருபாலாரில் ஒன்றுக்கு குறிப்பானதன் மூலம் ஆண்கள் பெண்களுக்கும் மேலும் அதற்கு மாற்றமாகவும் ஒப்பாகுதல்.
- பெருமைக்காக ஆடையை தொங்கவிடுதல். அதாவது பெருமைக்காகக் கரண்டைக்காலைக் காண அதனை இறக்குதல்.
- எவ்வித தேவையுமின்றி ஆண் கைகளிலும், கால்களிலும் மருதாணியிடல்.
- பர்ழை எவ்விதத் தங்கடமுமின்றித் துண்டித்தல்.
- சுன்னத்தான ஹஜ் மற்றும் உம்றாவைத் துண்டித்தல்.
- ஒரு மு.்.மினை பரிகசிக்கும் விதத்தில் அவரைப் போல் நடித்தல்.
- மனிதர்களின் குறைகளைத் துருவி ஆராய்தல்.
- பச்சை குத்துதல்.
- மார்க்கத் தங்கடத்திற்காகவேயன்றி மூன்று நாட்களுக்கு மேல் ஒரு முஸ்லிமைப் புறக்கணித்தல்.
- (بدعة) ''பித்அத்''காரனுடனோ அல்லது ஒரு பாவியுடனோ அவனுடைய பாவத்தில் அவனை மகிழ்விக்கும் விதத்தில் சேர்ந்திருத்தல்.
- பருவமடைந்த ஆண் வெள்ளி மோதிரம் தவிர்ந்த தங்கம், வெள்ளி, பட்டு அல்லது அதன் நிறை அதிகமாகவுள்ளதை அணிதல்.

- (ஒருவர்) அஜ்னபிய்யத்தான பெண்ணுடன், ஆண் அல்லது பெண்ணிலிருந்து வெட்கிக்கப்படும் மூன்றாமவர் அவ்விருவரையும் பார்க்காத விதத்தில் தனித்திருத்தல்.
- ஒரு பெண் மஹ்ரம் போன்றவரின்றி பிரயாணம் செய்தல்.
- சுதந்திரவாதியை வற்புறுத்தி வேலைக்கு அமர்த்துதல்.
- இறைநேசரைப் பகைத்தல்.
- பாவத்திற்கு உதவுதல்.
- போலியானதைப் பிரபல்யப்படுத்தல்.
- தங்கம் வெள்ளிப் பாத்திரங்களைப் பாவித்தல் மற்றும் அவற்றைச் சேமித்தல்.
- ஒரு பர்ழை விடுதல் அல்லது ஒரு ருகுனை அல்லது ஒரு நிபந்தனையை விடுவதுடனோ அல்லது அதை முறிக்கக்கூடிய செயலுடனோ அதனைச் செய்தல்.
- "ஜும்அஹ்" அவர் மீது கடமையாக இருக்கும் போது அதனை விட்டுவிடுதல். அவர் ளுஹ்ரைத் தொழுத போதிலும் சரியே.
- கிராம வாசிகள் போன்றோர் கடமையாக்கப்பட்ட தொழுகைகளின் ஜமாஅத்களை விட்டுவிடுதல்.
- எவ்விதத் தங்கடமுமின்றி பர்ளை அதன் நேரத்தை விட்டும் பிற்படுத்தல்.
- விரைவான பாரமானதின் மூலம் அதாவது கல் போன்ற பாரத்தின் மூலம் (விரைவாகக்) கொன்றுவிடக்கூடிய பொருளினால் வேட்டைப் பிராணிக்கு எறிதல்.
- ஒரு பிராணியை இலக்காக எடுத்துக்கொள்ளல்.

- (عدة) “இத்தஹ்” இருக்கக்கூடிய பெண் எவ்விதத் தங்கடமுமின்றி வசிப்பிடத்தைப் பற்றிப்பிடிக் காமலிருத்தல். (அதாவது வீட்டை விட்டு வெளியேறுதல்).
- கணவனுக்காகத் துக்கம் அனுஷ்டிப்பதை விடுதல்.
- பள்ளிவாயலை நஜிஸாக்குதல் மேலும் அதனை அசிங்கப்படுத்துதல். அது சுத்தமானதைக் கொண்டாகிலும் சரியே.
- சக்தி பெற்றதன் பின் மரணிக்கும் வரை ஹஜ் செய்வதில் பொடுபோக்குச் செய்தல்.
- வெளிரங்கத்தில் கடனை நிறைவேற்ற முடியாத ஒருவர், தனது இந் நிலையை அறியாத கடன் வழங்குபவரிடம் கடன் கேட்டல்.
- வசதியற்றவருக்குத் தவணை வழங்காதிருத்தல்.
- பாவத்தில் பணத்தைச் செலவளித்தல்.
- குர்ஆனையும், மார்க்க அறிவு ஒவ்வொன்றையும் இழிவுபடுத்துவதும் மற்றும் அதனைப் பகுத்தறியும் சிறுபிள்ளைக்கு இடம்பாடாக்கிக் கொடுப்பதும்.
- பூமியின் எல்லையை மாற்றுதல். அதாவது தனது உடந்தைக்கும் பிறரின் உடந்தைக்கும் மத்தியில் பிரிக்கக்கூடிய எல்லையை மாற்றுதல்.
- பாதையில் ஆகாததைச் செய்தல்.
- இரவலாகப் பெறப்பட்டதை அதற்கு அனுமதி யளிக்கப்படாததில் பாவித்தல் அல்லது அதற்கு அனுமதிவழங்கப்பட்ட காலத்தை விட அதிகரித்தல். அல்லது அதனைப் பிறருக்கு இரவலாகக் கொடுத்தல்.
- மேய்ச்சல் தளம் மற்றும் உரிமையாளரற்ற பூமிகளிலிருந்து விறகு பொறுக்குதல் இன்னும் சுரங்கத்திலிருந்து உப்பு, தங்கம், வெள்ளி மற்றும்

அவையல்லாதவை மேலும் எடுக்க எடுக்க ஊற்றெடுக்கும் இடத்திலிருந்து குடிப்பதற்காக வேண்டியுள்ள தண்ணீர் போன்ற ஆகுமாக் கப்பட்டதைத் தடுத்தல்.

- பொறுக்கிய பொருளை அதன் நிபந்தனைகளுடன் அறிவிக்க முன் பாவித்தல்.
- தங்கடமில்லாத போது தீயதை(த் தடுக்காது) பார்த்த வண்ணம் இருத்தல்.
- விருந்துகளில் சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொள்ளல். அது அனுமதியின்றி நுழைவதும் அல்லது வெட்கத்தினால் அவரை அவர்கள் நுழைவிப்பதுமாகும்.
- மனைவிகளுக்கு மத்தியில் செலவு செய்வதிலும், இராத்தரிப்பதிலும் சமநிலையற்றிருத்தல். ஆனால் உளரீதியான அன்பிலும், சாய்விலும் ஏற்றத்தாழ்வு காட்டுவது பாவமாகது.
- ஒரு பெண் வெளியாகிச் செல்லல்; அஜ்னபிய்யத்தான ஆண்களைக் கவரும் நோக்கில் அவர்களை அவள் கடந்து சென்றால்.
- சூனியம்.
- இமாமுக்கு வழிபடுவதை விட்டும் வெளியாகுதல்.

அலீ றழியல்லாஹுு அன்ஹுு அவர்களுக்கு எதிராக வெளியாகி அவர்களுடன் யுத்தம் செய்தவர் களைப் போன்று.

“அலீ றழியல்லாஹுு அன்ஹுு அவர்களுடன் போர் புரிந்த அனைவரும் கிளர்ச்சியாளர்களாவர்” என பைஹகீ (றஹிமஹுுழ்ழாஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் அவர்களுக்கு முன் (இமாம்) ஷாபிஈ (றஹிமஹுுழ்ழாஹ்)

அவர்களும் இவ்வாறே குறிப்பிட்டுள்ளார்கள்[29]. அவர்களில் சிறந்த ஸஹாபாக்கள் இருந்தபோதிலும் சரியே. ஏனெனில் இறைநேசரின் மீது பாவம் அசாத்தியமானதல்ல. அது பெரும்பாவமாக இருந்த போதிலும் சரியே.

- ஒரு அநாதையையோ அல்லது ஒரு பள்ளி வாயலையோ அல்லது “காழி”ப் பதவியையோ அல்லது அது போன்றதையோ அவ்வேலையை நிறைவேற்றமுடியாது என அறிந்திருந்தும் பொறுப் பேற்றல்.
- அநியாயக்காரனுக்கு அடைக்கலம் கொடுப்பதும் இன்னும் அவனிடமிருந்து உரிமையை எடுக்க நாடுபவரிடமிருந்து அவனைப் பாதுகாப்பதும்.
- முஸ்லிம்களைப் பயமுறுத்தல்.
- வழிப்பறிக் கொள்ளை. அவனுடைய குற்றத்தின் பிரகாரம் எச்சரிப்பதன் மூலமோ அல்லது அவன் கொலை செய்ய வில்லையானால் மாறுகை மாறுகால் வெட்டுவதன்[30] மூலமோ அல்லது கொலை செய்திருந்தால் கொன்று, சிலுவையில் அறைவதன் மூலமோ தண்டிக்கப்படுவான்.

மேலும் அவற்றில் நின்றுமுள்ளதுதான்:

- நேர்ச்சையை நிறைவேற்றாமலிருத்தல்.
- தொடர் நோன்பு. அது நோன்பை முறிக்கக்கூடிய எதையும் உட்கொள்ளாது இரண்டு நாட்கள் அல்லது அதை விட அதிகமாக நோன்பிருத் தலாகும்.

(29). “கிதாபுல் இ∴திகாத்” பக்: 248.

(30). முதன் முறையாக இருந்தால் வலது கையையும் இடது காலையும் வெட்டுவதன் மூலமும் மீண்டும் அதற்கு மீண்டால் இடது கையையும் வலது காலையும் வெட்டுவதன் மூலமும் தண்டிக்கப்படுவார்.

- மற்றவருடைய இடத்தை எடுத்தல் அல்லது நோவினையை ஏற்படுத்தும் நெருக்கடியை ஏற்படுத்தல் அல்லது மற்றவருடைய முறையை எடுத்தல்.

# (“தௌபஹ்”வின் சட்டங்களைத் தெளிவுபடுத்தும்) பாடம்

பாவங்களிலிருந்து உடனடியாக “தௌபஹ்”ச் செய்வது (மார்க்கக் கடமைகளைச் செய்யப்) பணிக்கப்பட்ட ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும். அது மனம் வருந்துதல் மேலும் (பாவத்தை விட்டு) விலகுதல் இன்னும் அதன் பால் மீள்வதில்லையென உறுதி கொள்வதுமாகும்.

மேலும் பாவம் பர்ளை விட்டதாக இருந்தால் அதனைக் “கழாஉ” செய்வார். அல்லது ஒரு மனிதனை துயர்ந்ததாக இருப்பின் அதனை நிறைவேற்றுவார் அல்லது அவரின் பொருத்தத்தை வேண்டுவார்.

## பொருளடக்கம்

இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹறரீ றஹிமஹுழ்ழாஹ் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்..........08

முன்னுரை..........22

கொள்கைக் கோட்பாட்டில் மிக அவசியமானவை..........25

(ردة) - ரித்தத்

(ரித்தத் எனும் மதம் மாறுதல் பற்றிய) பாடம்..........32

(மதம் மாறியவரின் சட்டங்கள் தொடர்பான) பாடம்..........42

(கடமைகளை நிறைவேற்றுவது மற்றும் விலக்கள்களை தவிர்ந்திருப்பது பற்றிய) பாடம்..........43

சுத்தமும் தொழுகையும்

(ஐவேளைத் தொழுகைகளின் நேரங்களும், அதனுடன் தொடர்பானவைகள் பற்றிய) பாடம்..........46

(தொழுகை தொடர்பாக சிறுவர்களின் பாதுகாவலர் மற்றும் அதிகாரமுடையோர் இன்னும் முஸ்லிம்கள் மீது கடமையானவை பற்றிய) பாடம்..........48

("வுழூஉ"வின் கடமைகளை விளக்கும்) பாடம்..........49

("வுழூஉ"வை முறிக்கும் காரியங்கள் பற்றிய) பாடம்..........50

(மல சலத்திலிருந்து சுத்தம் செய்வது பற்றிய) பாடம்..........50

(குளிப்பைக் கடமையாக்கக்கூடியவை மற்றும் அதன் கடமைகள் பற்றிய) பாடம்..........51

(சுத்தம் செல்லுபடியாவதற்கான நிபந்தனைகள் மற்றும் தயம்மத்தின் சட்டங்கள் பற்றிய) பாடம்..........52

(தொடக்குள்ளவர்களுக்கு ஹறாமாக்கப்படும் விடயங்கள் பற்றிய) பாடம்..........53

(நஜிஸை விட்டும் சுத்தமாகுதல் மற்றும் அதனை நீக்கும் முறை பற்றிய) பாடம்....................................................................54
(தொழுகையின் ஏனைய நிபந்தனைகள் பற்றிய) பாடம்.................55
(தொழுகையை முறிக்கும் விடயங்கள் பற்றிய) பாடம்...................56

(அழ்ழாஹ் விடத்தில் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய நிபந்தனைகள் பற்றிய) பாடம்..................57
(தொழுகையின் கடமைகள் பற்றிய) பாடம்.....................................58

(ஜமாஅத்துத் தொழுகை மற்றும் ஜும்ஆத் தொழுகை பற்றிய) பாடம்.........................................................................................62
(ஜும்அஹ் தொழுகை செல்லுபடியாவதற்குரிய) அதன் நிபந்தனைகள்.......................................................................................62
இரு குத்பாக்களினதும் கடமைகள்..................................................63
அவ்விரண்டினதும் நிபந்தனைகள்.....................................................64
(பின்பற்றித் தொழுவதன் நிபந்தனைகள் பற்றிய) பாடம்...............64

(மரணித்தவருக்கு செய்யவேண்டிய கடமைகள் பற்றிய) பாடம்.......................................................................................................67

ஸகாத்

(ஸகாதின் சட்டங்கள் பற்றிய)பாடம்..................................................70
(கால்நடைகளில் ஸகாத் கடமையாகுவதற்குரிய நிபந்தனைகள்)...........................................................................70
(பேரீத்தம்பழம், திராட்சை, தானியங்களில் ஸகாத் கடமையாவதற்குரிய நிபந்தனைகள்)..............................................71
(தங்கம், வெள்ளியில் ஸகாத் கடமையாவதற்குரிய நிபந்தனைகள்)...........................................................................72
(வியாபாரப் பொருட்களில் ஸகாத் கடமையாவதற்குரிய நிபந்தனைகள்)...........................................................................73
((زكاة الفطر) “ஸகாதுல் பித்ரி”ன் சட்டங்கள்)...........................................74

நோன்பு

(நோன்பின் சட்டங்கள் பற்றிய)பாடம்................................................76

### ஹஜ்

(ஹஜ் மற்றும் உம்றஹ்வுடைய சட்டங்கள் பற்றிய) பாடம்........78

### கொடுக்கல், வாங்கல்

(அதன் முக்கியத்துவம் மற்றும் சில சட்டங்கள் பற்றிய)பாடம்........83

### வட்டி

(வட்டியின் சட்டங்கள் பற்றிய) பாடம் ........86

(ஹறாமாக்கப்பட்ட சில வியாபாரங்கள் பற்றிய)பாடம்........87

(மையித் விட்டுச்சென்ற பொருட்களைப் பங்குவைப்பதற்கு முன்னால் செய்யப்படுபவை பற்றிய) பயன்மிக்க (தகவல்) ஒன்று........88

(செலவினத்தின் சட்டங்கள் பற்றிய)பாடம்........91

### உள்ளம் சார்ந்த கடமைகள்

(உள்ளம் சார்ந்த கடமைகளை விளக்கும்) பாடம்........93

### உறுப்புகளின் பாவங்கள்

(உள்ளத்தின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்)பாடம்........95
(வயிற்றின் பாவங்களை தெளிவுபடுத்தும்)பாடம்........97
(கண்களின் பாவங்களை தெளிவுபடுத்தும்)பாடம்........98
(நாவின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்)பாடம்........99
(காதின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்)பாடம்........102
(கரங்களின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்)பாடம்........103
(அபத்தின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்)பாடம்........106
(காலின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்)பாடம்........107
(உடலின் பாவங்களைத் தெளிவுபடுத்தும்)பாடம்........108

("தௌபஹ்"வின் சட்டங்களைத் தெளிவுபடுத்தும்)பாடம்........115